ஜனவரி 14, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## கூட்டணியும் காங்கிரஸும் புலிகளின் நிலைப்பாடு சரி என்று ஒப்புதல்



## பிரபாகரன் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

## பேச்சுவார்த்தை என்று அரசு கபட நாடகம்





# அமைச்சர் டக்ளஸின் அறிவிப்பு புஸ்வாணம்!

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும் என்று சமீபத்தில் ஓர் அறிக்கை மூலம் அறிவித்தார் வடக்கு புனர்வாழ்வு இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. ஆனால் அவருடைய அந்த அறிவிப்பு ''புஸ்வாணம்'' ஆகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தக் கல்லூரியில் இவ்வருடத்திற்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் விண்ணப்பங்கள் கோரியிருக்கிறது.

இதிலிருந்தே இணைப்பு இந்த வருடமும் இல்லை என்பது புலனாகிறது என விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இசை நடனக் கல்லூரி தனியாக இருக்கும் போது ஓரளவு குறைந்த கல்வித்தகமையோடு அதில் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் இசை நடனக் கல்லூரி பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்தால் அதில் சேர்வதற்குக் கூடுதலான கல்வித்தகமை தேவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் இராமநாதன் இசை நடனக் கல்லூரி யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு இசை நடனக்கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக் கழத்துடன் இணைக்கும் விஷயம் நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருந்து வருகிறது. அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு நல்ல முடிவு காணப் போகிறார் என்று எண்ணி மகிழ்ந்தவர்கள் எல்லோரும் இப்போது படுஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பு இசை நடனக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இக் கல்லூரியைக் கிழக்குப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கக் கோரி வகுப்புப் பகிஷ்கரிப்பு உட்படப் போராட்டங்களைக் கடந்த வருடம் தொடர்ச்சியாக நடத்தி இருந்தனர்.

பல அரசியல் வாதிகள் இணைப்பு முயற்சியில் ஈடுபட்டு நல்ல முடிவு காணப் போவதாக உறுதி அளித்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரும் இசை நடனக் கல்லூரியை தேர்தல் பிரசாரத்தில் முக்கிய ஆயுதங்களாகப் பயன்படுத்தினர்.



வென்று வந்தவர்கள் தாம் முன்பு சொன்னதை எல்லாம் மென்று விழுங்கிவிட்டுச் சும்மா இருக்கிறார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிக்கை விட்டதோடு சரி.

இசை நடனக் கல்லூரியின் அதிபர் திருமதி பாலாம்பிகை இராஜேஸ்வரனிடம் இது பற்றிக் கேட்ட போது, ''பெயரளவில்தான் இணைப்பு, ஆனால் செயலில் இது வரை எந்த நடவடிக்கையும் இல்லை'' என்று கவலை தெரிவித்தார்.

இக்கல்லூரியில் பயிற்றப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் எதுவித தொழிலும் இன்றி வீட்டில் முடங்கிக்கிடக்கின்றனர்.

மட்டக்களப்பு மாநகரசபையில் சிற்றூழியராகவும் இக்கல்லூரியில் இசைப்பயிற்சி பெற்ற ஒருவர் கடமை புரிகின்றார்.

மாநகர சபையில் சிற்றூழியராக பணிபுரியத்தான் மட்டக்களப்பு இசைநடனக்கல்லூரிச் சான்றிதழ் பயன்பட்டுள்ளது.

கடந்த 15 வருடங்களில் இக்கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சுமார் இருபது பேர் மட்டுமே இசைநடனப் பயிற்சி சான்றிதழைப் பயன்படுத்தி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

எஞ்சிய பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இசைநடனக் கல்லூரியின் சான்றிதழால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லையே என்ற விரக்தியில் சான்றிதழ்களை இறப்பில் செருகி வைத்துள்ளனர். சான்றிதழ்கள் செய்த புண்ணியம் இறப்பில் தூங்குகின்றன. இன்னும் நெருப்பில் விழவில்லை.

- நேரன்

## மட்டக்களப்பு மருத்துவமனை: நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது. வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் எல்லோருக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கே வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியே உள்ள கல்முனை, அம்பாறை போன்ற பகுதிகளிலிருந்து வந்த நோயாளிகளுக்கு முற்றாகக் கதவடைப்பு.

வேண்டிய எண்ணிக்கையில் வைத்தியர்கள் இல்லாதது இதற்குக் காரணம் என்று வைத்தியசாலை நிர்வாகம் கூறியது.

கடந்த டிசம்பர் 6ஆம் திகதி மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் இடம்பெற்றது பிரயாணிகள் பஸ் குண்டு வெடிப்பு. இதன் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் கடமையுரிந்த சிங்கள வைத்தியர்கள் 37 பேரும் கொழும்புக்குத் திரும்பினர். இதனையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது.

ஓடிப்போன வைத்தியர்களில் ஒரு சிலர் திரும்பி வந்த போதிலும் நிலைமை சீராகவில்லை.

அவசர நோயாளர்களை மட்டும் கவனிப்பது என்றும் கடமை ரீதியான அவசர சிகிச்சைப் பிரிவு, பிரசவம், பெண்நோயியல், கண், காது, மூக்கு, தொண்டைப் பிரிவுகளின் அறுவை சிகிச்சைகள் அனைத்தையும் தற்காலிகமாக இடைநிறுத்துவது எனவும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தீர்மானித்தனர். வைத்தியர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சீர்கேடு காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் நோயாளர்களே. அதுவும் கஷ்டப்பட்ட ஏழை மக்களே அதிகம் பாதிக்கப்பட்டனர்.

பணம் வைத்திருப்பவர்கள் மட்டக்களப்பு நகரில் உள்ள தனியார் மருத்துவ நிலையங்களில் நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தனர்.

பணமில்லாத ஏழை நோயாளர்கள் வேறு வழியின்றி அதிகாலையில் இருந்தே இலக்கம் எடுப்பதற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் முட்டி மோதுவதைத் தினமும் காண முடிந்தது.

இப்போது நிலைமை திருந்தி வழமைக்கு வந்துவிட்டது. தை பிறக்கும் முன்பே மட்டக்களப்பு நோயாளர்களுக்கு வழி பிறந்துவிட்டது.

### நடமாடும் வைத்திய முகாம்

மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பவள விழாவை (75ஆண்டு) ஒட்டி இம்மாதம் *கொக்கட்டிச் சோலையில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை* நடத்த பவள விழாக் குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

பவள விழாக் குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் கடந்த டிசம்பர் 24ஆம் திகதி இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தினர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.விவேகானந்தராசா தலைமையில் சுமார் 15 வைத்தியர்கள் இச்சேவையில் ஈடுபட்டனர்.

சுமார் ஆயிரம் நோயாளர்கள் இங்கு மருத்துவ உதவியைப் பெற்றனர்.

கொக்கட்டிச்சோலையில் மருத்துவமுகாமை நடத்துவதற்கு மட்டக்களப்பு இராணுவத் தளபதி அனுமதி வழங்குவாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மண்டூரைப் பொறுத்தவரையில் அது விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அங்கு இராணுவத்தினரின் முகாமும் உள்ளது.

ஆனால் கொக்கட்டிச் சோலை விடுவிக்கப்படாத பிரதேசங்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.

இம்மாதம் கொக்கட்டிச் சோலையிலும் பெப்ரவரியில் வாகரையிலும் விசேஷ வைத்திய முகாம்களை நடத்த ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் பவள விழாக் குழுவினர் அயராது முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## தமிழ்க் குரலாக துண்டுப்பிரசுரங்கள்

மட்டக்களப்பில் தமிழ்க் குரலாகப் பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இது பாதுகாப்புப் படையினருக்கும் பெருந்தலையிடியாகி விட்டது.

மட்டக்களப்பு நகரைப்பாதுகாப்புக் கவசமாய் படையினர் கருதுகின்றனர். அப்படியான இடத்தில் தமிழ்க் குரலாகத் துண்டுப் பிரசுரங்களா? இதன் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதைத் துப்புத் துலக்கிக் கண்டு பிடிப்பதில் படையினர் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலத்தில் நடைபெற்ற ஹர்த்தால்கள், கதவடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றின் போது ''தமிழ்க்குரல்'' துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

புத்தாண்டை ஒட்டி நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியைக் கண்டித்தும் ''மறத் தமிழர்களே சிந்தியுங்கள்'' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. தமிழர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

''ஊர் எல்லாம் சோக மயம், இன்றைய நிலைமையில் இன்னிசைகானம் தேவையா? இன்னிசை நிகழ்ச்சிகள் களியாட்ட விழாக்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கும் பணத்தைப் போரினாலும், பசியினாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுத்து உதவக்கூடாதா? என்று துண்டுப்பிரசுரத்தில் கேட்கப்பட்டிருக்கிறது.

- சத்துருக்கன்

## இளைஞர் சேவை மன்றத்தின் தலைமை தனிச் சிங்களமயம்!

இளைஞர் சேவை மன்றத்தின் தலைமை தனிச்சிங்களமயமாக உள்ளது. கடமையாற்றும் 9 பிரதிப் பணிப்பாளர்களும் 23 உதவிப் பணிப்பாளர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு தமிழர் கூட இல்லை. அதனால் தமிழ் பேசும் இளைஞர்களின் சொல் திறனை வெளிக்கொணர முடியாமல் இருக்கிறது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்துவார்களா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் - இளைஞர் சேவைமன்றத்தின் பயிற்சிக் கல்லூரியொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கல்லூரி அமைப்புக்காக கடந்தவருடம் 40 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வருடம் 20 இலட்சம் ரூபா செலவில் இக்கல்லூரி மேலும் நவீனமயப்படுத்தப்பட்டு கணனிப் பயிற்சி நெறி முக்கியமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இதுவரை அமைக்கப்படாத சிறந்த கணனிப் பயிற்சி நெறியைக் கொண்டதாகப் புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை மன்றப் பயிற்சிக்கல்லூரி அமையும். இப்படி மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவிப்பணிப்பாளர் க.தவராசா ''சுடர்ஒளி''க்குத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குக் கடந்தவருடம் 7 இலட்சம் ரூபா மட்டுமே இளைஞர் அபிவிருத்திக்காக அரசினால் ஒதுக்கப்பட்டது. இதுபோதாது என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு இளைஞர்களுக்கான நாடகப்பயிற்சிப் பட்டறைகளும், விளையாட்டுப் பயிற்சி நெறிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகப்பிரிவுகளிலும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிரியர்கள் இடமாற்றத்தில் அரசியல்வாதிகள் தலையீடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியர்களின் இடமாற்றத்தில் அரசியல்வாதிகள் அனாவசியமாகத் தலையிடுகிறார்கள் என்று புகார் கூறப்படுகிறது.

இவர்களின் தலையீட்டால் கல்விப் பகுதியினர் நியாயமான முறையில் அமைப்பு விதிகளுக்கு ஏற்ப இடமாற்றங்களைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கஷ்டப்பிரதேசங்களில் நீண்ட காலமாகப் பணிபுரியும் ஆசிரியர்கள் நகரப்பாடசாலைகளுக்கு வரமுடியாமல் இருக்கிறது.

இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்ட பின்னரும் கூட அவற்றை அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக ரத்துச் செய்ய வேண்டி ஏற்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்.மாணிக்கராசா இவ்வருடம் நூறு ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கிவிட்டு அரசியல்வாதிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

இந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் அரசியல்வாதிகளைப் பணிவன்புடன் கேட்டுள்ளார்.

பொதுசன நூலகம்

# கூட்டணி, காங்கிரஸ் கட்சிகள் புலிகளின் நிலைக்கு ஆதரவு

தமிழ் ஈழத்துக்காகப் போராடிய நான்கு கட்சிகளின் தலைவர்கள் ஈழத்தையும் போராட்டத்தையும் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வந்திருக்கின்றனர்.

யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தை, பிரச்சனைக்கு அரசியல் தீர்வு பற்றி எல்லாம் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை கடந்த 2000 டிசம்பர் 31 ஆம் திகதி சுடரொளியில் பிரசுரித்திருந்தோம்.

ஒருகாலும் ஆயுதம் ஏந்தாத கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் முறையே ஆனந்தசங்கரி எம்.பி , அப்பாத்துரை விநாயகமூர்த்தி எம்.பி. ஆகியோரிடம் பத்துக் கேள்விகளைச் 'சுடர் ஒளி' கேட்டது.

கேள்விகளுக்குத் தலைவர்கள் அளித்த பதில்களின் சாரம் இங்கே பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

## தமிழர் விடுதலைக்கூட்டணி – ஆனந்தசங்கரி

பேச்சுவார்த்தை கண்டிப்பாக நடக்க வேண்டும். நடக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதற்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த பத்து வருடங்களாக எவராலும் சந்திக்க முடியாதவராக இருந்தார்.

அவர் பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்க வந்த நோர்வே நாட்டின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்மை வன்னியில் சந்தித்துப் பேசினார்.

மற்றது அவர் தமது மாவீரர் தின உரையில் (27.11.2000) அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்றும் அறிவித்தார்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அதிகார மட்டத்தில் இருப்பவர்கள் தாம் வருடக்கணக்காகப் பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்டுவருவதாகக் கூறுகிறார்கள்.

ஆகவே, பேச்சுவார்த்தை எப்படியோ, என்றைக்கோ நடக்கும் சாத்தியம் இருப்பதாகவே தோன்றுகிறது

பேச்சுவார்த்தைக்கு முன் யுத்த நிறுத்தமா அல்லது பேச்சுவார்த்தைக்குப் பின்னர் யுத்த நிறுத்தமா என்ற விஷயத்தில் புலிகள் கூறுவதே தர்க்க ரீதியானதாகவும் நியாய பூர்வமானதாகவும் தோன்றுகிறது.

அவர்கள் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி அதை இப்போது அனுஷ்டித்தும் வருகிறார்கள். அரச படைகளோ தாக்குதல் நடத்தி வருகின்றன. போரைத் தவிர்த்திருப்பவர்களைத் தாக்குவது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது. இந்த விஷயத்தில் அரசாங்கம் பெரிய தவறு செய்கிறது.

அரசாங்கம் தானும் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்த வழி செய்வதே நல்லது. தாக்குதல்களைத் தீவிரப்படுத்துவது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

பேச்சுவார்த்தை மூலம் பலன் கிடைக்குமா இல்லையா என்பதைவிட யுத்தத்தின் மூலம் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாது என்பதை அனைவரும் அறிய வேண்டும்.

இனப் பிரச்சனைக்குத் தீர்வாகத் தமிழ் ஈழம் கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம். ஆனால் தமிழ் ஈழத்துக்கு உலக நாடுகளின் ஆதரவு இல்லை என்பது இப்போது தெளிவாகி விட்டது. அதனால் சமஷ்டி அரசமைப்பின் கீழ் சுயாட்சியை விரும்புகிறோம். அந்த ஆட்சியில் எத்தனையோ பிரச்சனைகள் தீர்ந்துவிடும்.

சமஷ்டி ஆட்சிமுறை கிடைக்கா விட்டால் அடுத்து என்ன என்பதை நன்றாக யோசித்தே முடிவு செய்ய வேண்டும்.

ஆயுதப் போராட்ட வழி இன்றைய காலகட்டத்தில் மிகவும் சிக்கலானது.

ஒரு அரசாங்கத்துக்குக் கிடைக்க கூடிய உதவிகளும் நவீன ஆயுத பலமும் வேறு அமைப்பு களுக்குக் கிடைக் கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே ஆத்மசக்தி யுடன் சமாதான வழியில் தான் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.



தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து விட்டால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திவிடலாம் என்று அரசாங்கம் நினைப்பது தவறு.

ஒரு நாட்டின் இராணுவத்தோடு இன்னொரு நாட்டின் இராணுவம் போல மரபு முறைப் போரில் ஈடுபட்டிருக்கும் ஒரு இயக்கத்தில் ஆட்பலம் குறைந்தால் உடனே அந்த இயக்கத்தினர் கெரில்லாப் போரில் இறங்கிவிடுவார்கள். அதாவது மறைந்து இருந்து விட்டு வாய்ப்பு வரும்போது திடீரென்று பாய்ந்து எதிரிக்கு ஆகக் கூடுதலான அழிவுகளை ஏற்படுத்தும் போரில் இறங்குவார்கள்.

எல்லோரும் மடிந்து ஒரு கெரில்லாப் போராளி மட்டும் உயிரோடு இருந்தால் அப்போதும் போர் தொடர்ந்து நடக்கும். கெரில்லாக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள், போரும் முடிவில்லாமல் தொடரும்.

ஆகவே அரசாங்கத்தின் போர்ச் சூளுரையில் அர்த்தம் இல்லை.

தமிழ் மக்களை அரசாங்கம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறது.

ஒரு காலத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்களை அரசாங்கம் தன்னுடன் இணைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்குத் தாங்கொணாத துன்பங்களைக் கொடுப்பதற்கு அவர்களைப் பயன்படுத்தியது. ஆகவே இன்று தமிழ்ப் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் இணைந்து இருக்கிறார்கள் என்று கூறித் தமிழ் மக்களை அரசாங்கம் ஏமாற்ற முடியாது.

கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் இந்தத் தமிழர்கள் எப்படி எத்தனை வாக்குகளைப் பெற்று எம்.பிக்களாகத் தெரிவானார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இவர்களை உண்மையான மக்கள் பிரதிநிதிகள் என்று எண்ணி இவர்களுடன் பேசித் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் நினைத்தால் அது போன்ற முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. புலிகளுடன் பேசாமல், அவர்களின் பங்களிப்பு இல்லாமல் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண அரசாங்கம் மனப்பூர்வமாக விரும்புகிறதா என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதே வேளை அரசாங்கத்தில் உள்ள எல்லோரும் கபட நாடகம் ஆடுகிறார்கள் என்றும் கூறமுடியாது.

பலதரப்பட்டவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள். அதனால் அவர்கள் வெளியிடும் கருத்துகளும் முரண்பாடானவையாக இருக்கின்றன.

முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில், வடக்குமுஸ்லிம்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்று நிம்மதியாக வாழக் கூடிய சூழ்நிலை வரும் போது தான் தாமும் அங்கு போக இருப்பதாக எமது கட்சித் தலைவர் உறுதியாகக் கூறியிருக்கிறார். இந்த மனப்பான்மையில் தான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் அஷ்ரப்பின் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொண்டோம்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்று வரும் போது சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உடன்பாடாக மட்டும் அது இருக்கக் கூடாது. ஒரு பெரிய மாநிலமே முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் முஸ்லிம்களுடைய பிரச்சனைகளுக்கும் நிச்சயம் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தையின் போது இவ்விவகாரத்துக்கு முக்கிய இடமளிக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் மத்தியில் இது விஷயத்தில் கருத்து ஒற்றுமையில்லை என்று கூறி அவர்களை ஒதுக்கிவிட முடியாது.

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் – விநாயகமூர்த்தி

சமாதானப் பேச்சுவார்த்தை நடக்குமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்த பின்பு அரசாங்கம் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால் அரசாங்கம் சமாதானத்தை விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.

புலிகளை அழிக்கும் வரை ஆனையிறவு முகாமைப் பிடிக்கும்வரை போர் நடத்தப்படும் என்று பிரதமர் கூறியிருக்கிறார். இது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அறிகுறியா?

யுத்தம் நிறுத்தப்பட்டு வழமையான சூழ்நிலையும் ஏற்பட்ட பின்னர்தான் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும் என்று புலிகள் இயக்கத்தினர் கூறுவது தான் நூறுவீதம் சரி என்பேன். யுத்தம் செய்து கொண்டு எதனைப்பற்றிப் பேச முடியும்?

'முதலில் சுடுவதை நிறுத்துங்கள். பின்பு பேசுங்கள்' என்றுதான் பீட்டர் ஹெய்னும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். இதனைத் தான் எல்.ரி.ரி.ஈயும் கேட்கிறது. இதில் என்ன பிழை?

கடந்த வருடம் டிசம்பர் 16ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நான் யாழ்ப்பாணத்தில் என் கண்ணால் கண்ட விடயங்களை இங்கு கூற வேண்டும். தெல்லிப்பழையில் இருந்து சாவகச்சேரிப் பகுதிக்கு பல்குழல் ஷெல்தாக்குதல்கள் நடந்தன.

இச்ஷெல் தாக்குதல்களினால் பலாலிப் பகுதியிலும் குண்டு வந்துவிழுந்ததைக் கண்களால் கண்டேன்.

டிசம்பர் 24ஆம் திகதியன்று பிரபாகரன் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்த பின்பு என்றுமில்லாத விதமாக பல்குழல் ஷெல் தாக்குதல்களும், விமானத் தாக்குதல்களும் அதிகரிக்கப்பட்டன. பிரபாகரன் யுத்த நிறுத்தத்தை அறிவித்தபின் அரசாங்கம் யாருடன், எதற்காக யுத்தம் நடத்துகிறது என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடக்கத்தான் வேண்டும். அதன் மூலம் மக்களுக்குப் பலன் கிடைக்கத்தான் வேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகள் இவ்விடயத்தில் அதிக அக்கறை காட்டுவதால் 'ஈழம்' இல்லாத, ஆனால் தமிழர்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் வகையிலும், திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் அமைந்த தீர்வைப் பேச்சுவார்த்தை கொண்டுவரவேண்டும். அதனை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை வரும்.

தீர்வு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்கவோ கூறவோ முடியாது. இதனைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் புலிகளும், அரசாங்கமுமே.

தனிப்பட்ட முறையிலும் எனது கட்சியைப் பொறுத்தவரையிலும் ஈழத்தை விட திம்பு அடிப்படையில் விடுதலைப் புலிகள் ஏற்கும் ஒரு தீர்வுத் திட்டத்தையே கொண்டு வரவேண்டும் என்று எதிர்பார்க் கிறோம்.

முக்கிய மான 3ஆம் தரப்பு நாடொன்று தலையிட்டுத்தான் தீர்வைக் கொண்டுவர வேண்டும். வேறு ஒன்றும் செய்ய இயலாது. இதனைத்தான் உலக நாடுகளின் சில தூதுவர்களிடம் வலியுறுத்துகிறோம். இருதரப்பினரையும் இவ்வாறே தொடர்ந்து செயற்பட விட்டால் சமாதானம் வரப்போவதில்லை.



குமார் பொன்னம்பலத்தைக் கொன்றது அரச பயங்கரவாதம். விஜய குமாரதுங்கா, ரிச்சர்ட் டி சொய்சா ஆகியோரின் படுகொலைகளுக்கும் அரச பயங்கரவாதம் தான் காரணம். கிருஷாந்தி குமாரசுவாமி, சாரதாம்பாள் போன்றவர்களை மானபங்கப்படுத்தி விட்டுப் பின்னர் அவர்களைக் கொன்று தீர்த்ததும் அரசாங்க பயங்கரவாதம் தான்.

தமிழர்களின் உரிமையைப் பெற வேறு வழிகள் இல்லாத நிலையில் தான் புலிகள் ஆயுதம் ஏந்த வேண்டி வந்தது. 1956, 58, 77, 83ஆம் ஆண்டுகளில் எமக்கு ஏற்பட்ட துன்பங்கள் எங்கிருந்து வந்தன?

இக்கால கட்டங்களில் தமிழ் மக்கள் எதற்காக அடித்துக் கொலை செய்யப்பட்டார்கள். இவைகள் தான் புலிகளின் தோற்றத்துக்குக் காரணம். அதாவது புலிகள் சொல்வது தான் முழுக்க முழுக்க சரி என்று நான் கருதுகிறேன்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குப் புலிகளின் பங்களிப்பு மிக அவசியம். உலகம் முழுவதுமே, புலிகளின் பங்களிப்பு இல்லாமல் வடகிழக்குப் பிரச்சனை தீரப்போவதில்லை என்றும் சமாதானம் வரப்போவதில்லை என்றும் உணர்ந்திருக்கிறது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் விடயத்தில் உண்மையிலேயே அரசாங்கம் கபட நாடகம் ஆடுகிறது. இதைச் சொல்ல நான் தயங்கவில்லை, அரசாங்கத்திடம் மனப்பூர்வமான எண்ணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் பிரச்சனைகளும் நிச்சயமாக ஆராயப்பட வேண்டும், அவற்றிற்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் அங்கு குடியேற்றப்பட வேண்டும்.

முஸ்லிம்களின் பிரதிநிதிகள் தாங்களே என்று பலர் இன்று கூறிக்கொள்கிறார்கள். இவர்கள் முஸ்லிம்களின் பிரச்சனைகளைப் பற்றிக் குரல் கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் நாங்கள் இருக்கிறோம் என்பதை முஸ்லிம்கள் மறக்கக்கூடாது. முஸ்லிம்களும் தமிழ் மக்களின் ஓர் அங்கம் என்பதை உணர்கிறோம்; வலியுறுத்துகிறோம். முஸ்லிம்களுக்காகப் பாடுபடுவோம். அவர்களின் தனித்துவம் பேணப்பட வேண்டும். இவை எமது கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும்.


AMI ADVERTISING

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் அனைத்துவகையான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

AMI ADVERTISING

வியாபாரத்தின் வளர்ச்சி விளம்பரம்

தரமான விளம்பரத்திற்கு..

AMI ADVERTISING
No:- 529 -2/1 Galle Road,
Colombo-06.
Tel:- 074-518587, 071-267716
Fax:- 01-589411

சுடர் ஒளி

14 ஜனவரி, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

## வடக்கு மக்களுக்கு ஜனாதிபதியின் செய்தி

சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு முன்னர் யுத்த நிறுத்தமா? அது ஒருபோதும் நடக்காது.

இது அரசாங்கத்தின் நிலைப்பாடு. பிரதம மந்திரி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், மற்றும் முக்கிய அமைச்சர்கள், இராணுவத் தளபதி முதலானோர் இதைப் பல தடவைகளில் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆயினும் அரசாங்கத்தின் உத்தியோக பூர்வமான அறிவிப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வாயிலிருந்து கடந்த திங்கட்கிழமைதான் வெளிவந்திருக்கிறது.

அதாவது பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் விதத்தில் தாம் ஒரு மாதகாலம் யுத்த நிறுத்தம் செய்வதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்து இரண்டு வாரங்கள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ அறிவிப்பு வந்திருக்கிறது.

அதுவும் நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை மண்ணில் இரண்டாவது முறையாகக் காலடி வைப்பதற்குச் சிறிது முன்னர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வந்திருக்கிறது.

'சட்டலைட்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் செய்மதி மூலம் வடபகுதி மக்களுக்கு ஜனாதிபதி கடந்த திங்கட்கிழமை உரை நிகழ்த்தி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எடுத்துக்கூறினார்.

தாம் விடுத்த அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தை மேசைக்கு வரும்படி புலிகளைத் தூண்டுங்கள் என்று வடபகுதி மக்களுக்கு ஜனாதிபதி வேண்டுகோளும் விடுத்தார்.

பேச்சுவார்த்தை தேவையில்லை என்றோ அல்லது பேச்சுவார்த்தைக்கு வரமுடியாது என்றோ புலிகள் கூறினார்களா?

அரசுடன் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சு நடத்தத் தாம் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த வருடம் நவம்பர் 27 இல் தமது மாவீரர்தின வருடாந்த உரையில் திட்டவட்டமாக அறிவித்திருந்தாரே.

அந்த அறிவித்தலோடு பேச்சுவார்த்தை முன்னேற்றகரமாக நடப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துமாறும் அவர் அரசைக் கேட்டிருந்தார்.

ஆனால் அரசாங்கம் நீண்ட காலமாக வருடக்கணக்காகப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு புலிகளை அழைத்து வருகிறது என்றும் புலிகள் அதைத் தட்டிக்கழித்து வருகிறார்கள் என்றும் அர்த்தம் தொனிக்க வடபகுதி மக்களின் உணர்வலைகளைத் தூண்டி விடும் விதத்தில் இனிமையாகவும் இங்கிதமாகவும் ஜனாதிபதி உரைநிகழ்த்தியிருக்கிறார்.

அரசு கபட நாடகம் ஆடுகிறது என்று வன்மையாகக் கண்டிக்கிறார். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் எம்பியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி

புலிகள் சொல்வதுதான் சரி என்கிறார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூத்த பிரதித் தலைவரும் எம்பியுமான வி.ஆனந்த சங்கரி.

உண்மையற்ற ஒரு விஷயத்தை வார்த்தை ஜாலங்களால் நியாயமானதாகக் காட்டலாம். ஆனால் அதை உண்மையாக்க முடியாது.

யுத்தம் முடிவுக்கு வரவேண்டும். பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். அதைத் தொடர்ந்து பிரச்சனைகள் தீர வேண்டும். சமாதானம் நிலைக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களும் இந்த நாட்டில் சம உரிமைகள் பெற்றுச் சுதந்திரமாக வாழ வேண்டும்.

இருதரப்பினரும் இதுவே தமது விருப்பம் என்கின்றனர். இந்த விருப்பம் நிறைவேறுவதற்கு முதலில் நடைபெறவேண்டியது எது? யுத்தநிறுத்தமா? பேச்சுவார்த்தையா?

யுத்த நிறுத்தம் என்கின்றனர் புலிகள். இல்லை, பேச்சுவார்த்தை என்கிறது அரசு. இலட்சியம் ஒன்று அதை அடையும் வழிதான் இருதரப்பிலும் வேறுபடுகிறது.

முதற்படியாக இந்தச் சிக்கலைத் தீர்த்து வைத்து பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடை பெற வழி செய்யும் முயற்சியில் ஈடுபடுவதுதான் நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மின் இரண்டாவது இலங்கை விஜயத்தின் நோக்கம்.

பாவம் அவர் என்ன செய்வார்? குதிரைக்குத் தண்ணீரைக் காட்ட முடியுமே தவிர அதைக் குடிக்க வைக்க முடியாதே!

# ஆயுதப் போரை மிஞ்சும் வீதி ஆர்ப்பாட்டங்கள்!

விலைவாசி உயர்வுக்கு எதிராக வீதிப் போராட்டங்கள் தலையெடுத்து வருகின்றன. கடந்த ஆண்டின் இறுதியில் நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள வீதிகளில் நடந்த இப்போராட்டங்கள் கொழும்பு நகரின் வீதிகளிலும் இப்பொழுது நடத்தப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்துக்கு வெளியில் மட்டுமன்றி நாடாளுமன்றத்தின் உள்ளேயும் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் புதிய ஆண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வில் நடத்தப்பட்டுள்ளது.

பதவிக்கு வரும் அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் பதவிக்கு வருவதற்கு முன் விலைவாசிகளைக் குறைக்க உறுதியளிப்பதும் பதவிக்கு வந்த பின் உறுதிமொழிகளை மறந்து விலைவாசிகளை அதிகரிப்பதும் இன்று நேற்று நடப்பவையல்ல. இலங்கை சுதந்திரமடைந்து பதவிக்கு வந்த இரண்டாவது அரசின் பதவிக் காலத்திலேயே அது ஆரம்பமாகிவிட்டது.

அன்று பிரதமராக இருந்த டட்லி சேனாநாயக்காவின் ஆட்சியில் 1953 ஆம் ஆண்டு அரிசி விலை உயர்த்தப்பட்டதும் அதற்கு எதிராக இடதுசாரிகள் அதே ஆண்டில் ஆகஸ்ட் 8 ஆம் திகதி ஹர்த்தால் நடத்தியதும் தெரிந்த விடயங்கள். இவ்வாறே ஒவ்வொரு அரசின் பதவிக்காலத்திலும் விலைவாசி உயர்வுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன.

இப் போராட்டங்கள் பலவகைகளில் நடத்தப்பட்டுள்ளன. இதில் விநோதமான ஒரு போராட்டத்தை அமரரான டபிள்யு.தஹநாயகா தனிமனிதனாக நடத்திக் காட்டினார். துணி விலைகள் உயர்வை எதிர்த்த எம்.பி.யான அவர் கோவணம் அணிந்து அன்று நாடாளுமன்றத்துக்கு வந்தார். அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன எதிர்கட்சித் தலைவராக இருந்த பொழுது வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் மேற்கொண்டார்.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் பலர் கோவணம் அணிந்து கொழும்பு வீதியில் காட்சி கொடுத்து ஆர்ப்பாட்டம் செய்ததும் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு போராட்டமாகும்.

சிறிது காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட ஐ.தே.க எம்.பி மகேஸ்வரன் மாட்டு வண்டியில் ஏறி மூக்கணாங் கயிறைப்பிடித்து நாடாளுமன்றம் சென்றதும் பின்னர் ஐ.தே.க எம்.பிக்கள் பலர் நாடாளுமன்றத்திற்கு சைக்கிள் சவாரி செய்ததும் செய்திகளாகும்.

இப் போராட்டங்களினால் ஏற்பட்ட பலன்கள் என்ன?. 53 ஆம் ஆண்டு ஹர்த்தாலினால் பிரதமர் டட்லி பதவி துறந்தார். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் நிதியமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். இவற்றைவிட விலைவாசி உயர்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டதா என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும்.

போராட்டங்கள் தொடரும் என்பதையே இலங்கை அரசியல் வரலாறு எடுத்துக் கூறுகிறது. கடந்த திங்களன்று ஜே.வி.பி. அதாவது மக்கள் விடுதலை முன்னணி கொழும்பு நகரின் மத்தியில் விலைவாசிகள் உயர்வை எதிர்த்து ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பொலிஸார் தண்ணீரையும், கண்ணீர்ப் புகையையும் பிரயோகித்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர். ஆர்ப்பாட்டம் அத்துடன் முடிவுற்றது.

இந்தச் சம்பவம் கடந்த புதனன்று நாடாளுமன்றம் கூடிய பொழுது அங்கு எதிரொலித்தது. ஜே.வி.பி. எம்.பிக்கள் சுலோக அட்டைகளைக் காட்டியவாறு விலைவாசி உயர்வுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கும் எதிர்ப்புக் காட்டினர்.

இதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களும் நாடாளு மன்றத்துக்குள் எதிர்ப்புக்காட்டி குரல் எழுப்பினர். நாட்டு நிலைமை குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தின் அவசர கூட்டத்தைக் கூட்ட விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப்படுவதையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் இல்லாவிட்டாலும் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றப் போவதாக ஜனாதிபதி கூறியிருப்பதையும் ஆட்சேபித்தே ஐ.தே.க சபையில் எதிர்ப்புக்குரல் எழுப்பியது.

இந்த விடயங்கள் எல்லாம் குறித்து நாடாளுமன்றத்தில் பிறிதொரு தினத்தில் விவாதிக்கப்படலாம். அல்லது விவாதிக்கப்படாமலும் விடலாம். ஆனால் கோதுமை மாவு, பாண் விலை உயர்வு, மண்ணெண்ணெய், டீசல் விலை உயர்வு, காஸ், பஸ் கட்டண அதிகரிப்பு என்று பொதுமக்கள் முதுகில் ஏற்றப்பட்டுள்ள பெரும் சுமைகள் குறைக்கப்படுமா? குறைக்கப்படமாட்டா.

மின்சாரம், தண்ணீர் கட்டணங்களும் அடுத்து உயர்த்தப்படலாம் எனக்கூறப்படுகிறது. உயர்த்தப்பட்டால் அதற்கு எதிராகவும் அரசியல் கட்சிகளால் போராட்டங்கள் நடத்தப்படும்.

விலை அதிகரிப்புகள்! அதற்கு எதிராகப் போராட்டங்கள்! இது ஒரு தொடர்கதை. பாவம் பொது மக்கள்.

— எட்வேர்ட்

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை

தனியான பெரும்பான்மைப் பலம் இல்லாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும், ஈ.பி.டி.பியையுமே நம்பியிருக்கிறது. இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் இணைத்தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அரசாங்கத்துக்குக் கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்

முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றாவிட்டால் தாமும் மற்றவர்களும் அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ரவூப் ஹக்கீம் 100 நாள் காலக்கெடு வைத்து அரசாங்கத்திற்கு முக்கியமாக நான்கு கோரிக்கைகளை விடுத்திருந்தார். சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதி ஆணைக்குழு, லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு ஆகியவை நியமிக்கப்பட வேண்டும் என்பவையே அந்த 4 கோரிக்கைகளும் ஆகும்.

இந்தக் கோரிக்கைகளை ஐ.தே.கவும் விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நான்கு கோரிக்கைகள் தவிர அஷ்ரப் காலத்தில் விடுக்கப்பட்ட கல்முனையை மையமாகக் கொண்ட கரையோர மாவட்டம், ஒலுவில் துறை முகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் சம்பந்தமான கோரிக்கைகளும் இருக்கின்றன.

எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ரவூப்ஹக்கீம் வற்புறுத்துகிறார். நூறு நாள்கெடு முடிவதற்கு இன்னும் சுமார் 2 வாரங்களே இருக்கின்றன.

கடந்த 7 ஆம் திகதி நிந்தவூரில் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட கடற்றொழில் வங்கியின் திறப்பு விழாப் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்: -

அரசாங்கத்திற்கு நாம் முன்வைத்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுமானால் தொடர்ந்தும் அரசுடன் ஒட்டிக்கொண்டு இருக்க நாம் தயாராக இல்லை. அரசைவிட்டு வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொள்வோம். எதிர்க்கட்சியில் இருந்து எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகக் குரல் கொடுப்போம். இப்படி அவர் கூறினார்.

இன்றைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக்கொண்டால் அரசின்பாடு திண்டாட்டமாகிவிடும்.

- ஏ.எல்.எம்.சலீம்

# யாழ் பல்கலை மாணவரின் எழுச்சி நிகழ்ச்சிக்குத் தடை

யாழ்ப்பாணத்தில் உள்ள மனித நேய அமைப்புக்களுடன் இணைந்து யாழ் பல்கலைக்கழக சமூகம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடத்த இருந்த 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு இராணுவம் அனுமதி வழங்க மாட்டாது. வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா இதைத் தெரிவித்தார். கடந்த வியாழனன்று பலாலியில் உள்நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்களை அழைத்து நடத்திய மாநாட்டிலேயே தளபதி இதனைத் தெரிவித்தார்.

"அனைத்து தமிழர்களினதும் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் பணி பல்கலைக்கழக மாணவர்களுடையது அல்ல. அதற்கு வேறு அமைப்புகள், கட்சிகள் உள்ளன. பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுமானால் தங்களுடைய விவகாரத்தைப் பார்க்கட்டும்" என்று மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தமிழர்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்பதை வலியுறுத்திச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்ட யாழ் பல்கலைக்கழக சமூகம் இந்த எழுச்சி நிகழ்வை மிகப் பிரமாண்டமான முறையில் நடத்த இருந்தது. அது பற்றிய தகவல் 10 ஆம் பக்கத்தில் 'வடபுலத்தில்' பத்தியில் இடம்பெற்றுள்ளது.

"பொங்கு தமிழ்" எழுச்சி நிகழ்வுப் பிரசாரத்துக்காக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வட்டுக்கோட்டைப் பகுதிக்குச் சென்ற போது சில எதிர்ப்புக்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

அங்கு சிலர் யாழ் பல்கலைக்கழகத்தில் 'ராக்கிங்' உட்பட பல கலாசார சீரழிவுகள் நடக்கின்றன. அதைத் தடுக்காமல் எழுச்சி நிகழ்வை நடத்த வேண்டாம் என்று மாணவர்களின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டார்கள் என்று கூறப்படுகிறது.


அங்குமட்டுமல்லாமல் வேறு சில இடங்களிலும் எழுச்சி நிகழ்வுக்கு எதிராகச் சிலரால் இப்படிக் கேள்வி எழுப்பப்படுகிறதாம்.

இதன் பின்னணியில் ஒரு அரசியல் கட்சி செயற்படுவதாக எழுச்சி நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# 'சிறுபான்மை எம்.பிக்கள் அரசை ஆதரிக்கக் கூடாது'

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் எம்.பி. கூறுகிறார்



எந்த ஒரு அர்த்தமும், நியாயமும் இன்றி அரசாங்கத்திற்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் சகல சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்களும், விசேடமாக மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டிய காலம் கிட்டி விட்டதென்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் கோரியுள்ளார். அவர் தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

நாடு யுத்தத்தால் சீரழிந்து கொண்டிருக்கிறது.

அமைதிக்கான அனைத்து சமிக்ஞைகளும் அரசாங்கத்தின் தெளிவற்ற கொள்கையினால் தடுமாறுகின்றன.

ஒட்டு மொத்தமாக நாட்டுக்கும் குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கும் அழிவை உண்டாக்கும் நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

இதுவரை இருந்த அரசாங்கங்களிலேயே நாட்டுச் சொத்தினை அநியாயமாக பெருமளவில் அழித்துக் கொண்டிருப்பது இந்த அரசாங்கம் தான். என்றுமில்லாதவாறு அரசாங்கத்திலுள்ள பல எம்.பி.க்களுக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுத்து அரச நிதியை விரயமாக்குவதும் இந்த அரசுதான்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு எந்த ஒரு உபயோகமான பொருளாதார திட்டமுமே இந்த அரசாங்கத்திடம் இல்லை. இதனால் விலைவாசியும் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துக் கொண்டு போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பொருளாதாரத்தையே நிர்ணயிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை படுகுழியில் வீழ்ந்து கொண்டிருக்கிறது.

இவர்களின் சம்பளத்தைக் கூட உயர்த்திக் கொள்ள முடியாத நிலை உள்ளது. தொழிலாளர்களின் வாக்குகளை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுப்பதில் காட்டப்பட்ட அக்கறையில் சிறிதளவேனும் தேர்தலுக்குப் பின்னர் காட்டப் படவில்லை. மனிதாபிமானமற்ற முறையில் தொழிலாளர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது.

அரசின் சகல நடவடிக்கைகளும் முழு நாட்டின் எதிர்காலத்துக்குமே ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை. அது மட்டுமல்ல, சிறுபான்மை மக்களினதும் மலையக தோட்டத் தொழிலாளர்களினதும் எதிர்காலத்தையே சீரழிப்பனவாகவும் அவை மாறி வருகின்றன.

ஆகவே, இந்த அரசாங்கத்தை ஆதரிக்கின்ற சகல அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை விலக்கிக்கொள்ள வேண்டும். குறிப்பாக சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதன் மூலம், தமது சொந்த இனத்துக்கே குழி தோண்டுகின்ற வேலையைச் செய்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்காக அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவினை விலக்கிக் கொள்ள வேண்டும். இப்படிச் சந்திர சேகரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

---

# பிந்தன் பதில்கள்

கே.கமலநாதன், நீர்வேலி.
கே : சிறந்த சிந்தனையாளர்கள் ஆண்களா, பெண்களா?
ப : ஆண்கள்தான் பெரும்பாலும் சிந்தனையாளர்கள். பெண்கள் செயலாளர்கள்.

க.அருணாசலம், கரவெட்டி.
கே : வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தைவிட இன்று நம் நாடு சகல துறைகளிலும் முன்னேறி இருக்கிறது அல்லவா?
ப : உண்மைதான். கொலை, களவு, கொள்ளை, மோசடி, லஞ்சம், ஊழல், இனவொதுக்கல், அடக்குமுறை, பாலியல் வல்லுறவு, புதைகுழி தோண்டுதல் போன்ற பல்வேறு துறைகளில் நம் நாடு எவ்வளவோ தூரத்துக்கு முன்னேறிவிட்டது.

ஏ.எச்.முகைதீன், மட்டக்குளி.
கே : உலகில் இன்று மிக மலிவாகக் கிடைப்பது எது?
ப : முகஸ்துதி. இந்த மலிவான சரக்கின் மாயையில் சிக்கித் தவிக்காதோர் உலகில் மிகச் சிலரே.

ஆர்.கந்தசாமி, கல்கிசை.
கே : அம்மாவாகும் பாக்கியம் ஆண்களுக்கும் கிடைத்தால் என்ன நடக்கும்?
ப : உலக சனப்பெருக்கம் குறைந்துவிடும். ஏனென்றால் ஆண்களுக்கு அப்போதுதானே குடும்பச் சுமை தெரியவரும்.

எஸ்.வாஹிட், புசல்லாவை.
கே : ஒரு ஆண் நான்கு பெண்களைக் காதலிப்பது நல்லதா?
ப : காதலுக்கு இந்த நாட்டில் உச்ச வரம்பு வரவில்லையே!

ஆர்.இராமசாமி, கண்டி.
கே : அரசியல்வாதிகள் எப்போது பார்த்தாலும் புளுகிக் கொண்டே இருக்கிறார்களே, அவர்களுக்குத் தாம் புளுகுகிறோம் என்பது தெரியாதா?
ப : மீன் வியாபாரிக்கு மீன் நாற்றம் தெரியாது.

எஸ்.ஜஸ்மின், பலப்பிட்டி.
கே: எவருக்கும் அடிமையாகாதது எது?
ப: பணம். பணத்துக்கு மற்றவர்கள் எல்லோரும் அடிமைகள். ஆனால் பணம் எவருக்கும் அடிமை அல்ல.

ஜேஎன்.பிள்ளை, தெஹிவளை.
கே : கணவன் மனைவிக்குள் எதனால் தகராறு வருகிறது?
ப : திருமண நாளன்று மகிழ்ச்சியுடன் மாலையைச் சுமக்கிறார்கள். ஆனால் அதன் பின் கஷ்டங்களைச் சுமக்க அவர்கள் பெரும்பாலும் தயாராவதில்லை. ஆனால் மனைவி குழந்தைகளைச் சுமக்க வைத்துவிடுகிறான் கணவன். இந்தச் சுமைப் பிரச்சினைதான் கணவன் - மனைவி தகராறுக்குக் காரணம்.

வி.சுந்தரமூர்த்தி, திருகோணமலை.
கே : அமைச்சர் கதிர்காமர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து பிரிந்து சென்றால் என்ன நடக்கும்?
ப : கதிர்காமரைப் போன்ற மற்றொரு தமிழர் சந்திரிகாவுக்குக் கிடைக்கமாட்டார். என்றாலும் ஜனாதிபதி கவலைப்படமாட்டார். ஏனென்றால் தமிழர்களும் அரசாங்கத்தில் பங்குகொண்டிருக்கிறார்கள் என்று உலகிற்குப் பறைசாற்ற வேறு தமிழ் அமைச்சர்கள் அவருடன் இருக்கிறார்கள்.

சி.பி.காதர், புத்தளம்.
கே : பெண்களுக்கு எதற்கு எடுத்தாலும் கண்ணீர் வருகிறதே. அது எதற்காக?
ப : பெண்களின் கண்ணீர் சுரப்பிகளும் உணர்ச்சி நரம்புகளும் மென்மையானவை. அது ஒரு காரணம். அவர்கள் அழுதால் காரியம் நடக்கிறது. இது மற்றொரு காரணம்.

எஸ்.பிரகாஷ், புறக்கோட்டை.
கே : நடிகைகள் சினிமாவில் தங்கள் வயிற்றைக் காட்டுவது எதற்காக?
ப : தாங்கள் அப்படிச் செய்வதெல்லாம் வயிற்றுக்காகத்தான் என்று உணர்த்துவதற்காக. ஆனால் அவர்களின் வயிறுகளைப் பார்த்தால் மனிதனுக்கு ஒரு சாண் வயிறு என்று சொல்வது தவறு எனத் தோன்றுகிறது.

பி.தனபாலன், சாவகச்சேரி.
கே : யாருக்கு இன்று நண்பர்கள் அதிகம்?
ப : பீடி, சிகரெட், மது மற்றும் பல்வேறு போதைப் பொருள்களுக்குப் பணத்தை அதிகம் செலவு செய்பவர்களுக்குத்தான் இன்று நண்பர்கள் எக்கச்சக்கம்.

வி.ஜுனைதீன், பேருவளை.
கே : இலங்கை இனியும் வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்குமா?
ப : பிச்சைக்காரனுக்கு வெட்கம் ஏது? பத்துப் பேர் பிச்சை போடாமல் போனாலும் பதினோராவது ஆளேனும் பிச்சை போடுவான் என்று நம்பித் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருப்பான்.

எஸ்.கிறிஸ்டோபர், வத்தளை.
கே : மனித வாழ்வுக்கு அறிவு அவசியமா உணர்ச்சி அவசியமா?
ப : இரண்டும் அவசியமே. ஆனால் உணர்ச்சிவசப்படும்போது அறிவு மயங்கிவிடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

பி.வாணி, வவுனியா.
கே : ஒரு பெண்ணுக்குச் சிறந்த நகை எது?
ப : பல் தெரியாத சிரிப்புத்தான் பெண்ணுக்குச் சிறந்த நகை. பெண்ணின் உடம்பில் உள்ள மற்ற நகைகள் எல்லாம் ஆபத்தைத் தரக்கூடியவை.

எம்.ரமணன், பொரளை.
கே : சினிமா நடிகைகளிடம் மயங்காதவர்கள் இருக்கிறார்களா?
ப : அவர்களின் "மேக்-அப்" காரர்கள். எந்தக்காலமும் அவர்களிடம் மயங்குவது கிடையாது. நடிகையின் "மேடு பள்ளங்கள்" அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

பிலோமினா, பேலியகொடை.
கே : கஷ்டப்பட்டு உழைத்துச் சாப்பிடுபவனுக்கும் சும்மா இருந்து சாப்பிடுபவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப : கஷ்டப்பட்டு உழைத்துச் சாப்பிடுபவன், ஆரோக்கியமாக இருப்பான். உழைக்காமல் சாப்பிடுபவனின் உடல் நோய்க் கிடங்காக இருக்கும்.

பாத்திமா பீபி, சிலாபம்.
கே : பிராணிகளுக்குப் பேசும் ஆற்றல் வந்து விட்டால் அவை என்ன சொல்லும்?
ப : "எங்களுக்கு மனிதனைப் போல ஆறறிவு வேண்டாம், இருக்கும் ஐந்தறிவே போதும்" என்று சொல்லும்.

ஜோ.மொறாயஸ், மட்டக்களப்பு.
கே : வாழ்க்கையில் சாதனை எது? சோதனை எது?
ப : காலத்தை வெல்வது சாதனை. காலமாவது சோதனை.

ஆர்.கபிரியேல், வாசுரை.
கே : மனிதன் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்?
ப : அவன் தொடர்ந்து நினைத்துக்கொண்டே இருப்பான்.

டி.சிவஞானம், நல்லூர்.
கே : ஆனைக்கும் அடி சறுக்கும். மனிதனுக்கு.....?
ப : பிடி சறுக்கும். அதைத்தான் "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்று சொல்கிறார்கள்.

கே.அன்வர் அலி, கிண்ணியா.
கே : தேனாக இனிப்பது எது? வேம்பாகக் கசப்பது எது?
ப : முகஸ்துதி இனிக்கும். புத்திமதி கசக்கும்.

ஜே.பேரின்பநாயகம், மொரட்டுவை.
கே : வட்டிக்கடைக்காரனின் பணப் பெட்டி பேசினால் அது என்ன சொல்லும்?
ப : படுபாவி! கொலைகாரா!! என்று எந்நேரம் பார்த்தாலும் திட்டிக்கொண்டே இருக்கும்.

முகம்மது இஸ்மாயில், புதுக்கடை.
கே : குழந்தையின் சிரிப்புக்கும் குமரியின் சிரிப்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப : குழந்தையின் சிரிப்பு உள்ளத்துக்கு அமைதி தரும். குமரியின் சிரிப்பு உடலை வாட்டி எடுக்கும்.

ஆர்.மதியழகன், கொட்டகலை.
கே : காதல் உண்டானால் பெண்கள் என்ன செய்வார்கள்?
ப : மோதலை உண்டாக்குவார்கள்.

டி.தனஞ்சயன், முகத்துவாரம்.
கே : துன்பத்தினால்தான் கண்ணீர் வருகிறதா?
ப : இல்லை. சிரித்தாலும் கண்ணீர் வரும். கொட்டாவி விட்டாலும் கண்ணீர் வரும். வெங்காயம் உரிக்கும்போதும் கண்ணீர் வருகிறது. நடிகர் நடிகைகளுக்கு கிளிசரின் பூசியதும் கண்ணீர் வருகிறதே!

எஸ்.வி.ராம், கண்டி.
கே : விதியை மதியால் வெல்வது எப்படி?
ப : விதியே என்று வாடிப்போய் இருந்து விடாது நயமாக நடப்பதன் மூலமே.

எப்.எக்ஸ்.மார்ட்டின், றாகமை.
கே : பெண்களின் மனதை அளவிடும் அளவுகோல் எது?
ப : ஆணின் சட்டைப்பையின் வீக்கம்.

கே.என்.ரகுநாத், யாழ்ப்பாணம்.
கே : பொழுது போதவில்லை என்பவன் முழு மனிதன். பொழுது போகவில்லை என்பவன் அரை மனிதன். இதன் உள் அர்த்தம் என்ன?
ப : முழு மனிதனாக இருந்தாலும் சரி அரை மனிதனாக இருந்தாலும் சரி "இல்லை" பல்லவி பாடுவதே அவர்களுக்கு வேலை.

# மசாலா மிக்ஸ்

## பனியில் உருவானாலும் அழியாத மாளிகை

அதிகாலையில் கொட்டும் பனியையே எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் சீனாவில் பனியிலேயே ஒரு மாளிகையை உருவாக்கியிருக்கிறார்கள். அது கூரையில்லாத மாளிகை. அந்த மாளிகைக்குள் பனியிலேயே ஒரு சிற்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சிலை உருகாமல் கெட்டியாக இருப்பதிலிருந்தே இங்கு எவ்வளவு குளிர் இருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லையா?





## மணி மணியான எண்ணங்கள் ஏற்படும் விந்தை

ஒருவருக்கு மணிமணியான எண்ணங்கள் ஏற்பட்டால் அவர் வாழ்வில் முன்னேறுவார் என்பார்கள். மணிமணியான எண்ணங்கள் நமக்கு ஏற்படுவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? இந்த அழகியைப் போல மணிமணியாக ஆபரணங்களையும் தலை அலங்காரத்தையும் செய்து கொண்டால் அத்தகைய எண்ணங்கள் வருமோ தெரியாது.

## ரகசியம் இது பரம ரகசியம்



வட பகுதியில் நெடுந்தீவில் வாழ்ந்த குதிரை இனம் படிப்படியாக அருகி வருகிறது. இதே போல் உலகில் பரந்துள்ள சிறிய தீவுகளிலும் குதிரை இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் குதிரை இனங்கள் இனக்கலப்பு இல்லாதவை. ஆஸ்திரேலியக் குதிரை இனத்துடன் இனக்கலப்பு செய்து கொண்ட பின் உருவாகும் குதிரை இனங்களே உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவை என மதிக்கப்படுகின்றன. இந்த ஜோடிக் குதிரைகள் ரகசியம் பரம ரகசியம் என்று பரிமாறிக் கொள்ளும் தகவல் என்னவாயிருக்கும்?



## வணக்கம் கூறி வாழ்த்தி இயந்திர மனிதர் வேலை

ஜப்பானியர்கள் இயந்திர மனிதனைக்கொண்டு தமது தொழிற்சாலைகளில் வேலை வாங்கத் தொடங்கிவிட்டார்கள். ஹோண்டா மோட்டார் கம்பனி அஷிமோ எனப்படும் ரோபோக்களைத் தமது தொழிற்சாலையில் வேலைக்கு சேர்த்திருக்கிறது. மூன்று இயந்திரமனிதர்கள் வேலைக்கு வந்த போது நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மயாஷினோ ஜப்பானிய முறையில் வணக்கம் கூறினார். இயந்திர மனிதர்களும் வணக்கம் கூறி வாழ்த்திவிட்டு வேலையை ஆரம்பித்தார்கள்

## குண்டர்கள் வந்தாலும் அடித்து விரட்டத் தயார்



தனியாகச் செல்லும் பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்ளும் ஆண்களை சமூகம் மதிப்பதில்லை. ஆனால் அதற்காக ஆண்களிடம் அடிவாங்கிக் கொண்டே இருப்பதற்கும் பெண்கள் தயாராக இல்லை. எனவே தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொள்வதில் பெண்கள் குறியாக இருக்கிறார்கள். குண்டர்கள் வந்தாலும் அடித்து விரட்டத் தயார். என்னும் பாவனையில் இந்த அழகி உடற்பயிற்சி செய்கிறார்.


மிருனாவ்ஸ் சுப்பர்

எமது இனிய நல்வாழ்த்துக்களை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்...

தைப்பொங்கலுக்கான சகல மளிகைப் பொருட்களையும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள

MIRUNA'S SUPER

342, Aluthmawatha Road, Colombo-15.

Tel: 525147 Fax: 075-364298

E-mail: miruna@stl.lk


## ஒளிந்திருக்கும் முகம் எது?



டிசம்பர் 31ஆம் திகதி "சுடர் ஒளி" மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை குஷ்புவினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து "சுடர் ஒளி"க்கு எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு.

1. எஸ். மேனகா, மாத்தறை
2. பி.ரி. நியாஸ், தம்பலகாமம்
3. ஜீ. துவாரகா, கைதடி

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (07.01.2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் பெயர், விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் முகம் தெரியாத இந்த உருவம் யாருடையது? உதவி டைரக்டராக இருந்து நகைச்சுவை நடிகராகியவர். நடிக்கும் வாய்ப்பு குறைந்தால் மீண்டும் இயக்குநராகிவிடுவாராம்.

இந்த முகத்துக்குரிய நடிகரைக் கண்டு பிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

"சுடர் ஒளி"
36/2, பிரெட்ரிக்கா வீதி,
கொழும்பு-06

# இங்கும் பால் பொங்கட்டும் மங்களம் தங்கட்டும்

படுமோசமாக ஊனமுற்று எதற்கும் இயலாமல் இருந்ததால் பெற்றோராலும் குணப்படுத்த முடியாத அளவுக்கு நோயுற்றவர்கள் என்று டாக்டர்களாலும் கைவிடப்பட்ட சிறிசுகளைக் கண்ணிமைபோல் காத்துப் போஷித்துப் பராமரித்து வருகின்றன சில கருணை உள்ளங்கள்.

இன்று நேற்றல்ல 37 வருடங்களாக இந்தக் காருண்ய சேவை நடைப்பெற்றுவருகிறது.

இதை ஆரம்பித்து வைத்தவர் நம்மவரல்லர். ஒரு வெள்ளைக்காரர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர். பெயர் பிரயன் த கெரட்சர்.

தனது காருண்ய சேவைக்குப் பக்கபலமாக இருப்பதற்கு இந்த நாட்டுப் பெண்மணி திலகா ராமநாயக்காவைத் திருமணம் செய்து கொண்டார்.

பிரயன் த கெரட்சர் காலமாகி விட்டார். எனினும் திலகா இன்னும் 20 பேரின் உதவியுடன் சேவையைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

ஹெந்தலையில் திலகாவின் சேவை நிலையம் அதாவது பிரீதிபுர சிறுவர் இல்லம் இருக்கிறது. கல் நெஞ்சக்காரர்கள் இங்கே காலடி வைத்தால் கூட அவர்கள் பாகாக உருகிவிடுவார்கள். அந்த அளவுக்குப் பரிதாபக் காட்சிகள்.

சில சிறார்கள் படுத்த படுக்கை. வேறு சிலர் நடக்க முடியாத நிலையில் சக்கர வண்டிகளில். ஒரு பிள்ளைக்குப் பென்னம் பெரிய தலை. வயது 11 பேச முடியாத ஊமை. இப்படி எத்தனை குறைபாடுகளுடன் எத்தனை பிள்ளைகள்! என்ன பரிதாபம்!

அந்தச் சோகத்தை இல்லப் பொறுப்பாளர் திலகாவே கூறுகிறார் கேட்போமா?

டாக்டர்களினால் கைவிடப்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஊனமுற்ற பிள்ளைகளே இங்கு பராமரிக்கப்பட்டுவருகின்றனர். 85 பிள்ளைகள் இப்போது இருக்கிறார்கள். சில பிள்ளைகளைப் பெற்றோர் கொண்டு வந்து சேர்க்கின்றனர். வைத்திய சாலைகளில் பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகளும் இங்கு கொண்டு வரப்படுகின்றனர்.

**கேள்வி:- இவர்களைக் கவனிப்பதற்கு வெளிநாடுகள் உதவுகின்றனவா?**

பதில்:- ஆமாம். கடந்த 25 வருடங்களாக நெதர்லாந்திலுள்ள மனநோய் வைத்தியசாலையொன்று உதவி வருகிறது.

அது மட்டுமன்றி சில பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின் பராமரிப்புக்காக வருடத்துக்கு தலா 100 அவுஸ்திரேலிய டாலர்களை அவுஸ்திரேலிய அமைப்பொன்று உதவி வருகிறது.



படுத்த படுக்கையில் சிறார்கள்

ஆனால் இலங்கையிலுள்ள எந்த ஒரு சமூக சேவை அமைப்பும் எமக்கு உதவி வழங்குவதில்லை.

சமூக சேவைத் திணைக்களத்தின் மூலம் ஒரு பிள்ளைக்கு 300 ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு ஒரு முறை கிடைக்கும்.



சக்கர வண்டிகளே தஞ்சம்

**கேள்வி:- இந்த நிலையத்தைச் செவ்வனே நடத்திப் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு இந்த உதவிகள் போதுமா?**

பதில்:- போதாது. சில வர்த்தகஸ்தாபனங்கள் மாதமொருமுறை அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்றன. அதுமட்டுமல்லாது பரந்த நோக்கும், ஈரநெஞ்சும், இளகிய மனமும் உடையவர்கள் தங்களது விஷேட தினங்களில் இங்கு வந்து உணவு, உடை போன்ற உதவிகளை வழங்குகிறார்கள். அப்படி அவர்கள் வழங்குவதும் போதுமானதாக இல்லை.

இப்பிள்ளைகளைக் கவனிப்பது மிகக் கடினம். எந்நேரமும் பிள்ளைகளைக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மின்விசிறி (Fan) எந்நேரமும் சுழல வேண்டும். இல்லாவிடின் ஈக்கள் மொய்த்துவிடும்.

பிள்ளைகள் அனைவரையும் பராமரிக்கவும், சமையல் வேலைக்குமாக இருபது பேர் தொழில் புரிகின்றனர். தயாள சிந்தையுடனும் சேவை மனப்பான்மையுடனும் இவர்கள் செயற்படுகின்றனர். அனைவருக்கும் தங்குமிட வசதி, உணவு ஆகியவற்றுடன் மாதம் 2000 ரூபா மட்டும் கைச்செலவுக்கு வழங்குகிறோம்.

இதோ பாருங்கள் என்று உடைந்த கூரையுடன் கூடிய ஒரு கட்டடத்தைக் காட்டி இதுபோன்று கட்டடங்கள் பழுதுபட்டால் நம்பாடு பெரும்பாடு.

இவ்வளவு செலவுகளுக்கு மத்தியில் இதனைச் செய்வது எப்படி?

**கேள்வி:- ஒரு நாளைக்கு எவ்வளவு பணம் செலவாகிறது?**

பதில்:- ஆறாயிரம் ரூபா தேவைப்படுகிறது.

**கேள்வி:- பிள்ளைகளுக்கான வைத்திய பரிசோதனைகள் நடைபெறுகின்றனவா?**

பதில்:- டாக்டர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகளே இங்கு உள்ளனர். மாதம் ஒருமுறை டாக்டர் திருமதி ஜயசிங்க, மற்றும் டாக்டர் வாமதேவன் தலைமையில் சாயிபாபா சமித்தி டாக்டர் குழுவினர் வந்து பார்வையிட்டுச் செல்வார்கள்.

**கேள்வி:- இங்குள்ள பிள்ளைகளில் எவராவது இறந்தால்?**

பதில்:- இறந்த பிள்ளையின் சடலத்தை அப்பிள்ளையின் சமய ஆசாரப்படி அடக்கம் செய்வோம். பெற்றோருக்கு அறிவித்தாலும் அவர்கள் வரமாட்டார்கள்.



**கேள்வி:- சரி, உங்களுக்கு ஏதாவது அவசியத் தேவைகள் இருக்கின்றனவா?**

பதில்:- ஆமாம் இங்குள்ள பிள்ளைகளை அடிக்கடி கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உடைகளைக் கழுவுவதற்கு 3 பேஸ் மின்சாரத்துடன் இயங்கும் துணி கழுவும் இயந்திரம் பயன்படுத்துகிறோம். மின்சாரம் எந்நேரமும் உபயோகிக்கப்படுவதால் மாதம் பில் 15000 ரூபா வரை வருகிறது. இதனைச் சமாளிப்பது கஷ்டம். தனவந்தர்கள் உதவ வேண்டும்.

சலவைத்தூள், சோப், பைனோல், வாஷிங் பவுடர், பற்பசை, உடைகள் முதலானவை தேவைப்படுகின்றன. இவற்றை மனமுவந்து எமது சிறுவர் இல்லத்திற்கு கொடுத்துதவ வேண்டுமென இரக்கமுள்ள அனைவரிடமும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். இப்படி திலகா கூறினார்.



உடைந்த கூரையைத் திருத்த ஓடு எடுத்துச் செல்கிறார்கள்

**நேரடி ரிப்போர்ட்:— ப. பன்னீர் செல்வம்**

**படங்கள் த.வேலுசாமி**

# பொங்கலோ... பொங்கல்!



## பொங்கல் வேண்டுதல்!

செம் பருதி ஒளி பரவி
நம் உதிர நீர் பாய்ச்சி
எம் மண்ணில் பயிர் வளர
இம் மனிதர் செயல் பூண்டார்!

கதிர் கரங்கள் நிலம் பரவ
முதிர் கதிரை அறுத் தெடுத்து
அதிர் வெடுத்து வெடி வெடிக்க
உதிர் நிலத்தில் பொங்கல் இட்டார்!

புத்தம் புது வருடம் இதில்
முத்தம் அதில் கோலம் இட்டு
சித்தம் உடன் படைத் தமுது;
யுத்தம் அற வேண்டி நின்றார்!

உண்மை ஒளி தந்து நிதம்
வன்மை தனை ஈன் றெமக்கு
வெண்மை நிலை வாழ்வு பெற
திண்மை உடன் அருளி விடு!

— தாவை. லோ.து(ள)ஷி

**தை**ப்பொங்கல் திருநாள் உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாள்.

உழவுத் தொழிலில் மனிதனுக்கு உதவும் மாடுகளுக்கு மதிப்புச் செய்யும் நாள்.

தொழில் சிறப்புறுவதற்கு வழிசெய்யும் சூரியனுக்கு நன்றிக் கடன் இறுக்கும் நாள்.

புத்தரிசியில் பால் பொங்கப்பட்டு குடும்பமும் சுற்றமும் சுவைத்து மகிழும் நாள்.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது முதுமொழி. அது இந்தக் காலகட்டத்துக்குப் பொருந்துமா?

வடக்கு கிழக்கில் உழவர்கள் வயலில் இறங்கி வேலை செய்யமுடியவில்லை. படையினரின் கெடுபிடி ஒருபுறம். நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிப் பயம் மறுபுறம்.

இது தவிரப் பல்லாயிரக்கணக் கானவர்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் அவல வாழ்வு வாழ்கிறார்கள்.

மற்றும் பலர் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் காலம் தள்ளுகிறார்கள்.

இப்படிச் சோகத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு இந்தத் தைப்பிறப்பிலாவது வழி பிறக்க வேண்டும்.

சூரியனுக்கு நன்றிக் கடன் செலுத்தும் நன்நாளிலே வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் நினைவு பலருக்கும் வரும்.

"அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்சோதி" என்று தனிவழி புது வழி நின்றவர் வள்ளலார்.

"பொங்கு பல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப்
பொங்கியோங்கும்
கங்குகரை காணாத கடலே"

என்று சன்மார்க்க சமரச நெறிபரப்பி நின்று ஈற்றில் சோதியுடன் கலந்தவர் வள்ளலார்.

கடவுள் ஒருவரே. அவரை ஒளிவடிவில் வழிபடலாம். சிறு தெய்வ வழிபாடு கூடாது. புலால் உண்ணல் ஆகாது. எவ்வுயிரையும் தன்னுயிர் போல் எண்ணி அன்பு செய்ய வேண்டும் என்பது வள்ளலாரின் கொள்கை.



தமது கொள்கையை ஆன்மநேய ஒருமைப்பாடு என்றார் வள்ளலார்.

இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைக்கு சாதி மதம் முதலியன போலவே மொழியும் தேசியமும் தடையாக இருக்கக் கூடாது என்று வள்ளலார் கூறினார்.

தமது இக்கொள்கையைப் பரப்புவதற்காகவே சமரச சன்மார்க்க சங்கம் என்ற அமைப்பை வள்ளலார் ஏற்படுத்தினார்.

வள்ளலார் தமிழ்த் தெய்வமான முருகனின் (திருத்தணி முருகன்) திருக்காட்சியைக் கண்ணாடியில் கண்டு சமய வாழ்க்கையை ஆரம்பித்தவர். அவருடைய தமிழ்எளிமையும் இனிமை மிக்கது. அருட் பாக்கள் தேனூற்றுக்கள் பாடப்பாடத் தெவிட்டாதவை.

சர்க்கரைப் பொங்கலைப் போல வள்ளலாரின் நினைவும் இனிக்கிறது.

திரும்பிப் பார்த்தால் இதுவா உலகம்? இதுவா இறைவன் கருணை என்று கேட்கத் தோன்றுகிறது. இதே பக்கத்தில் உள்ள கட்டுரையைப் படியுங்கள்.


## GREEN CARD

அமெரிக்காவில் தங்கி வேலை செய்வதற்கும் கல்வி பயிலவும் உங்களுக்கும் முடியும்

அமெரிக்காவில் வதியுரிமை பெறுவதற்கான 55,000 விசா சீட்டிழுப்பில் வழங்கப்படும். நீங்களும் போட்டியிட நாங்கள் உங்களை சரியாக போட்டிக்கு உட்படுத்துவோம். ஆயிரக்கணக்கில் செலவு செய்து கவலைப்பட வேண்டாம். நாங்கள் அறவிடுவது தபால் கட்டணம் மட்டுமே.

பெயர், முகவரி, மாவட்டம் போன்ற விவரங்கள் எழுதி ரூபா.13.50 பெறுமதியான முத்திரையுடன் கீழ்க் காணும் விலாசத்திற்கு தபாலில் விண்ணப்பிக்கவும். தற்போது வெளிநாட்டிலுள்ளவர்களும் இதில் பங்குபற்றலாம். பெயர், முகவரி, இலங்கை முகவரியையும் எழுதியனுப்பவும். வெளிநாட்டிலுள்ளவர்கள் முத்திரையனுப்பத் தேவையில்லை.

TAURUS LANKA
P.O Box - 84, Kotte, Sri Lanka.
பதிவு எண் : W/C 3791

# மூதூர் பாதை திருத்தத்தான் அரசிடம் பணம் இல்லையா?

## பட்குப் பயண அவலம் இனிப்படமுடியாது என்கிறார்கள் மக்கள்

துன்பங்களைத் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் மூதூர் பிரதேசத்து மக்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு வரலாற்றுத் துயர நிகழ்ச்சியைச் சந்தித்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.

1993 ஆம் ஆண்டு தைத்திங்கள் 25ஆம் திகதி மூதூர் – திருமலை கடற்பயணத்தில் நூற்றுக்கும் அதிகமான மக்கள் ஆழ்கடலுக்குப் பலியானார்கள். அந்த அகோர நிகழ்ச்சியின் வடுக்கள் இன்னும் இம்மக்களின் உள்ளத்தை விட்டு நீங்கவில்லை.

மூதூர் – திருமலை கடற் பயணப் போக்குவரத்து துன்பம் இருக்கிறதே அது மூதூர் பிரதேசத்துமக்களுக்குப் பெரும் சோதனையாக நீடித்து வருகிறது.

யாழ் – திருமலை பயணிகள் கப்பல் சேவை மாதிரித் தான் இன்று மூதூர் – திருமலை கடற்பயணமும் மாறி வந்துக்கொண்டிருக்கிறது.

கப்பலை எதிர்பார்த்து யாழ் பயணிகள் திருமலையில் அங்கும் இங்கும் எங்குமாக அலைந்து திரிகின்றனர். லொட்ஜுகளிலும் மடங்களிலும் மாதக்கணக்கில் தங்குகின்றனர்.

அது போன்று மூதூரிலிருந்து திருமலைக்கு அலுவலகம் வரும் பயணிகள் அன்றைய தினமே சொந்த ஊருக்கு திரும்ப முடியாத நிலை ஏற்படுகின்றது. தினமும் சுமார் 1500 பேர் திருமலை–மூதூர் கடற்பயணச் சேவையைப் பயன்படுத்துகின்றனர். ஒழுங்கான பயணச் சேவை கிடையாது.

மூதூருக்கும் – திருமலைக்கும் இடையே கடற்பயணச் சேவையில் ஈடுபட்டிருந்த "சேருவில இரண்டு" என்ற சிறிய பயணிகள் கப்பல் பழுதடைந்திருப்பதால் மூதூருக்கான கடற் பயணச் சேவை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்குத் தமிழ் எம்.பி.க்கள் ஆளும் கட்சியில் இருந்து வருகிறார்கள். அமைச்சர்களும் அடிக்கடி வந்து போகிறார்கள். ஆனால், மூதூர் மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் திருமலை வந்து அன்றே சொந்த ஊர் திரும்பக் கூடிய வகையில் ஒழுங்கான பயணிகள் கப்பல் சேவையை நடத்த முடியவில்லையே!

அதனால் அன்று கடல் விபத்தில் அன்னையை இழந்த பிள்ளைகள், மனைவியை இழந்த கணவன், தமயனை இழந்த தம்பிமார், கணவனை இழந்த மனைவி எனப் பலதரப்பட்டோரும் பரிதவித்துத் துடித்த நிகழ்ச்சிகள் இன்றும் மாறாத வடுக்களாக நெஞ்சில் நிலைத்திருக்கின்றன.

மொத்தத்தில் இங்கு வாழும் ஒவ்வொரு வரினதும் குடும்பத்தில் யாராவது ஒரு உறவினரை இவ்விபத்தில் இழக்காதவர்கள் இல்லை என்று தான் கூறவேண்டும்.

எனினும் இந்த சோக நிகழ்ச்சிக்குப் பிறகாவது தமது போக்குவரத்துப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என மூதூர் பிரதேசத்து மக்கள் நம்பியிருந்தனர். விபத்து நடந்து எட்டு ஆண்டுகள் கடந்தும் இன்னும் அரச அதிகாரிகள் ஒழுங்கான திருப்தியான கப்பல் சேவையை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவில்லை. இது மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் அதிருப்தியையுமே ஏற்படுத்தியுள்ளது.

மூதூர் மக்களைச் சோதிக்கும் பயணிகள் கப்பல் (சேருவில இரண்டு) பழுதடைந்து பலமாதம். இந்த கப்பலை திருமலையில் உள்ள கடற்படைத்தளத்தில் வைத்திருக்க முடியாத நிலை. அதனால் கொழும்பு துறைமுகத்திற்கு இன்னொரு கப்பலின் துணையுடன் இழுத்துச் சென்றே அங்கு திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆனால், இன்னும் அரச அதிகாரிகள் கவனம் எடுப்பதாக இல்லை.

இப்போது இரண்டு சிறிய படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால், படகுச் சேவை அடிக்கடி துண்டிக்கப்படுகிறது. கடல் கொந்தளிப்பான காலங்களில் மக்கள் படும் அவதிகள் சொல்லுந்தரமன்று.

மேலும் 1993 ஆம் ஆண்டு ஜனவரியில்... நடந்ததைப் போன்ற பயங்கரம் இனிமேலும் இங்கு நடைபெறாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

இதற்கு மாற்று வழியாக மூதூர் கிண்ணியா பாதையைச் சீர் செய்து இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்திரமான தீர்வைக்காண முடியும்.

இதன் மூலம் தரை மார்க்கமாக பதினைந்து மைல்களுடன் திருமலையை மூதூருடன் இணைக்க முடியும்.

இதனைச் செய்ய மூதூர் – கிண்ணியா விற்கிடையே உள்ள மூன்று சிறிய ஆறுகளின் மீது பாலம் அமைத்து உரிய வசதிகளைச் செய்து கொடுக்கலாம். முன்னர் இவ்வழியாகப் பஸ் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இப்பொழுது தூர்ந்து அழிந்து போயிருக்கும் இவ் வீதியையும், துறைகளையும் திருத்தி முடித்தால் இவ்வழியாக மக்கள் சிரமமின்றிப் பிரயாணம் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும்.

கிண்ணியா மூதூருக்கு இடையே இத்தரை மார்க்க வழி இங்கு இருந்திருப்பின் நாம் கடந்த காலங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை அநியாயமாகக் கடலுக்குப் பலி கொடுத்திருக்க மாட்டோம்.

நடைபெற்ற இழப்பினை எவ்வகையிலும் ஈடு செய்ய முடியா விட்டாலும் இத்தகைய இழப்புக்கள் இனியேனும் நடைபெறாது தடுக்க சரியானதும் தீர்க்க தரிசனம் மிக்கதுமான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் இனியும் தாமதிக்காது மேற்கொண்டு உதவ வேண்டும்.

எத்தனையோ பல அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பல கோடிக்கணக்கான பணத்தை அரசாங்கம் வாரி இறைக்கிறது. மூதூர் பயண விஷயத்தில் மட்டும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளைக் காரணம் காட்டித் தாமதப்படுத்துவது எவ்வகையிலும் நியாயமானதல்ல.

முன்னர் துர்ப்பாக்கிய மரணங்கள் நடைபெற்றதற்குத் தனியார் இலாபநோக்கில் தரமற்ற படகுகளைக் கொண்டு சேவை நடத்தியதும் கடல் கொந்தளிப்பும் மட்டுமல்ல காரணம். இப்பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளைக் காற்றிலே பறக்க விட்ட அரசியல் வாதிகளும் அதற்குப் பொறுப்பு.

படகு விபத்து நடந்து எட்டு ஆண்டுகள்,கடந்து விட்ட போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்காததையிட்டு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். புதிய ஆண்டிலாவது இதற்கொரு விமோசனம் கிடைக்குமா என்று மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

— அ-அச்சுதன்

# சிரிப்பும் கோபமும் ஆட்டிப்படைக்கும் விதம்

சிரிப்பும் கோபமும் எம்மை ஆட்டிப்படைக்கும் விதம் சுவையானது.

சிரிப்பின் பெருமையைக் கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் மதுரம் தம்பதிஒரு பாட்டின் மூலம் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

வித்தியாசமான சிரிப்புகளை அபிநயித்துக் காட்டியும் அவர்கள் பாராட்டுப் பெற்றார்கள். "சங்கீதச் சிரிப்பு" என்று குறிப்பிட்டு ராக ஆலாபனையுடன் அவர்கள் சிரித்துக்காட்டியது சிறப்பாக இருந்தது.

இந்த வரிசையில் சிரிப்பின் சில வகைகள் பற்றி விளக்கம் தரப்படுகிறது.

கண்பார்த்துச் சிரிப்பவன் – காரியவாதி
காணாமல் சிரிப்பவன் – கஞ்சன்
கற்பனையில் சிரிப்பவன் – கவிஞன்
கோபத்தில் சிரிப்பவன் – வெறியன்
தெரியுமென்று சிரிப்பவன் – பசப்பாளன்
தெரியாதென்று சிரிப்பவன் – நடிகன்
இடம் பார்த்துச் சிரிப்பவன் – எத்தன்
எப்பொழுதும் சிரிப்பவன் – கோமாளி
தெரியாமல் சிரிப்பவன் – பைத்தியக்காரன்
ஓடவிட்டுச் சிரிப்பவன் – வஞ்சகன்
நீதியோடு சிரிப்பவன் – அறிஞன்
நிலை மறந்து சிரிப்பவன் – காதலன்
செயல் கெட்டுச் சிரிப்பவன் – பச்சோந்தி
செருக்குடன் சிரிப்பவன் – ஆண்டி
துன்பத்தில் சிரிப்பவன் – மனிதன்
சிரிப்பின் சிறப்பு இத்தகையது.

இனி கோபத்தின் விளைவு பற்றிப் பார்ப்போம்

கோபம்– இது ஒரு கணத்தில் அறிவை மங்கவைக்கிறது. ஒருவனை மிருகமாகவும் சில சமயத்தில் மாற்றிவிடும்.

நாம் ஒரு சில நொடிகள் கோபமாக இருக்கும் போது அந்தச் சக்தியின் வலுவைக்கொண்டு இரண்டு வாட்பல்ப் ஒன்றை எரிய வைக்கலாம் ஒரு நிமிடம் இரண்டு நிமிடங்கள் அல்ல. தொடர்ந்து 8 நிமிடங்கள் எரியவைக்கலாம். என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

கோபம் உடலில் இரசாயன மாற்றத்தையும் உண்டு பண்ணுகிறது. இரத்தத்தில் உள்ள கிளைக்கோஜனை குளுக்கோஸாக மாற்றுகிறது! எவ்வளவு சக்தி எரிக்கப்படுகிறது?

கோபத்தின் விளைவு பற்றி நோக்கும் போது கோபம் எம்மை ஆட்கொள்ளும் போதெல்லாம் எம்மைத் தவறான வழியில் அது இட்டுச் செல்கிறது என்பது புலனாகிறது.

சிவம். ஜெகஜோதி – இளம் ஊதாப்பூ


மனோதத்துவ வைத்தியம்
GENERAL PSYCHO THERAPHY
அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றிகொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr. P.ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் ஜனவரி 20 முதல் 28 வரை
DR.ARUMUGAM (S.A.M.P.) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No.10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 ... 072 609388
கல்முனையில் பெப்ரவரி 03, 04 திகதிகள்
T.M.M. பாமசி கல்முனை. T.P. 067-29329
வவுனியாவில் பெப்ரவரி 10, 11 திகதிகள்
VANNI INN ... T.P.072-664867
கடிதத் தொடர்பு: RESIDENT T.P. 065-24019
DR. P.ARUMUGAM
No.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA, SRILANKA.

# ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்கில் படைநகர்வுகள்




விடுதலைப் புலிகள் தாம் அறிவித்த ஒரு மாதகால ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தைக் கடந்த மூன்று வாரங்களாக அமுல்படுத்தி வருகிறார்கள்.

இன்னமும் சரியாக ஒரு வாரமே மீதமுள்ளது. இந்த நிலையில் அரசு தொடர்ந்து புலிகளின் யுத்த நிறுத்தத்தை நிராகரித்து வருகிறது.

பாரிய அளவில் இராணுவ நகர்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

புலிகளின் யுத்த நிறுத்தம் அரசுக்கு உள்ளூரிலும், சர்வதேச ரீதியாகவும் பல நெருக்கடிகளைக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கும், பெரும்பாலான அமைச்சர்களுக்கும் யுத்த நிறுத்தத்திற்கு சாதகமான பதிலை வழங்கி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கக்கூடும். ஆயினும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பிரதமர் மற்றும் பேரினவாதிகளின் "யுத்த மூலமான தீர்வு" என்ற நெருக்குதலுக்குத் தலைவணங்கி இனவாதப் பூதத்திற்குத் தீனி போட வேண்டிய ஓர் இக்கட்டான நிலைமையே இங்கு காணப்படுகிறது.

மறுபுறத்தில் புலிகளின் யாழ் நகரை நோக்கிய நகர்வு ஒருவாறு தடுத்து நிறுத்தப்பட்டது. அதன் பின் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் வெற்றி அளித்துள்ளன. இது புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என்ற மாயையை ஆட்சியாளர் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் புலிகளை இராணுவ ரீதியாக வென்று விடலாம் என்ற நப்பாசை அரசுக்கு எழுந்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் "கிடைத்த வெற்றிகள்" படையினருக்கு மனோபலத்தையும் அளித்துள்ளன.

கடந்த மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இராணுவ தளவாடங்களினதும், வெடிப் பொருட்களினதும் இறுதித் தொகுதி விரைவில் வந்து சேரவிருக்கிறது. இதனால் படைத் தலைமைகள் அளவிற்கு மீறிய தன்னம்பிக்கை கொண்டுள்ளன.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்தால் அது படையினரின் உற்சாகத்தையும் போரிடும் உளவியல் வலிமையையும் தணித்துவிடும் என்று அரசு அஞ்சுகிறது.

ஆனையிறவைப் புலிகள் வெற்றி கொண்டதன் மூலம் அரசு இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், மற்றும் சர்வதேச பிரசார ரீதியாகவும், தலைகுனிவையும், பின்னடைவையும் சந்தித்தது. அதனைச் சீர்செய்யப் படைத்தரப்பு மீண்டும் ஆனையிறவைக் கைப்பற்ற வேண்டி இருக்கிறது.

இதுபற்றி ஏற்கனவே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பலகல்லவும் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றனர். கடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் மேடைகளில் பிரதமர் உரையாற்றுகையில் படையினர் (அக்டோபர் 10) தேர்தல் தினத்திற்கு முன்னர் ஆனையிறவைக் கைப்பற்றி விடுவர் என்று கூறியிருந்தார்.

இலங்கையின் 16 ஆவது இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் பலகல்ல கடந்த ஆகஸ்ட் 25 ஆம் திகதி பதவியேற்றார்.

"வடபகுதியில் புலிகளிடம் இழந்த பகுதிகளைக் கைப்பற்றுவது இராணுவத்தின் முக்கிய கருமங்களில் ஒன்று. இதில் ஆனையிறவும் அடங்குகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

கள நிலைமையை நன்கு அறிந்த போர் வீரன் என்பதாலேயோ என்னவோ அவர் காலக்கெடு எதனையும் விதிக்க முடியாது என்று கூறியிருந்தார். அவர் கூறியது போன்று இராணுவம் இழந்த பல பகுதிகளைக் கைப்பற்றி வருவதால் அதே அடிப்படையில் ஆனையிறவையும் பாரிய சுடுகலன்களின் உதவியுடன் கைப்பற்ற முயற்சி செய்யலாம்.

அதனால்தானோ என்னவோ யாழ் மாவட்டத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தின் கட்டளையமைப்பில் சில மாற்றங்களை இராணுவத் தளபதி மேற்கொண்டிருக்கிறார்.

இதுவரை காலமும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் (Director Operations) பிரிகேடியர் நிசங்க விஜேசிங்க. இவர் இலங்கை இராணுவத்தின் 53 ஆவது அணியின் பிரதிக் கட்டளையிடும் அதிகாரியாக (Deputy General Officer Commanding) இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் செல்கிறார்.

இவரது முன்னைய இடத்தை நிரப்புவதற்கு பட்டலந்த இராணுவக் கல்லூரியின் பிரதி கமாண்டர் பிரிகேடியர் நிமால் ஜெயசிங்க தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல பிரிகேடியர் ரீ.ஆர்.டி. சில்வா பட்டலந்த இராணுவக்கல்லூரியின் பிரதிக்கமாண்டராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார்.

இம் மாற்றங்கள் பாரிய படைநகர்விற்கு முன்னரான முன்னேற்பாடாகக் கருதப்படலாம். இதே வேளை இலங்கை இராணுவத்தின் அலுவலர்கள் பிரதானியும் (Chief of Staff) சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவருமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஓய்வு பெற இருக்கிறார். இவர் ஜனவரி 31 ஆம் திகதி தனது ஓய்வு பெறும் வயதான 55 வயதைப் பூர்த்தி செய்கிறார்.

- புலிப்போராளிகளின் குதூகலம்



யாழ் நகரம் நோக்கிய புலிகளின் வேகமான நகர்வை, அப்போதைய யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக விளங்கிய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சேர்ந்து தடுத்து நிறுத்தியவர் ஜானக பெரேரா. படைகளுக்குத் தக்கதொரு தலைமையை இவர் வழங்கியிருந்தார். ஜனாதிபதியால் பதவி நீடிப்பு வழங்கப்படாத காரணத்தாலேயே ஓய்வு பெறுகிறார்.

எதிரியின் உண்மையான பலத்தையும், களநிலைமையையும் படைத்தரப்பு சீர்தூக்கி ஆராயவில்லை. அண்மையில் ஏற்பட்ட வெற்றிக் களிப்பினால் தவறான ஒரு கருத்தைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

அதாவது, விடுதலைப் புலிகள் உண்மையிலேயே பலவீனமான நிலையில் தான் யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்களா?

அவர்கள் இராணுவத்தின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் தான் தமது நிலைகளில் இருந்து பின்வாங்குகிறார்களா?

இவற்றை இராணுவ – அரசியல் தலைமைகள் ஆராயத் தயாராக இல்லை.

இராணுவத்தைப் பொறுத்த வரையில் புலிகளை யாழ் நகர எல்லையில் இருந்தும், தென்மராட்சியின் முக்கிய பகுதிகளில் இருந்தும் அப்புறப்படுத்தியது பாரிய வெற்றி. ஆட்சியாளரின் இந்த வெற்றி அவர்களின் பிரசார இயந்திரத்திற்குக் கிடைத்த கரும்பு.

ஆனால் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருவதால்தான் விலகிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் தமது ஆளணி வளங்களை விரயப்படுத்தாமல் பாதுகாத்திருக்கிறார்கள். அவற்றை மீளவும் திரட்டிப் படையினருக்கெதிராகத் தக்க தருணத்தில் பயன்படுத்தக் கூடியவர்கள் – இவை அரசினாலோ படைத்தரப்பாலோ எண்ணிப் பார்க்கப்படவில்லை.

புலிகளைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்த காலத்தை அவர்கள் சரியான முறையில் பிரசார யுத்தத்திற்கான துருப்பாகப் பயன்படுத்துகிறார்கள்.

இவ்விடைவெளியில் தமது போர் வீரர்களுக்குப் புதிய இராணுவ தந்திரோபாயத்திற்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் பயிற்சியும் அளித்து வருகிறார்கள்.

வன்னியில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி புலிகளின் விசேட தாக்குதல் படையணிக்கு பிரபாகரனே நேரடியாக விசேஷ இராணுவப் பயிற்சியினை வழங்கி வருகிறார்.

யுத்த நிறுத்த காலம் முடிந்த பின்னர் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை இது கோடிட்டுக் காட்டுகிறது.

அத்துடன் கடந்த சனிக்கிழமை புலிகள் வன்னியில் தமது வானொலி மூலம் விடுத்த அறிக்கை முக்கியமானது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ள தென்மராட்சிப் பிரதேசங்களில் பொதுமக்கள் மீளக் குடியேறுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று வானொலி அறிக்கையில் புலிகள் கேட்டிருக்கிறார்கள். தென்மராட்சிப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மிதிவெடிகள் விதைக்கப்பட்டுள்ளன. அவை ஓசையின்றி உயிர்களை உறிஞ்சவல்லன.

இப்பகுதிகளில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் யாவும் அகற்றப்பட்டு மக்கள் அங்கே மீண்டும் குடியமரும் சூழலை நாம் விரைவில் உருவாக்குவோம். அதுவரை அப்பகுதிகளில் மீண்டும் குடியேற்றத்தைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இராணுவம் பொது மக்களைப் பலிக்கடாக்களாக, மனித கேடயங்களாகப் பயன்படுத்துவதை அனுமதிக்க வேண்டாம் என்றும் புலிகள் தமது அறிக்கையில் கேட்டுள்ளனர்.

எது எப்படியிருப்பினும் கிளாலி – எழுதுமட்டுவாள் – பளை முதலான பகுதிகளைத் தங்களது முன்னரங்கக் காவலரண்களாகக் கொண்டுள்ள இராணுவம் ஆனையிறவை நோக்கி அடுத்த சில தினங்களில் நகர்வுகளை மேற்கொண்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனையிறவை நோக்கிப் படைநகர்வு ஒன்று மேற்கொள்ளப்படுமாயின் அது இலங்கை இதுவரை கண்டிராத மிகப் பெரிய யுத்தமாக வெடிக்கும். உயிர் இழப்புக்கள், அழிவுகள், அனர்த்தங்கள் மிக அதிகமாக இருக்கும்.

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.
முருங்கனில் சகல விவசாய உரவகைகள்,
கிருமிநாசினி மற்றும் பெயின்ற் வகைகள்
கட்டிடப் பொருட்கள் அனைத்துக்கும்
சுடர்ஒளி பத்திரிகை முகவர்
க. டொனேசன் அன் பிறதர்ஸ்
மெயின் வீதி,
முருங்கன்.
T.P:023.32604

★ எமது இனிய ★
தைப்பொங்கல்
★ வாழ்த்துக்கள்! ★
K.P.K.புத்தகசாலை
பஸ் நிலையம்
வவுனியா.

# மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் ஆழ் துயிலில்!

குடாநாட்டில் கைதுகள் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துவரும் வேளையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகம் செயற்பாடின்றி முடங்கிக் கிடப்பது ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு நிரந்தரமான ஒரு பிராந்திய இணைப்பாளரை நியமித்து அதன் பணிகளை முடுக்கி விடுமாறு "சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு" என்ற அமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுக்களின் தலைவரிடம் கேட்டிருக்கிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் அதன் பணிகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் சுறுசுறுப்பாக இருந்தன. பின்னர் படிப்படியாக அதன் செயற்பாடுகள் ஓய்ந்து முடங்கிப் போய்விட்டன.

கைது செய்யப்படுவோர் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்று அவற்றைப் புத்தகத்தில் பதிந்து வைப்பது மட்டுந்தான் அதன் பணி என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருப்பது கவலைக்குரிய விடயமே.

படையினரால் கைது செய்யப்படுவோருக்கு அதன் பின் என்ன நடக்கிறது என்பது தொடர்பான விவரங்களைக் கள ஆய்வுப்பணி மூலம் சேகரித்து உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டியதும் ஆணைக்குழு அதிகாரிகளினது முக்கிய பணி ஆகும். ஆனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் இத்தகைய பணிகளை மேற்கொள்ள ஆட்கள் இல்லை.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக அங்கு நிரந்தர இணைப்பாளர் ஒருவர் இன்றியே அது இயங்குகின்றது. கள ஆய்வை மேற்கொள்ள எவருமே இல்லை. நிரந்தர இணைப்பாளரது கடமையை வேறு ஒருவர் கவனித்து வருகிறார். காங்கேசன்துறைத் தடுப்பு முகாமுக்குச் சென்று கைதிகளைப் பார்வையிடுவதைத் தவிர வேறு முக்கிய கடமைகள் அங்கு இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

ஒரு நிரந்தர இணைப்பாளரையும், நான்கு ஆய்வு அதிகாரிகளையும் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்ற ஆணைக்குழு அதிகாரிகள் எவரும் முன் வருகிறார்கள் இல்லை என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. தெற்கில் இருந்து வரும் ஒருவர் தங்கிப் பணியாற்ற முடியாத நிலைமை யாழ்ப்பாணத்தில் இருக்கிறதாம்?.

அப்படியாயின் அங்கு சிவில் நிர்வாகம் செயற்படுவதாகவும், மனித உரிமைகள் பேணப்படுவதாகவும் அரசு பிரசாரம் செய்வதை எப்படி ஏற்க முடியும்?

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்படுவதாகக் காட்டிக் கொள்வதற்காகவே மனித உரிமைகள் ஆணைக்குழுக்களை அரசு நிறுவியது. நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்த ஆணைக்குழு அலுவலகங்கள் போதிய வசதிகளுடன் இயங்குகின்றன.

ஆனால் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மனித உரிமைகள் மிக அப்பட்டமாய் மீறப்படுகின்ற - பயங்கர சூழல் நிலவும் குடாநாட்டில் இந்த அலுவலகம் அழுது வடிந்துகொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பேணுவது என்பது வெறும் கண்துடைப்பு மட்டும்தான் என்பதற்கு இதுவே நல்ல உதாரணம் அல்லவா?

## பல்கலையில் 'பொங்குதமிழ்'

யாழ்ப்பாணத்தில் இம்முறை தைப்பொங்கலைத் தொடர்ந்து தமிழ் பொங்கி எழப்போகிறது. எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நடைபெறவுள்ள பிரமாண்டமான எழுச்சி நிகழ்வுக்கு "பொங்கு தமிழ்" என மகுடம் சூட்டப்பட்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழக சமூகமும், யாழ்ப்பாணத்தில் செயற்படும் 42 மனித நேய அமைப்புக்களும் கூடி இந்தத் "தமிழ்ப் பொங்கலை" எழுச்சியுடன் கொண்டாட உள்ளன.

பொங்கு தமிழ் நிகழ்வில் யாழ் மக்கள் அனைவரையும் பங்குபற்றச் செய்வதற்கான ஏற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் முழு வீச்சில் ஈடுபட்டிருந்தனர்.

"தமிழரின் அபிலாஷை சுய நிர்ணய உரிமையே" என்ற விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்தும் முயற்சியில் பெரு வெற்றி கண்டுள்ள மாணவர்கள் நேரடியாக வீடுகளுக்குச் சென்று பொங்கு தமிழ் நிகழ்வுக்கு வருகை தந்து தமிழ் மக்களின் ஏகோபித்த அபிலாஷையை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்த அணிதிரளுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு சில சக்திகள் தடைகளை ஏற்படுத்தி வருகின்ற போதிலும் 17 ஆம் திகதி தமிழ் உணர்வு பொங்கி எழப்போவது உறுதி என்கின்றனர் மாணவர்கள்.

1974 ஆம் ஆண்டு இதே மாதத்தில் யாழ் முற்ற வெளியில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் நிகழ்வுகளை நினைவு கூரும் சமயத்தில் மற்றொரு தமிழ் எழுச்சி விழா யாழ் மண்ணில் நடைபெற இருக்கிறது.

## ஆலய நிர்வாகங்கள்

யாழ்ப்பாணத்தில் ஆலய நிர்வாகங்கள், சனசமூக நிலைய நிர்வாகங்கள் சார்ந்த பிணக்குகள், சச்சரவுகள் அதிகரித்து வருவதாக சமூகத் தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சமூக முன்னேற்றம், அபிவிருத்தி, கூட்டு முயற்சி என்பனவற்றுக்கு இலக்கணமாய் இயங்க வேண்டிய சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் நிர்வாகங்கள் தொடர்பான இழுபறிகள் வழக்கு விசாரணை வரை தொடர்கின்றன.

கலாசார சீரழிவு தொடர்பான மற்றொரு கவலைதரும் தகவல் இது.

யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னனின் பெயரில் நல்லூரில் ஒரு சனசமூக நிலையம் உள்ளது. எல்லைத் தகராறு, நிர்வாகப் பிரச்சினைகள் என்று நீண்ட காலம் செயற்படாமல் கிடந்த அந்த நிலையத்தை மீள இயக்கும் நோக்கில் அதன் நிர்வாகத்தை அதன் கையில்




எடுத்தது ஒரு குழு. புதிய நிர்வாக சபை ஒன்றைத் தெரிவுசெய்து அதன் விவரங்களை உள்ளூர் பத்திரிகையில் விளம்பரப்படுத்தியது அக்குழு. அந்தச் சனசமூக நிலையத்தைக் கடைசியாக நிர்வகித்தோருக்குச் செய்தி எட்டியது. புதிய நிர்வாகம் செல்லுபடியற்றது தமது நிர்வாகமே இன்னும் அதிகாரத்தில் உள்ளது என்று விழுந்தடித்துக் கொண்டு போட்டிக்கு விளம்பரம் பிரசுரித்தனர்.

புதிதாக நிர்வாகத்தை எடுத்துக் கொண்டோர் நிலையத்தில் தேநீர் விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்ய அதைக்குழப்புவதற்கு அடிதடியில் இறங்கியது பழைய நிர்வாகம். இரு சாராரிடையேயும் பகைமை வலுக்க ஊர் இரண்டு பட்டு நிற்கின்றது.

'ஒற்றுமையும் உண்மையுமே பலம்' என்ற மகுட வாக்கியத்தைக் கொண்டுள்ள அந்த சனசமூக நிலையம் தொடர்ந்து மூடப்பட்டுக்கிடக்கிறது. சனசமூக நிலையங்களைக் கண்காணிக்கும் உள்ளூராட்சி அதிகாரிகள் எந்தப் பக்கம் சார்வது என்று குழம்பிப் போயுள்ளனர்.

இது உதாரணத்துக்குக் காட்டப்பட்ட ஒரு சம்பவம்.

பொதுச் சேவை என்ற பெயரில் நிர்வாக அமைப்புகளில் பதவிகளுக்காக அடிபடும் போக்கு வளர்ந்து வருவது குறித்து கவலை எழுந்துள்ளது. ஆட்சியைத் தக்க வைக்கப் போராடும் அரசுகள் போன்று பொது அமைப்புகளின் நிர்வாகங்களையும் தொடர்ந்து தக்க வைக்கப் போட்டி வலுக்கிறது.

நிர்வாகப் பிணக்குகள் சம்பந்தமான பல வழக்குகள் குடாநாட்டு நீதிமன்றங்களால் தீர்க்கமுடியாத நிலையில் நீண்டு கொண்டிருக்கின்றன. பொது அமைப்புக்களில் நிர்வாகப் பதவிகளுக்கான போட்டி வலுவடைய இன்னொரு காரணமும் உண்டு.

ஒன்றிரண்டு பொது அமைப்புகளில் பதவிகளை வகித்தால் புகழும், பிரபல்யமும் மட்டுமின்றி சமாதான நீதிவான் போன்ற மலிவான பதவிகளும் வந்துசேர வாய்ப்புண்டு. குடாநாட்டில் சமாதான நீதிவான் பதவிகள் ஆள்பேர் தெரியாமல் அள்ளிவழங்கப்படுகின்றன.

நிர்வாகப் பதவிகளுக்கான அடிபிடிகளுக்கு இதுவும் ஒரு காரணம் எனச் சுட்டிக் காட்டுவோரும் உளர். புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக சனசமூக அமைப்புகள் போன்ற நிறுவனங்களுக்கும், ஆலயங்களுக்கும் இப்போது அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. நிர்வாகப் போட்டிகள் வலுப்பதற்கு இதுவும் மற்றொரு காரணம் எனக் கூறப்படுகிறது.

வாழ்க பொதுப்பணி! வளர்க தமிழர் கலாசாரம்!

## மேஜர் அர்ச்சுனன்

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பின் வீதியில் கடந்த மாதம் படையினருடன் இடம் பெற்ற ஒரு மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் அர்ச்சுனன் என்ற போராளி உயிரிழந்ததை விடுதலைப் புலிகள் உறுதி செய்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் புலிகளின் அரசியல் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்த மேஜர் அர்ச்சுனனுக்கு (இராசலிங்கம் பவன்- யாழ்ப்பாணம்) அஞ்சலி தெரிவிக்கும் பிரசுரங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

தூயவன், சிலம்பரசன் ஆகியோரின் வரிசையில் யாழ்ப்பாணத்தில் படையினருக்கு 'டிமிக்கி' கொடுத்து துணிச்சலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவர் மேஜர் அர்ச்சுனன். நீண்ட காலமாகப் படையினரால் வலை விரித்துத் தேடப்பட்டு வந்த இவர் இணுவில் பகுதியில் எதிர்பாராத மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்தார். இது குறித்த தகவல் ஏற்கனவே இப்பந்தியில் வெளியாகி இருந்தது.

## மிரட்டல்கள்

அநாமதேய தொலைபேசி மிரட்டல்கள், மொட்டைக் கடிதங்கள், அநாமதேய அமைப்புக்களின் பெயரில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தல் என்று ஒரு புதுவகைக் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் பரவி வருகிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலரினால் யாழ் பத்திரிகையாளர் ஒருவர் வளாகத்துக்குள் வைத்துத் தாக்கப்பட்டது தொடர்பாகப் பகிரங்கக் கண்டன அறிக்கையை வெளியிட்டதற்காக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் செ. கதிர்காமத்தம்பிக்கு தொடராகப் பல தொலைபேசி அழைப்புக்கள் மூலம் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

சில பல்கலைக்கழக மாணவர்கள் பத்திரிகையாளர்களுடன் முரண்படுவதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி பத்திரிகையாளருக்கும் பல்கலைக்கழக சமூகத்துக்கும் இடையே உள்ள இறுக்கமான உறவை - தொடர்பை சீர்குலைக்க மூன்றாவது சக்தி ஒன்று மேற்கொள்ளும் முயற்சியே இது என்று பத்திரிகையாளர் வட்டாரத்தில் பொதுவாக நம்பப்படுகிறது.

அடுத்தது அநாமதேய பிரசுரங்கள் பற்றிய தகவல்.

ஆபாசப் படங்கள் திரையிடுவதற்கு எச்சரிக்கை விடுக்கும் பாணியில் உள்ளூர் சினிமா திரையரங்கு உரிமையாளர்களுக்கு விடுக்கப்பட்ட அநாமதேய பிரசுரம் தொடர்பாக கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். மோசமான சமூக விரோதச் செயலுக்கு எதிராக அப்பிரசுரம் அமைந்திருந்ததால் அதைப் பலரும் வரவேற்றுப் பேசியதைக் காணக்கூடியதாய் இருந்தது.

"18 ஆம் நூற்றாண்டை நோக்கிய சிந்தனையில் யாழ் பல்கலைக்கழக மாணவர் சமூகம் செல்வதா?" என்ற தலைப்பில் நீண்ட அறிக்கை போன்ற மற்றொரு அநாமதேய பிரசுரம் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் வெளியாகி இருக்கிறது.

"சுதந்திர மாணவர் வட்டம் - யாழ் பல்கலைக்கழகம்" என்ற பெயரைத் தாங்கி வந்துள்ள அப்பிரசுரம் விடுதலைப்புலிகளின் கடந்தகால நடவடிக்கைகளையும் அவை தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்களது பிரதிபலிப்புக்கள் பற்றியும் விமர்சிக்கிறது. யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தற்போதைய செயற்பாடுகள் 18 ஆம் நூற்றாண்டை நோக்கிய பழைய சிந்தனைகள் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை, மதிக்கப்பட வேண்டியவை. ஆனால், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு முக்கிய திருப்பு முனையைச் சந்தித்து நிற்கும் இன்றைய காலகட்டத்தில்:-

தேசிய இனம் ஒன்றின் அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு ஓங்கி உரத்த குரலில் பறைசாற்றிட யாழ் பல்கலைக்கழகசமூகம் தயாராகியுள்ளதருணத்தில் இப்பிரசுரத்தை வெளியிட்டவர்களின் நோக்கம் என்ன என்பது கேள்விக்குரியதாக உள்ளது.

இதே பாணியில் மற்றொரு பிரசுரமும் யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்க அமைப்புக்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும் கிடைத்துள்ளது.

யாழ் கத்தோலிக்க சமூகம் இருளில் மூழ்கிறதா? எனத் தலைப்பிடப்பட்ட அந்த அநாமதேய பிரசுரம் யாழ் கத்தோலிக்க திருச்சபையின் அண்மைக்கால நடவடிக்கைகளை விமர்சிக்கிறது, கண்டிக்கிறது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக தீவிர அக்கறையுடன் செயலாற்றி வருகின்ற யாழ் பல்கலைக்கழக சமூகத்தையும் யாழ் கத்தோலிக்க சமூகத்தையும் இலக்கு வைத்துத் தாக்கும் மறைமுகப் பிரசுரப் போரில் மூன்றாவது சக்தி ஒன்று இறங்கியிருப்பதை இந்த அநாமதேய பிரசுரங்கள் புலப்படுத்துகின்றன.

- வலிகாமத்தான்

கவிதா களஞ்சியம்

எமது வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்களை சுடர் ஒளி வாயிலாக தெரிவித்துக்கொள்கிறோம்

உள்ளூர் உற்பத்தி, தானிய கொள்வனவு, விற்பனையாளர்கள்

திருமலை வீதி
வவுனியா.

தங்கள் வாடிக்கையாளர் அனைவருக்கும் தம் இனிய பொங்கல் வாழ்த்தினை தெரிவிப்பதுடன் சுடர் ஒளி மென்மேலும் பிரகாசிக்க வாழ்த்துகிறார்கள்

சுடர் ஒளி முகவர் மன்னார்

நித்தியா புக் சென்டர்
25, புதிய பஸ் நிலையம்
மன்னார்.
T.P.023-32346

நித்தியா கொமினிகேசன்
33, புதிய பஸ் நிலையம்
மன்னார்.
T.P.023-32357

# ரஜினி அரசியல் பிரவேசம் கருத்துக் கணிப்பு நடக்கிறது

தமிழ் நாட்டில் சட்ட சபைத் தேர்தல் இப்போ, அப்போ என்றிருக்கிறது. வழக்கம்போல் இம்முறையும் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தமிழ்நாட்டின் கட்சிகளிடையே சர்ச்சைக்குரிய நபராகவே காட்சியளிக்கிறார்.

இம்முறை ரஜினி புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்து தேர்தலில் குதித்து விடுவாரோ என்ற பயம் தமிழ் நாட்டின் கட்சிகளுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கிறது.

ரஜினியின் ரசிகர்கள் ரஜினியைப் புதிய கட்சி தொடக்கித் தேர்தல் களத்தில் குதிக்கும்படி வலியுறுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் வீடுவீடாகக் கையெழுத்து வேட்டையில் இறங்கியிருக்கிறார்கள். கருத்துக் கணிப்பு நடத்துகிறார்கள். இந்த முயற்சி அங்குள்ள அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ரஜினியை அரசியலுக்கு வரும்படி அவரது ரசிகர்களும், அரசியல் அநாதைகளாகிப் போன பல தலைவர்களும் காலம் காலமாக அழுத்தம் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றனர். ரஜினியோ கழுவுகிற நீரில் நழுவுகிற மீனாகவே இருந்து வருகின்றார்.

ஆயினும் தனது படங்களில் மட்டும் அவர் "நான் எப்போ எப்படி வருவேன் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் நிச்சயம் வருவேன்", என்றும்

"நேற்று கண்டக்டர். இன்று நடிகன். நாளை எப்படியோ?" போன்ற வசனங்களைத் தன் பாணியில் கூறிவருகிறார். ரஜினிக்கு அரசியலில் இறங்கும் எண்ணம் இருக்கிறதென்பதையே இது காட்டுகிறது என்பது பலரதும் எண்ணம்.

அதன் அடிப்படையிலேயே ரஜினி அரசியலிற்கு வரவேண்டுமெனப் பல தரப்பிலிருந்தும் அவ்வப்போது கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன. அப்போதெல்லாம் ரஜினி பிடி கொடாமல் பேசிப் பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தி வந்திருக்கிறார்.

இம்முறை நிலைமை அப்படியல்ல. ரஜினியின் அரசியல் திரைப்படம் தற்போது உச்சக்கட்டத்தை (கிளைமாக்ஸை) நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகவே பலரும் கருதுகின்றனர்.

தமிழ் நாட்டில் ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது அவரை வேறு எவராலும் துணிந்து எதிர்க்க முடியவில்லை. ரஜினிதான் எதிர்த்தார். அவரின் மிகப்பெரும் வெற்றிப் படமான 'பாட்ஷா' வின் நூறாவது நாள் விழாவில் வைத்து ரஜினி பேசிய பேச்சு தமிழக அரசியலில் ஒரு பூகம்பத்தையே ஏற்படுத்திவிட்டது. அந்தப் பேச்சுப் புதிதாகப் பல ரசிகர்களை மட்டுமன்றி, அவரைக் கிண்டலடித்தவர்களைக் கூட அவர் பக்கம் இழுத்துவிட்டது.

ஜெயலலிதாவின் (அ.தி.மு.க.) கட்சியிலேயே இருந்தவரும் முன்னர் எம்.ஜி.ஆரின் வலது கரமாக விளங்கியவருமான ஆர்.எம்.வீரப்பன்தான் 'பாட்ஷா' படத்தைத் தயாரித்திருந்தார். ஜெயலலிதாவைத் தாக்கி ரஜினி பேசியபோது ஆர்.எம்.வீரப்பனும் மேடையில் இருந்தார். அந்த ஒரே காரணத்தால் ஆர்.எம்.வீரப்பனைத் தனது கட்சியிலிருந்து ஜெயலலிதா துரத்தியடித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த ரஜினி தனது ஜெயலலிதா எதிர்ப்பைத் தீவிரப்படுத்தினார். சட்டசபைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் அது. ஜெயலலிதாவை மீண்டும் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர விடுவதில்லை என்று கங்கணம் கட்டி செயல்பட்டார் ரஜினி.


இந்தியாவின் பிரதமராக இருந்த நரசிம்மராவை ரஜினி சந்தித்தார். நரசிம்மராவின் கட்சியான இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுடன் இணைந்து போட்டியிடக் கூடாது. ஜெயலலிதா மீண்டும் முதல்வராக வர ஆதரவு தரக்கூடாது என்றெல்லாம் கோரிக்கை விடுத்தார். கன்னடக் காரரான ரஜினியின் கோரிக்கைகளுக்கு தெலுங்குக்காரரான நரசிம்மராவ் இணங்கவில்லை. ரஜினி முன் ஒப்புக்கு 'ஆம்' என்று தலையாட்டிவிட்டு, ரஜினி போனதும் ஜெயலலிதாவுக்கு ஆதரவு தருவதாக நரசிம்மராவ் அறிக்கை விட்டார்.

இதனால் கோபாவேசமடைந்த ரஜினி தனது வேலையைக் காட்ட ஆரம்பித்தார்.

ஜெயலலிதாவுடன் நரசிம்மராவ் கூட்டு வைத்ததால் அதிருப்தி அடைந்திருந்தவர்களும் ஜெயலலிதாவினால் அவமானப்பட்டிருந்தவர்களுமான தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ்காரர்களை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மூப்பனார் மூலம் ரஜினி ஒன்றிணைத்தார். புதிதாகத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் என்ற கட்சியை மூப்பனார் உருவாக்கினார்.

ரஜினியின் ஆசியோடும் கருணாநிதியின் பூரண விருப்பத்தோடும் அந்தக் கட்சியை தி.மு.க வுடன் இணைத்தார். தமிழ் மாநில காங்கிரஸ் தி.மு.க கூட்டணி தமிழ் நாட்டு மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அடுத்து வந்த தேர்தலில் கூட்டணி அமோக ஆதரவு பெற்று ஆட்சிப்பீடமேறியது. இந்த நடவடிக்கை ரஜினிக்குத் தமிழ் நாட்டில் கிங்மேக்கர் என்ற அந்தஸ்த்தைப் பெற்றுக் கொடுத்தது.



ஆனால் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் மூப்பனாரோ கருணாநிதியோ ரஜினியின் ஆதரவையோ, ஆலோசனைகளையோ எதிர்பார்க்க வில்லை. அவர்கள் தங்கள் பாட்டில் செயல்பட்டனர். தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதிலும் தங்கள் கட்சிகளை வளர்ப்பதிலுமே கவனம் செலுத்தி வந்தனர்.

ஜெயலலிதாவை எதிர்க்கவென ரஜினியின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மாநில காங்கிரஸ் அடுத்து வந்த தேர்தல்களில் ஜெயலலிதாவை ஆதரித்தது. இது ரஜினிக்குப் பெரும் ஏமாற்றத்தையும் சோர்வையும் கொடுத்தது.

அதனால் அடுத்து வந்த தேர்தல்களில் எவரையும் ரஜினி ஆதரிக்கவில்லை.

தி. மு.க. வின் வற்புறுத்தல் காரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி. மு.கவை ஆதரிப்பதாகப் பட்டும் படாமலும் இறுதி நேர அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கை அவரது வேண்டா வெறுப்பை வெளிக் காட்டி நின்றது. அதனால் ரஜினியின் "குரல்" அப்போது எடுபடாமலே போய்விட்டது.

தேர்தல்கள் நெருங்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ரஜினியை அரசியலுக்கு வரும்படி கோரிக்கைகள் கிளம்பும். சுவரொட்டிகள் ஒட்டப்படும். ரசிகர்கள் ரகளை பண்ணுவார்கள். பின்னர் எல்லாம் அடங்கிப் போய்விடும்.

ஆனால் இனியும் அவ்வாறு அடங்கிப் போகும் நிலையில் ரஜினி ரசிகர்கள் இல்லை. எதிர்வரும் மாநில சட்டசபைத் தேர்தலைத் தவறவிட்டால் இன்னும் 5 வருடங்கள் அடுத்த தேர்தலுக்கு காத்திருக்க வேண்டும். ரஜினி எப்போது அரசியலுக்கு வருவார் என்று இன்னும் காத்திருந்து அவருக்காச் சுவரொட்டி ஒட்டி பேனர் கட்டி அவரது படத்துக்கு விசிலடித்துக்கொண்டு காலத்தைக் கடத்த ரசிகர்கள் தயாராக இல்லை. இம்முறையும் ரஜினி அரசியலுக்கு வராவிட்டால் வேறு பிழைப்பைத் தேடிக்கொண்டு போகவே பெரும்பாலான ரசிகர்கள் விரும்புகிறார்கள்.

ரஜினியை அரசியலுக்கு அழைக்கும் இறுதிக்கட்ட வழிவகைகளை ரஜினி ரசிகர்கள் தற்போது தீவிரப்படுத்தி இருக்கின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன் கன்னியாகுமரியில் உள்ள ரஜினி ரசிகர்கள் "தலைவா அரசியலில் இறங்கு" என்று சுவரொட்டிகளை ஒட்டவைத்துள்ளனர்.

அதேவேளை தமிழக ரஜினிகாந்த் பட்டதாரிகள் நலப்பேரவை என்ற அமைப்பு அண்மையில் சேலத்தில் கூடித் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருக்கின்றது. "ரஜினி புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்து எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தமிழகத்தில் நல்லாட்சி அமைக்க முன்வர வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

இதில் திருப்புமுனை என்னவென்றால் அந்தத் தீர்மானம் குறித்த விவரங்கள் ரஜினிக்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் அதற்கு இதுவரை எதுவித மறுப்பும் வரவில்லையாம். அதனால் ரஜினி அரசியலுக்கு வரலாம் என்ற நம்பிக்கை ரசிகர்களுக்குத் துளிர் விட்டிருக்கிறது. அதனால் அவர்கள் புது உற்சாகம் பெற்று துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து தமிழக ரஜினிகாந்த் பட்டதாரிகள் சங்கச் செயலாளர் சீனிவாசப் பெருமாளிடம் தொடர்புகொண்டு கேட்டபோது "ரஜினி கட்சி ஆரம்பித்து அரசியலில் குதிக்கும்படி வலியுறுத்தும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு முழுவதும் கருத்துக்கணிப்பொன்றை ஆரம்பித்திருக்கின்றோம். ரஜினி கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புபவர்களின் பெயர், முகவரி, கையெழுத்து என்பன பெறப்பட்டு வருகின்றன. அவ்வாறு கையெழுத்திடுவோர் ரஜினியின் கட்சி உறுப்பினர்களாகக் கருதப்படுகின்றனர். இந்தக் கையெழுத்து வேட்டை முடிந்ததும் கையெழுத்திட்டோரின் எண்ணிக்கையைக் காட்டி "தலைவா இவ்வளவு ஆதரவு இருக்கிறது எனவே தலைமை ஏற்க வா என்று ரஜினியை அழைக்க உள்ளோம்" என்றார்.

திரைப்பட நடிகர்கள் வரிசையில் எம்.ஜி.ஆர் கட்சி ஆரம்பித்தார். தேர்தலில் குதித்தார். பெரும் வெற்றி பெற்றார். அதைப் பார்த்து சிவாஜி, பாக்கியராஜ், ரி.ராஜேந்தர் போன்ற பலரும் கட்சி ஆரம்பித்தனர். பலர் சொத்துக்களை இழந்து கடனாளிகள் ஆகிப்போனார்கள். அவர்களது கட்சிகளும் அடையாளம் தெரியாமல் போய்விட்டன.

இவர்களைப் போல் எடுத்த எடுப்பில் கட்சி ஆரம்பித்து பந்தா பண்ணிவிட்டு காணாமல் போகாமல் ஆதரவு எப்படி இருக்கிறது என்று முன்கூட்டியே கணிப்பு எடுக்கவேண்டும். கட்சி ஆரம்பிக்கு முன்னரே உறுப்பினர்களைத் தெரிவு செய்து ஆழம் பார்த்து காலை விடவேண்டும். இதுதான் ரஜினி ரசிகர்களின் புதிய யுக்தி. இது ஏனைய கட்சித் தலைவர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

ரஜினி ரசிகர் மன்றங்கள் கட்டுப்பாடுகள் அதிகம் உடையனவாகவே உள்ளன. தலைமை விரும்பாத எதனையும் ரசிகர் மன்றங்கள் விரும்ப முடியாது. மன்றத்தைச் சேர்ந்த எவராவது தவறு செய்தால் அந்த ரசிகர் குறிப்பிட்ட ரசிகர் மன்றத்திலிருந்து நீக்கப்படுவார். ரசிகர் மன்றமே தவறான வழியில் போனால் உடனடியாக அந்த மன்றம் கலைக்கப்பட்டுவிடும். ரசிகர் மன்றத் தலைமை நடைபெற்றுவரும்.

கையெழுத்து வேட்டை, கட்சிக்கு ஆட் திரட்டல் போன்ற நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் இருந்து வருகிறது.

அதனால் இந்தக் கருத்துக் கணிப்பு, கையெழுத்து வேட்டை, ஆட் திரட்டல் எல்லாம் தலைமையின் விருப்பப்படியே நடக்கின்றன என்பது ஊகம். ஆக இம்முறை ரஜினி அரசியலில் நேரடியாகக் குதிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

**— சென்னையிலிருந்து வன்னி மைந்தன்**



என்ற ஆவலில் தமிழ்த்திரையுலகமே பரபரப்பாக எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால் சௌந்தர்யா விற்கு இதன் மூலம் மிகப் பெரிய பிரபலம் கிடைத்தது.

'படையப்பா' படத்தில் இவர் வெளிப்படுத்திய அமைதியான நடிப்பைப் பாராட்டாதவர்கள் இருக்கமுடியாது.

'சுத்திச்சுத்தி வந்தீக சுட்டு விரலால் சுட்டீக' என்ற பாடல் மூலம் சுப்பர் ஸ்டாரின் ரசிகர்களையும் தன் பின்னால் சுத்த வைத்தார்.

இதற்குப் பிறகாவது சௌந்தர்யா தமிழ்ப்படங்களில் கவனம் செலுத்துவார் என்று நினைத்தவர்கள் ஏமாந்தது தான் மிச்சம். சௌந்தர்யா பழைய படி தெலுங்கிற்குப் போய் விட்டார்.

தமிழில் எந்தப்படத்திலும் நடிக்கா விட்டாலும், தொடர்ந்து தமிழ் பேசிய தெலுங்குப்படைப்பான 'நாகத்தம்மன்' படத்தில் நாகதேவதையாக தமிழ் ரசிகர்களிடம் வந்தார்.

இப்போது 'கண்டேன் சீதையை', 'குருஷேத்திரம்' படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களைச் சந்திக்கப்போகிறார் சௌந்தர்யா.

இவை இரண்டும் தெலுங்குப்படங்கள் தமிழ் பேசி வந்திருக்கின்றன.

திறமையுள்ள அழகான நடிகை துருவ நட்சத்திரம் போல தூர இருந்து ஒளி தர வேண்டிய அவசியம் என்ன? அவர் தமிழில் அதிக கவனம் செலுத்த முயற்சிக்க வில்லையா? இவை தமிழ் ரசிகர் மனதில் மட்டுமல்ல,எம் மனதிலும் எழுந்த கேள்விகள். இக் கேள்விகளுக்கு இதோ அவரே பதிலளிக்கிறார்.

**கே:வணக்கம் சௌந்தர்யா, புதுவருட வாழ்த்துக்கள்.**

ப:வணக்கம்! உங்களுக்கும் எனது புதுவருட வாழ்த்துக்கள்.

**கே: எப்படியிருக்கிறது புதுவருடம்?**

ப:சந்தோஷத்தைத் தந்திருக்கிறது. தெலுங்கில் நான் பிஸியாக இருக்கிறேன். ஆனால் தமிழ ரசிகர்களைச்சந்திக்கப்போகும்

# கவர்ச்சி காட்டத் தயார் சௌந்தர்யா கூறுகிறார்

பொன்னுமணி அறிமுகப்படுத்திய நட்சத்திரம் சௌந்தர்யா. கார்த்திக்குடன் இவர் நடித்த 'நெஞ்சுக்குள்ளே இன்னாரென்று சொன்னால் தெரியுமா?' என்ற பாடல் காட்சியை ரசிகர்கள் இன்றும் நெஞ்சுக்குள் ஞாபகப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அன்று அவருடைய உதட்டுச்சுழிப்பில் விழுந்தவர்கள் பலர் இன்னும் எழுந்திருக்க வில்லை.

'பொன்னுமணி'யில் நடித்துக் கொண்டிருக்கும் போதே சௌந்தர்யா பல படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக வருவார் என்று தமிழ்த்திரையுலகினரும் பத்திரிகையா ளர்களும் ஆருடம் கூறினர்.

படம் வெளிவந்தது. சுமாராகவும் ஓடியது. எதிர்பார்த்தபடி சௌந்தர்யாவைக் காணவில்லை. அத்தோடு அவரை மறந்து விட்டு ரசிகர்கள் குஷ்பூ,சிம்ரன் என்று தம் ரசனையை மாற்றியபோது,

தெலுங்கில் முன்னணி நடிகையானார் சௌந்தர்யா . அவர் நடித்த சில தெலுங்குப்படங்கள் தமிழில் வெளிவந்து அவரை ஞாபகப்படுத்தின. 'சுப்பர் பொலிஸ்', 'வெள்ளி நிலவே', 'அம்மன்' ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. 'அம்மன்' படம் மூலம் தாய்க்குலங்களின் வரவேற்பையும் அவர் சம்பாதித்துக்கொண்டார்.

மீண்டும் சிறிது இடைவெளிக்குப் பின்னர் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் 'அருணாச்சலம்' படத்தில் நடிக்கும் அதிஷ்டம் சௌந்தர்யாவுக்குக் கிட்டியது. தொடர்ந்து சுப்பர் அக்டர் கமலஹாசனுடன் 'காதலா காதலா'வில் ஜோடி சேர்ந்தார்.

மீண்டும் பழைய பல்லவி. தமிழில் ஆளைக்காணவில்லை. ஆனால் தெலுங்கில் பல படங்களில் அசத்திக் கொண்டிருந்தார். இதே நேரத்தில் தான் மீண்டும் ரஜினியுடன் 'படையப்பா' பட வாய்ப்பு. 'படையப்பா' படத்தில் யார் ஹீரோயின்

அதிஷ்டம் புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே கிடைக்கப்போவது இரட்டிப்புச் சந்தோஷம்.

தெலுங்கில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ள 'தும்பதி நிலா' என்ற படம் 'கண்டேன் சீதையை' என்ற பெயரில் தமிழில் வெளிவந்துள்ளது. இதில் எனக்கு வெயிட்டான கரெக்டர்.

**கே:உங்களுக்கு இருக்கும் இயற்கை அழகு வேறு எந்த நடிகைக்கும் இல்லை என்கிறார்களே?**

ப:அது பார்ப்பவர்களின் ரசனையைப் பொறுத்தது. சிலர் முக அழகை விரும்புவார்கள். சிலர் கண் அழகை ரசிப்பார்கள். சிலர் உடல் அழகை



சௌந்தர்யா, [illegible]

விரும்பலாம். அது அவரவர் ரசனை.

**கே:தமிழில் அறிமுகமாகி இத்தனை வருடங்கள் ஆகியும் ஒரு நிலையான இடத்தைப் பிடிக்க முடியவில்லையே. அதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

ப:தெலுங்கில் நான் அதிக படங்களில் நடித்துக்கொண்டிருப்பதனால் தமிழில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. அதிக நாட்கள் ஆந்திராவிலேயே தங்கி விடுவதனால் என்னைப் பிடிப்பது தமிழ்த்தயாரிப் பாளர்களுக்கு சிரமமான காரியமாக இருந்திருக்கலாம்.

**கே: இடையிடையே வந்தாலும் தமிழ் ரசிகர்கள் அடையாளம் காணக்கூடியவராக இருக்கிறீர்கள். அது எப்படி?**

ப: சில படங்களில் நடித்தாலும் நான் நடித்த கரெக்டர்கள் மனதில் நிற்கக்கூடியவை.

**கே: 'படையப்பா' படத்தில் ரஜினியுடன், 'காதலா காதலா' வில் கமலுடன் என்று தமிழ்த் திரையுலக சாதனையாளர்களுடன் நடித்து விட்டீர்கள்.இதைப்பற்றி என்ன கூறப் போகிறீர்கள்?**

ப: அது எனது அதிஷ்டம் என்று தான் கூற வேண்டும். ரஜினி சாருடன் இரண்டு படங்களில் நடித்திருக்கிறேன். இது உண்மையில் ஸர்ப்ரைஸான விஷயம்.

**கே:தற்போது வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'கண்டேன் சீதையை' படத்தினைப்பற்றி பரபரப்பான பல செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இந்தப்படத்தின் கதாநாயகி என்ற முறையில் என்ன கூறப்போகின்றீர்கள்?**

ப: இந்தப்படத்தில் எனக்கு உருக்கமான குடும்பத்துப்பெண் கதாபாத்திரம். பெரியப்பா வீட்டில் வளர்ந்து கொண்டு இருக்கும் போது என்னை ஒரு குடிகாரனுக்கு பலவந்தமாகத் திருமணம் செய்து வைக்க முயலுகின்றனர். அதைத்தடுக்கும் ஒருவர் என்னைக் காப்பாற்றி எனக்கு வாழ்வு தருகிறார். கணவன்-மனைவி யாக சந்தோஷமாக வாழ்வு [illegible] நேரத்தில் ஒரு விபத்து [illegible]

**கே:உங்கள் கால்ஷீட்டுக்காக ஹீரோக்கள் தங்கள் கால்ஷீட்டுகளை அட்ஜஸ்ட் பண்ண வேண்டி ஏற்படுகிறதாமே?**

ப: [illegible]

**கே: சூப்பர் குட் பிலிம்ஸினரின் அடுத்த பிரமாண்ட தயாரிப்பான 'பாப்பா' வில் நீங்கள் தானே ஹீரோயின்?**

ப: [illegible] நடிக்கிறார்.

**கே: 'குருஷேத்திரம்' படத்தில் கூட நடித்த ஷில்பா ஷெட்டிக்கு நிகராக நீங்களும் கவர்ச்சி காட்டி நடித்து இருப்பதாகக் கூறப்படுகிறதே?**

ப: யாருடனும் ஒப்பிட்டுப்பேசுவதை நான் விரும்ப வில்லை. ஆனால் கதைக்குத் தேவைப்பட்டால் கவர்ச்சியாக நடிக்க நான் தயங்குவதுமில்லை.

**கே:நீங்கள் வீட்டில் சரியான சுட்டிப் பெண்ணாமே?**

ப: உண்மைதான்.

**கே: மலர்ந்திருக்கும் புத்தாண்டில் என்ன திட்டம் வைத்திருக்கின்றீர்கள்?**

ப:இந்த ஆண்டாவது நிறையத் தமிழ்ப்படங்களில் நடிக்கவேண்டும்.

**கே:விஜயகாந்தின் 'வாஞ்சி நாதனில்' முதலில் சௌந்தர்யா நடிப்பதாகச் செய்திகள் வெளி வந்தன. ஆனால் தயாரிப்பாளர் காஜா மைதீனின் உறவுக்காரர் ஒருவருக்கும் உங்களுக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக உங்களுக்குப்பதில் ரம்பா நடித்து வருகிறாராமே?**

ப: அப்படி எதுவுமில்லை. அந்தப்படத்தில் நடிக்க கால்ஷீட் கிடைக்கவில்லை.

# அஜித்திடம் லைலா கொஞ்சல்



லைலா

தீனா முரட்டுக்குண முள்ளவன். கற்பாறையிலும் நீர் கசிவது போல் அவன் மனதிலும் காதல் தோன்றியது.

சித்ரா என்ற தேவதை சொல்லிக் கொள்ளாமலே அவனது மனத்தினுள் நுழைந்தாள்.

இதைப்பற்றி தீனா நண்பனிடம் சொன்னபோது, "தீனா உனக்கு இந்தக் காலத்துப் பெண்களைப்பற்றிச் சரியாத் தெரியல்ல. அவங்க சாதுவான ஆண்களைத்தான் ரசிப்பாங்க. உன்ன மாதிரி முரட்டு ஆண்களை விரும்புறது இல்லை" என்று சொன்னான்.

இது தீனாவின் மனதைக் குழப்பவே அவன் நேரே சித்ராவிடம் சென்று "என்ன சித்ரா உங்களுக்கெல்லாம் சாதுவான பையன்களைத்தான் பிடிக்குமா?" என்று கேட்டான்.

அதற்கு அவள் சிரித்தபடியே

"எந்த முட்டாள் அப்படிச் சொன்னது. பொதுவா பொண்ணுங்களுக்கு வீரம் நிறைந்த ஆண்களைத்தான் பிடிக்கும் என்று சொல்கின்றாள்" தீனாவுக்கு நெஞ்சில் பால் வார்த்ததுபோல் இருந்தது. மகிழ்ச்சியாகச் சிரித்தான்.

இப்படியொரு காட்சி 'தீனா' படத்துக்காக படமாக்கப்பட்டிருக்கிறது. தீனாவாக அஜித்குமார். சித்ராவாக லைலா நண்பனாக சங்கர் நடித்தனர்.



அஜித்



# மாளவிகாவுக்கு விழுங்க ஹோட்டல் ஏன்?

மாளவிகா சென்னையில் வாடகை வீட்டில் குடியிருக்கிறார். ஆனாலும் வடபழனியில் நட்சத்திர ஹோட்டலில் அடிக்கடி ரூம் எடுத்து தங்குகிறாராம். வீடு எடுக்கு முன்னர் தான் ஹோட்டல் வாசம் இப்போது வீடு எடுத்த பின்னருமா? என்று கேட்டால்.

அவரவருக்கு என்னென்ன தேவையோ அதை யாரறிவார்? என்கின்றனர் கோடம் பாக்கத்து விஷயம் தெரிந்தவர்கள். யாரறிவாரோ இல்லையோ அஜய் அறிவாரா?

# மீண்டும் தமிழுக்கு வந்துவிட்ட சாக்ஷி

புதையலில் அறிமுகமாகி காணாமல் போயிருந்த சாக்ஷி மீண்டும் 'வாஞ்சிநாதன்' படத்தின் மூலம் தலையெடுத்திருக்கிறார்.

வெள்ளைத்தோல் இருந்தால் தமிழில் தாக்குப்பிடிக்கலாம் என்ற நிலை மாறி அழகு மட்டும் அல்ல கொஞ்சம் நடிக்கவும் தெரிந்தாலே தமிழில் தாக்குப்பிடிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதால் சாக்ஷி தெலுங்கு தேசம் போனார்.

அங்கும் சாக்ஷியின் கவர்ச்சிக்குத்தான் முக்கியத்துவம் இருந்ததே தவிர அவருக்கு நடிக்கக் கூடிய வேடங்கள் கிடைக்கவில்லை.

'வாஞ்சிநாதன்' படப்பிடிப்பில் சாக்ஷியைச் சந்தித்த போது, "என்ன போனமச்சான் திரும்பி வந்தார் என்ற கதையாக மீண்டும் வந்திருக்கிறீங்க" என்று கேட்டதும்,

"அதெல்லாம் பழைய கதை எப்படியும் 'வாஞ்சிநாதன்' மூலம் தமிழில் எனக்கொரு இடம் கிடைக்கும்" என்று கூறுகிறார்.

ரம்யா, ஷோபனா, மீனா போன்றவர்கள் தெலுங்கு தேசம் போய் திரும்பி வந்து தமிழில் காலூன்றியவர்கள் தான். சாக்ஷிக்கும் இடம் கிடைக்குமா? பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.





# பிரதியூஷாவின் கவலை

கடல்பூக்களில் அறிமுகமான பிரதியூஷாவை பிரதிக்ஷா என்றே அழைத்து பத்திரிகைகளும் எழுதி வருகின்றன. இதனால் பிரதியூஷா மிகுந்த கவலையில் இருக்கிறார்.

'பிரதியூஷா' என்றால் உதயகாலம். இப்படி நல்ல அர்த்தம் தொனிக்கும் என் பெயரைக் கண்டபடி எழுதி அர்த்தமே இல்லாமல் பண்ணி விட்டார்கள் என்று கவலை தெரிவிக்கிறார் அம்மணி.




# நான்கு நாயகிகள் அமைக்கும் படம்

முழுக்க முழுக்க பெண்களை வைத்து பிரியதர்ஷன் 'சிநேகிதியே' படத்தை எடுத்தார் அல்லவா? இப்போது டைரக்டர் ஜோமோன் 4 கதாநாயகிகளை வைத்து மலையாள படத்தை உருவாக்குகிறார்.

ஐஸ்வர்யா, நக்மா, இந்திரஜா, ரசிகா ஆகியோரே இந்த நாயகியராவர்.

# இனி இவர்கள்...!

* பாலசந்தர் இயக்கும் 'பார்த்தாலே பரவசம்' படத்தில் மாதவன் ஹீரோ. அதில் இன்னொரு ஹீரோவாக ஆகாஷ் நடிக்கிறார்.
* 'புகழ்' படத்தில் பிஸியாகியிருக்கும் சரத்குமார், அடுத்து 'கேசவன்' படத்தை முடித்துக் கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றார்.
* 'சிட்டிசன்' படத்தில் அஜீத்குமாரின் ஜோடியாக வசுந்தரா தாஸ் நடிக்கிறார்.
* முன்னாள் பிரதமர் தேவகௌடாவின் மகன் தயாரிக்கப்போகும் தமிழ்ப்படத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கப்போகின்றார்.



# ஒரே கேள்வி பதில்!

கேள்வி: 'ஹேராம்' என்ற உன்னதமான கலைப்படம் தோல்வியுற்றதனால் தான் கமல் 'ஆளவந்தான்', 'தெனாலி' போன்ற மசாலா படங்களில் நடிக்கின்றாரா?

பதில்: இருக்கலாம். ஆனாலும் ஒரு தோல்விக்குப் பிறகு வெற்றி நிச்சயம் என்பது யதார்த்தம். இதை ஏற்கும் தன்மையைத் தயார் படுத்திக் கொள்ளக்கூடிய மனோபலம் உள்ளவர் கமல்.

வசூல் படங்களில் நடித்தாலும் மறுபக்கம் வெற்றிக்காக முயற்சி செய்துகொண்டேயிருப்பார்.

# விஜய் தும்...தும் குத்துச்சண்டை

'பத்ரி' படத்தில் விஜய் குத்துச்சண்டை போடும் வீரராக நடிக்கப்போகிறார். இதற்கென உடலைத் தயாராக்கி வருகிறார்.

விஜய்க்கு ஜோடியாக பூமிகா என்ற கல்கத்தா அழகியும் சிம்ரனின் தங்கை மோனலும் நடிக்கிறார்கள். இவர்களுடன் விவேக், தாமு, ரியாஸ்கான், கிட்டி ஆகியோரும் நடிக்கிறார்கள். வில்லனாக மும்பை நடிகர் பூவேந்தர் அறிமுகமாகிறார்.



# திரை மறைவில்



சிம்ரன்

நண்டு வளையை விட்டு வெளியே வந்தது போல் ஒரு வழியாக 'ஸ்லிம்' ரன் நடிகையும் நடனத்துக்கே ராஜாவான சுந்தரமும் தமது காதலை ஒத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். பொது நிகழ்ச்சிகளில் பகிரங்கமாகக் கலந்து கொள்கிறார்கள். ஆனால் கூடவே சிவ பூஜையில் கரடியாக நடிகையின் வருங்கால மாமியாரும் கிளம்பி விடுகிறாராம்.

****

நறுமணம் கமழும் மலரின் பெயர் கொண்ட நடிகை 100 படங்களில் நடித்து முடித்து விட்டதற்காக நெருங்கியவர்கள் நடிகைக்கு விழா எடுக்கிறார்கள் அல்லவா? நடிகையோ எல்லோரிடமும் சகஜமாக பழகக்கூடியவர். ஆனாலும் முன்னணி நடிகைகள் பொறாமை காரணமாக, அந்த விழாவில் கலந்து கொள்ளவில்லையாம்.

இதில் 'ஸ்லிம்' நடிகையும் அடக்கம். அந்த நிகழ்ச்சியில் ஆட அம்மணியை அழைத்த போது 'பிஸி' என்று காரணம் காட்டி மறுத்திருக்கிறார்.

ஆனால் அம்மணி கையில் தெலுங்குப்படம் ஒன்றைத்தவிர வேறு ஒரு படமும் இல்லை என்பது அந்த வெங்கடேஸ்வரப்பெருமானுக்கே வெளிச்சம்.

****

ஆர்ப்பாட்டமே இல்லாமல் இரண்டு படங்களில் நடித்து முடித்திருக்கும் ஸ்ரீ என்ற திவ்யமான நடிகை சாதிக்கட்சித் தலைவர் ஒருவரின் கண்பிடியில் இருக்கிறாராம். அவருடைய ஆலோசனைப்படிதான் படங்களை ஒப்புக்கொள்கிறாராம். படப்பிடிப்பில் அம்மணியைக் கண்காணிக்க பூனைப்படை வேலையில் நுற்றர் படை அமைக்கப்பட்டுள்ளதாம். இந்த விஷயம் தெரியாமல் அம்மணியிடம் வாலாட்டியவர்கள் சிலர் மாட்டிக்கொண்டுள்ளனர்.

****



விவேக்

சேதையைக்கண்ட படத்தில் புத்திசாலி காமெடி நடிகரின் சீனை டிரக்கில் சேர்த்தாலும் சேர்த்தார்கள். படத்தில் நடிகரின் கொடிதான் பறக்கிறது. அல்வாவுக்குப்பெயர்பெற்ற இடத்தின் பெயரைக்கொண்ட படத்தில் நடிகர் திலகத்தைப்போல் பராசக்தி வசனம் பேசிய காமெடிக்காரர் இப்படத்தில் சின்னத்திரை நிகழ்ச்சிகளை நையாண்டி செய்து கிண்டிக்கிழங்கெடுத்து விட்டாராம். அதிலும் அரங்கம் நடத்தும் அரட்டையை ஒவர் டாக் செய்துவிட்டாராம்.

# ஊருக்குப் போகிறேன்

"மோகன்! எவ்வளவு காலத்துக்கு இப்படித் தனிய இருக்கப் போகிறாய்? உனக்கென்டொரு வாழ்க்கையைத் தேடிக்கொள்ளவேணும். எங்களப் பார்த்தியோ உன்னோடதானே இலங்கையிலிருந்து வந்தனாங்கள். கலியாணம் கட்டி பிள்ளையளும் பிறந்திட்டுது. நீ மட்டும் தான் கலியாணம் எண்ட நினைப்பே இல்லாம இருக்கிறாய். வயதும் ஏறிக்கொண்டே போகுது. இந்த வருசம் முடியிறதுக்கிடையில எண்டாலும் நீ கலியாணம் செய்துபோட வேணும். இல்லாட்டில் பிற்காலத்துக்கு சரியாய் கஷ்டப்படுவாய் மச்சான்"

நண்பன் கமலநாதனின் வார்த்தைகள் மோகனை சிந்திக்க வைத்தன. இதுவரையில் அம்மாவிடமிருந்து வந்த கடிதங்களில் ஒருவரிகூட தனது திருமணத்தைப் பற்றி அவள் எழுதவில்லை.

"ஏன் இன்னமும் எனது திருமண வாழ்க்கையைப் பற்றி அவள் சிந்திக்கவில்லை. இன்னமும் எங்கள் குடும்பத்திற்கு நான் செய்ய வேண்டிய கடமைகள் நிறையவே இருப்பதாக அவள் எண்ணுகிறாளோ?" அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

மோகன் எண்பத்தி மூன்றாம் வருடம் ஏற்பட்ட இனக்கலரவத்தோடு இலங்கையிலிருந்து பிரான்ஸிற்கு வந்தவன். அன்று தொடக்கம் இன்று வரை உறவுகளை எழுத்தின் வடிவிலேயே தரிசித்துக் கொண்டிருக்கிறான்.

அவன் வந்த பிறகு ஊரில் குடும்பத்தில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. அப்பாவின் மரணம். அக்காமாரின் திருமணம். தம்பியின் பட்டமளிப்பு விழா. அம்மாவுக்கு நீரிழிவு வியாதி என்ற வகையில் பல்வேறு மாற்றங்கள்.

அவன் பிரான்ஸிற்கு வந்தபோது இருபத்தியிரண்டு வயது இளைஞனாக மிடுக்காக இருந்தான். ஆனால் இப்போது தலை வழுக்கை விழுந்து அரைக் கிழவனாகி விட்டான். அவனுக்கு இப்போதெல்லாம் தனக்கு திருமணம் நடக்குமென்பதில் நம்பிக்கை குறைந்துவிட்டது.

"கடைசிக் காலம் எனக்கொரு வாழ்க்கைத் துணையிருந்தால் எவ்வளவு ஆறுதல். ஆனால் எனக்கினி கலியாணம் நடக்குமோ?" அவன் தனிமையாக இருக்கின்ற நேரங்களில் தன்னைத்தானே கேட்டுக்கொள்வான்.

மோகனின் ஆசை, கனவு, கற்பனையெல்லாம் சொந்த மண்ணைச் சுற்றி வட்டமிடும். யாழ்ப்பாணத்தில் அவனது சொந்த இடம் திருநெல்வேலி. அது அவன் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்த இடம்.

விக்கி, சோதி, சத்தியன், குமார் இவர்கள்தான் மோகனின் இணைபிரியாத நண்பர்கள். மாலை நேரங்களில் பிரதான வீதியிலுள்ள ஆலமரத்தின் கீழ் இவர்கள் தவறாமல் ஒன்று கூடிக் கதைப்பது வழக்கம். நாட்டின் சூழ்நிலை பல வழிகளிலும் மோசமடைந்து வருவதைப் பற்றி எப்போதும் கதைத்துக் கொள்வார்கள்.

விக்கி எப்போதும் "எங்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிடின் எங்கள் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். இதைத் தடுத்து நிறுத்துவதில் எங்கள் பங்களிப்பென்ன?" எனக் கேட்பான். அங்கேயுள்ளவர்களிடையே அமைதி நிலவும்.

சோதி அந்த அமைதிக்கு முற்றுப்புள்ளி வைப்பான். "எங்களால ஒண்டும் செய்யேலாது மச்சான்". சோதியின் பதிலால் விக்கி உணர்ச்சிவசப்படுவான்.

"நீ சொல்லுறது கோழைத்தனமான பதில் மச்சான்."

"நீ அப்பிடி நினைக்கலாம். ஆனால் நான் சொன்னது யதார்த்தமான பதில் மச்சான்" சோதி விக்கியின் வார்த்தைகளை மறுத்துரைப்பான்.

"நீ சொல்லுற பதில் எவ்வளவு காலத்துக்கு மச்சான் யதார்த்தமா இருக்கப்போகுது?" சத்தியன் சோதியைக் கேட்பான். சோதிக்கு அவன் கேள்வி நியாயமானதுதான் எனத் தெரியும். அதனால் "அதைப்பற்றி எனக்குத் தெரியாது மச்சான். நான் சொன்னது நிகழ்காலத்தைப் பற்றித்தான்." எதிர்காலம் எப்பிடியிருக்குமெண்டு எனக்குத் தெரியாது." அவன் தனது கருத்தை நியாயப்படுத்துவான்.

"மோகன் என்ன மச்சான் மௌனமாய் இருக்கிறாய்." குமார் மோகன் மீது தனது கவனத்தைத் திருப்புவான்.

"நான் என்னத்தை மச்சான் சொல்லுறது. எல்லாம் வெறுத்துப் போச்சு, இப்ப இலங்கையில் இருக்கிறதே எங்களப் போல ஆட்களுக்குப் பாதுகாப்பு இல்லாம இருக்கு. எந்தப் பேப்பரப் பார்த்தாலும் தமிழ் இளைஞன் சுட்டுக் கொலை, வெட்டிக் கொலை ஆகக் குறைஞ்சது ஒரு செய்தியெண்டாலும் இல்லாமல் இல்லை. இந்த நிலையில் நான் என்னத்தை மச்சான் சொல்லுறது." மோகனின் வார்த்தைகள் விரக்தியைச் சுமந்து வெளிப்படும். மோகனின் வார்த்தைகளைத் தொடர்ந்து அங்கே நிசப்தம் நிலவும். அந்த நிசப்தத்தைக் கலைக்க யாருக்கும் துணிவிருக்காது.


பெரும்பாலும் விக்கிதான் இத்தகைய நிசப்தம் நிலவும் சந்தர்ப்பங்களில் அதைக் கலைப்பான்.

இவ்வாறாக அவர்கள் காலம் கழித்துக் கொண்டிருந்தனர். எதிர்காலம் இருள் நிறைந்ததாகவே மோகனுக்கும் அவனது தோழர்களுக்கும் தோன்றிற்று.

1983ஆம் வருடம் ஆடி மாதத்தில் ஒரு நாள் மோகன், விக்கி, சோதி, சத்தியன், குமார் ஆகிய ஐவரும் அந்த ஆலமரத்தின் கீழ் சந்தித்துக் கொண்டனர்.

அன்று நெடுநேரமாக அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தனர். அன்றைய தினம் அவர்கள் கலைந்து செல்ல இரவு பத்து மணியாகிவிட்டிருந்தது. அதுதான் அவர்களின் ஆலமரத்தடி கடைசிச் சந்திப்பு.

அடுத்த நாள் விடிந்ததும் எங்கும் பதற்றம். தபால் பெட்டிச் சந்தியிலே கண்ணி வெடியில் சிக்கி பதின்மூன்று இராணுவத்தினர் பலி என்ற செய்தி வந்தது. அத்தோடு யாழ் குடாநாடு முழுவதிலும் ஊரடங்கு



—சுதாரஞ்சன்

உத்தரவு அமுலில் இருப்பதாக வானொலியில் அறிவிக்கப்பட்டது.

மோகன் வீட்டினுள்ளேயே முடங்கிக் கிடந்தான். அவனுக்கு ஏதோவொன்றை இழந்துவிட்டது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது.

"நாசமறுப்பாரால கடை கண்ணி சந்தையொண்டுக்கும் போகவழியில்லை." அப்பா சினந்துகொண்டார்.

மோகனுக்கு நண்பர்களோடு கதைக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அவர்கள் யாரும் இப்போது ஆலமரத்தடியில் இருக்கமாட்டார்கள் என்பதும் அவனுக்குத் தெரிந்தே இருந்தது.

தனது வீட்டிற்கு பத்து வீடுகள் தள்ளியிருந்த சத்தியன் வீட்டிற்காவது போய் சத்தியனைக்கண்டு கதைக்கத் திட்டமிட்டான். ஆயினும் அப்பா சாய்மனைக்கதிரையில் படுத்திருந்து அவன் நடவடிக்கைகளை இடைக்கிடை அவதானித்த வண்ணமிருந்தார். இதனால் உடனடியாக சத்தியன் வீட்டிற்குப் புறப்படுவதென்பது சாத்தியமற்றதாயிருந்தது.

சாதாரண சூழ்நிலையிலேயே மோகனைக் கண்டபடி வெளியே செல்ல அனுமதிக்க விரும்பாத அப்பா இந்த அசாதாரண சூழ்நிலையில் எவ்விதம் அனுமதிப்பார்? நிச்சயமாக அப்பா வெளியே செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்பதை அவன் நன்கறிவான். இதனால் தகுந்த சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருந்தான்.

அம்மா அப்பாவை சாப்பிட அழைத்தாள். அவர் சாய்மனைக் கதிரையில் இருந்து எழுந்து போனார். அதனைத் தொடர்ந்து மோகன் சத்தியன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

சத்தியன் வீட்டில் மோகனைக் கண்டதும் எல்லோரும் பதறிப்போனார்கள். சத்தியனின் தந்தை பதற்றம் நிறைந்த குரலில் கேட்டார். "தம்பி இந்த நேரம் ஏன்டா வெளிக்கிட்டனி. திரும்பி எப்பிடிப் போகப் போகிறாய். ஆமிக்காரர் கண்டா சுட்டுப் போடுவாங்கள்"

மோகனுக்கு அவருடைய கேள்வி எரிச்சலூட்டுவதாய் இருந்தது. அவன் கேட்டான். "சத்தியன் எங்கே?".

"அவனுக்கு நல்லகாய்ச்சல். படுத்திருக்கிறான் தம்பி" சத்தியனின் தாயாரிடமிருந்து வேதனையுடன் பதில் வந்தது.

சத்தியன் சாக்குக் கட்டிலில் படுத்திருந்தான். மோகன் சத்தியனின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். அனலாகக் கொதித்தது. "என்ன மச்சான் நடந்தது?" மோகன் மெதுவாகக் கேட்டான்.

சத்தியனின் முகத்தில் அச்சரேகைகள் படர்ந்தன. அவன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். பின்னர் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னான்.

"நேற்று நான் தப்பினது அருந்தப்பு மச்சான். நானும், விக்கியும் ஆடியபாதம் றோட்டில நிண்டு நோட்டிஸ் ஒட்டிக்கொண்டிருக்கேக்க ஆமிக்காரர் வந்திட்டாங்கள் மச்சான். நல்லகாலம் அவங்கள் எங்களப்பாக்கேல்ல. பாத்திருந்தா நேற்று நானும் விக்கியும் சவமாகியிருப்பம். கடவுள் காத்தது"

அவன் சொல்லிமுடித்தபோது அவனுடைய தந்தை அவ்விடம் நோக்கி விரைந்தார். அவர் அவசரத்திற்கு காரணம் தெரியாமல் மோகனும் சத்தியனும் அவரைப் பார்த்தவண்ணமிருந்தனர்.

அவர் பதற்றம் நிறைந்த குரலில் சொன்னார். "தம்பி! மோகன் ஆமிக்காரர் வீடுவீடாச் செக் பண்ணிக்கொண்டுவாறாங்களடா. இந்த நேரத்தில நீ இங்க நிண்டாச்சிக்கல். பின்வளவுக் காணியளால வீட்டுக்குமாறடாப்பா"

மோகனுக்கு முதலில் எதுவும் செய்யத்தோன்றவில்லை. ஆனால் ஏதாவது செய்தாக வேண்டிய நிலைமை. அவன் சிறிதுநேர நகர்விற்குப் பின்னர் பின்வளவுக் காணிக்குள் புகுந்து அவசரமாக நடந்தான்.

பின்வளவுக் காணியினுள் அடர்த்தியாக நின்றிருந்த பனைமரங்கள் அவனைப் பயமுறுத்தின. காவோலைகளின் உரசல்களும் அவனை நிறையவே பயமடைய வைத்தன.

அவன் வீட்டை அடைந்தபோது அப்பா சினங்கொண்டவராகக் கத்தினார்.

"இந்த ஊரடங்கு நேரத்திலயும் உனக்கு உலாத்தோடா சந்து பொந்தெல்லாம் ஆமிக்காரர் துவக்கை நீட்டிக்கொண்டு திரியிறாங்கள். சுட்டுக்கிட்டு விட்டாங்களெண்டால் தான் உனக்குப்புத்திவரும்".

அப்பா சொல்வதிலும் நியாயமிருப்பதை மோகன் நன்குணர்ந்து கொண்டதால் மௌனமாக இருந்தான்.

"தம்பிவந்து சாப்பிடப்பு" என அழைத்த அம்மாவை உற்று நோக்கினான் மோகன். அவள் கண்கள் கலங்கியிருந்தன. அவன் தன் மௌனத்தைக் கலைக்காமலேயே எழுந்து சாப்பிடப்போனான்.

பிரதான வீதியில் ஆமிட்ரக்குகள் இரையும் சத்தம்கேட்டது. அது அந்தப் பகல்வேளையிலும் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய சத்தமாக இருந்தது. அந்த வாகனங்களின் இரைச்சல் இப்போது மிக அருகில் கேட்டது. மோகன் சோற்றுக்கவளத்தை விழுங்க முடியாதவனாக இருந்தான். நெஞ்சில் பய அமிலம் மிகுதியாகச் சுரந்தது.

அங்கங்கே துப்பாக்கிகள் வெடித்தன. மோகன் அவசர அவசரமாக கையலம்பினான். நல்லவேளையாக மோகன் வீட்டிற்கு இராணுவத்தினர் வரவில்லை.

அம்மாவும் அப்பாவும் முற்றத்திலேயே ஆடாமல் அசையாமல் நின்றனர். தம்பி அம்மாவின் தோளில் அமைதியாக சாய்ந்திருந்தான். அவன் விழிகளில் இனம்புரியாத பயம் கலந்திருந்தது.

அக்காமார் அறைக்குள் முடங்கிக் கொண்டிருந்தனர். மோகன் அடுக்களைக் குள்ளேயே ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தான். நிறையவே வியர்த்திருந்தது. நேரம் போய்க்கொண்டிருந்தது. இராணுவ வாகனங்களின் சத்தம் வெகுவாகக் குறைந்து மறைந்துவிட்டிருந்தது.

அடுத்தநாள் காலை விக்கி என்ற விக்கினேஸ்வரன் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி மோகனுக்குக் கிடைத்தது. மோகன் பதறிப் போனான்.

அவனால் நம்பமுடியவில்லை. "நேற்றிருந்தவன் இண்டைக்கு.........." அவனால் மேற்கொண்டு எதையும் நினைக்க முடியவில்லை

விக்கியின் முகம் கண்களில் ஆடியது. கண்களில் நிறையக் கனவோடு இருந்தவன். முகத்திலே தாடியும் மீசையும் வளர்ந்து அவனை ஒரு போராளிபோல் காட்டியிருக்கின்றன.

அப்பா சொன்னார் "நேற்று ஆமிக்காரர் வரேக்குள்ள விக்கியன் நோட்டீஸ் ஒட்டிக்கொண்டு நிண்டிருக்கிறான். அவங்களக் கண்டுட்டு ஓடேக்குள்ள சுட்டுப்போட்டாங்கள். அவங்கள் தங்கடை கடமையைச் செய்வாங்கள் தானே. அவங்கள்ள ஏன் பிழை சொல்லுவான். தேவையில்லாமல் ஏன் வில்லண்டத்தை விலை கொடுத்து வாங்கவேணும்".

விக்கியின் அநியாய மரணத்திற்குப் பிறகு மோகன் நிறையவே பயந்துதான் போனான். வீட்டுப்படிகளைவிட்டு இறங்கவே பயமாக இருந்தது.

மோகன் செய்வதறியாது வீட்டுக்குள் முடங்கினான். ஜெயகாந்தன் நாவல்களில் அவனுக்கு இருந்த ஆர்வம் வெகுவாகக் குறைந்திருந்தது. காலம் கடந்து கொண்டிருந்தது. சாதாரணமாக அல்ல ரணங்களையும் வடுக்களையும் சுமந்து கடந்துகொண்டிருந்தது.

சத்தியன் உரிமைக்காக போராடுபவர்களுடன் இணைந்த செய்தி சில நாட்களில் கிடைத்தது. நாட்டில் நிச்சயமற்ற தன்மை மேலும் அதிகரித்தது. எப்போது என்ன நடக்கும் என்று சொல்லமுடியாது என்ற நிலை வலுப்பட்டது. இத்தகையதொரு நிலைமை மோகனை சொந்த நாட்டைவிட்டுப் புலம் பெயரவைத்தது.

பழைய பசுமையான, ரணங்கள் நிறைந்த சம்பவங்களில் ஒன்றிப்போயிருந்த மோகன் நேரத்தைப் பார்த்தான். இரவு 12.30 ஆகிவிட்டிருந்தது.

இப்போதெல்லாம் பின்னிரவில் தான் தூக்கம் வருகிறது. சொந்தமண்ணைப்பற்றிய நினைவுகள் உள்ளத்தை வாட்டின.

ஒரு கிழமைக்கு முன்னர் குமார் ஜேர்மனியிலிருந்து தொடர்பு கொண்டான். "மச்சான்!" என்று அழைத்தபோதே இருவருக்கும் கண்கலங்கிவிட்டது.

"எத்தினை வரிசம் கழிச்சு சந்திக்கிறம்" குமார் உணர்ச்சி வசப்பட்டான். உரையாடல் தொடர்ந்தது. தான்திருமணம் செய்து இரண்டு ஆண்குழந்தைகளுக்குதகப்பனாகி விட்டதாகவும் குழந்தைகளுக்கு தமிழ் பேசத் தெரியாதெனவும் பெருமைப்பட்டுக் கொண்டான் குமார்.

மோகன் இதுவரை திருமணம் முடிக்காமல் இருப்பதுபற்றி நிறையவே ஆச்சரியப்பட்டான். உரையாடலின் முடிவில் மோகனை விரைவில் திருமணம் முடிக்கும்படி வலியுறுத்தினான்.

மோகனுக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது குமார் நிறையவே மாறிவிட்டான். சொந்த மண்ணை, கலாசாரத்தை, பண்பாட்டை, வாழ்க்கைமுறையை மறக்கத்துணிந்து விட்டான்.

ஆனால் மோகனால் அதுமுடியவில்லை. இப்போதெல்லாம் சொந்தமண்ணின் மீதான அக்கறை அவனுக்கு அதிகரித்துவிட்டது.

"நான் இங்கேயே கலியாணம் முடிச்சு குழந்தையள் பிறந்து அதுகள் இந்தக் கலாசாரத்தில வளர்ந்து ............ அவன் சிந்தனை நீண்டது.

அவன் விக்கி, சோதி, சத்தியன், குமார் கூடிக் கதைத்த ஆலமரம் நெஞ்சில் நிறைந்துநின்றது. குளக்கரைகள், வயல்வெளிகள், ஆட்காட்டிகளின் ஓயாத ஓலம் இவையெல்லாம் மாறிமாறி ஞாபகத்திற்கு வந்தன. இறுதியில் ஒரு உறுதியான முடிவோடு உறங்கப்போனான்.

காலையில் மோகன் குமாருடன் தொடர்பு கொண்டான். மோகன் உறுதியான குரலில் சொன்னான். "மச்சான் நான் ஊருக்குப் போகப் போறன். அங்கதான் கலியாணம் செய்து நிரந்தரமா வாழப்போறன்" மறுமுனையில் மௌனம் நிலவியது. அது ஆச்சரியத்துக்கான மௌனம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அனைத்து வீட்டுக் கதவுகளும் ஒரேநேரத்தில் திறந்த அதிசயம்!

## 1974 யாழ். தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த மரணங்களின் நினைவலைகள்

தேரடிக்கு ஏற்கனவே வந்துவிட்ட லோகனும், டானியலும் சின்னாச்சியிடம் வாங்கிய கடலையைக் கொறித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது விநாசியரும், பரமலிங்கம் மாஸ்டரும் வந்தனர்.

அவர்கள் அமரும் முன்னரேயே டானியல் கேட்டான், "அண்ணை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு நீங்கள் போனனீங்களோ?"

27 வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் விநாசியரின் எண்ணத்தில் நிழலாடின என்பது அவரது முகத்தில் தெரிந்தது.

மாஸ்டரின் மனதும் பின்னோக்கி ஓடியது.

இதனால் ஏற்பட்ட மௌனத்தை விநாசியரின் குரலே கலைத்தது.

"அது ஒரு காலம் தம்பி, தமிழ்ச்சனம் ஒன்று பட்டு நிகழ்த்திய சாதனை அதில் நடந்த வேதனை இன்றும் போகேல்லை" என்ற அவர் ஒரு பெருமூச்சு விட்டார்.

விநாசியர் பழைய சம்பவங்களுக்குள் மூழ்கியதை உணர்ந்த மாஸ்டர் இளைஞர்கள் இருவருக்கும் தானே பதிலளித்தார்.

"இந்தக் காலத்துப் பிள்ளையளுக்கு அப்ப நடந்தது தெரியாது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டவர் விளக்க ஆரம்பித்தார்.

"1974ஆம் ஆண்டு 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தனிநாயகம் அடிகளார் தலைமையிலான குழு யாழ்ப்பாணத்தில் நடத்த ஆரம்பித்தபோதே முட்டுக்கட்டை போடப்பட்டது.

அப்ப இங்க அல்பிரட் துரையப்பா தான் மேயர். கொஞ்சப் பேர் மாநாட்டைக் கொழும்பிலை நடத்தி தமிழரின் உரிமைகளை மறுத்தவையையே தலைமை தாங்கவைக்க முயற்சி எடுத்தினம்.

ஆனால் அதுகளுக்கு அசைஞ்சு கொடுக்காம எங்கடை மண்ணிலேயே மாநாடு நடத்தப்பட்டது பெரிய சாதனை தான்" என்றார்.

"அதுமட்டுமே?" என்ற கேள்வியுடன் குறுக்கிட்ட சின்னாச்சி, "தென்னையும், வாழையும், கமுகும், பனையும் வெட்டிவந்து சந்திக்குச் சந்தி நிக்கவைச்சு மாவிலைத் தோரணங்கள் ரோட்டு முழுக்கக் கட்டி, மரங்களுக்கெல்லாம் மின்சார விளக்குகள் போட்டு.... ம்... மாநாடு நடந்த நாள்களிலை ஊரே சொர்க்க லோகம் போல இருந்தது" என்று மலரும் நினைவுகளில் மூழ்கினாள் சின்னாச்சி.

"அந்தச் சோடினைகள் மக்களால் ஒன்றுப்பட்டு ஒற்றுமையாக எழுச்சியோட செய்யப்பட்டது. அடக்க நினைச்சவையின்ரை வயித்தில அதுதான் புளியைக் கரைச்சது" என்று விளக்கமளித்தார் மாஸ்டர்.

அதுவரை மௌனமாக இருந்த விநாசியர் தொடர்ந்தார்.

"அதனாலே மாநாட்டில் கலந்து கொள்ள வெளிநாடுகளிலை இருந்து வந்தவையை இங்கை கால் வைச்சதும் விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பின சம்பவங்களும் நடந்தது.

நாங்கள் கட்டுக்கோப்பா இருந்ததால் மாநாடு தொடங்கி விமரிசையா நடந்தது.

நிறைவு நாளில் தமிழறிஞர்கள் உரையாற்றும் நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாண பொதுசன நூலகத்துக்குப் பக்கத்தில் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள திறந்த வெளி அரங்கைக் கேட்ட போது அனுமதி மறுக்கப்பட்டது.


அதனால் வீரசிங்கம் மண்டபத்தில் நிறைவுநாள் உரைகள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இரவு நிறைவு விழா நடந்தது.

அதுக்கு முதல் பின்னேரம் அலங்கார ஊர்திகள் பவனி வந்தன" விநாசியர் விட்டதை மாஸ்டர் கூறத் தொடங்கினார்.

"பவனி வந்த வாகனங்கள் கல்வியங்காட்டு பகுதியில் வந்த போது, ஜீப்பில் வந்த அவை ஒரு ஊர்தியில் எழுதப்பட்டிருந்த "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற வாசகத்தை மொழிபெயர்த்து யாரோ சொல்ல அதை உடனே அழிக்க வேணும் என்று நிண்டிச்சினமாம்.

அப்ப எங்கேயோ இருந்து ஓடி வந்த ஒரு தம்பி அந்த ஊர்தியிலை ஏறி நின்று, வாசகத்தை அழிக்கேலாது. அப்பிடியும் அழிச்சா ஊர்திகள் ஒரு அங்குலம் கூட அங்கேயிருந்து நகராது" என்று சொன்னபிறகு வேறு வழியில்லாமல் அவை வழி விட்டினமாம்.



# தேரடி அரட்டை

'சிவ'னுக்கே பாடம் சொன்ன 'குமாரன்' மாதிரி இருந்த தம்பி தான் அவர் என்று அப்ப கதை அடிபட்டது.

உரும்பிராயில் வாழ்ந்த அனுபவத்தால் சொன்னாள் சின்னாச்சி.

"இப்பிடித் தடைகளைத் தாண்டி ஊர்வலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வந்த போதுதான் அந்தச் சோகம் நடந்தது" சொல்லி நிறுத்திய மாஸ்டர். தோளில் கிடந்த துண்டை எடுத்து மடியில் போட்ட படி தொடர்ந்தார்...

"ரோட்டுக்குக் குறுக்கே மின்சாரக்கம்பி ஒன்றில் ஒரு ஊர்தியில் வைத்திருந்த அலங்கார வளைவுபட அதில் நின்று கொண்டிருந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் மின்சாரம் தாக்கி இறந்தார்கள்."

"இரவு நடக்கப் போறதுக்கு சகுனம் காட்டின மாதிரி எல்லே இது நடந்திருக்கு" என்றாள் சின்னாச்சி.

அவளைத் தொடர்ந்து கூறத் தொடங்கினார் விநாசியர்.

"அன்றிரவு யாழ்ப்பாணம் முற்றவெளியில் குடாநாடே திரண்டிருந்தது. எள் போட்டால் விழாத அளவுக்கு சனக்கூட்டம். அதனால், வீரசிங்கம் மண்டபத்துக்குள் நடந்த நிகழ்ச்சிகள் வெளியே வாசலுக்குப் பக்கத்திலை மேடை அமைத்து தொடர்ந்து நடந்தது.

மண்டபத்துக்கு முன்னாலை இருக்கிற ரோட்டிலை இருந்து முற்றவெளி மைதானம் முழுக்க சனம் இருந்து தமிழறிஞர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தது.

அப்ப தபால் கந்தோர் பக்கத்திலை இருந்த ஒரு மோட்டார் சைக்கிள் சனங்களை வேண்டுமென்றே எழுப்பி வழிவிடச் சொல்லி, அவையின்ரை ஊடாகப் போறதுக்கு முயற்சித்தது.

இதிலை கொடுமை என்ன என்றால், மோட்டார் சைக்கிளில் வந்தவர் தமிழ் அதிகாரி. சனத்தின்ரை எழுச்சியைப் பார்த்திட்டு அவர் வேறுபாதையால பொலிஸ் ஸ்டேசன் போய்ச் சேர்ந்தார்.

எங்களுக்கு எங்கடை ஆட்கள் தானே கெடுதல் செய்ய முன்னிற்கினம் அப்பவும் அப்படித்தான்" என்று விநாசியர் கூற, "'சேனாதி' பதிக்கு 'ராஜா' போல எல்லே அவர் வந்தவர்" என்று பொடி வைத்துப் பேசினாள் சின்னாச்சி.

அதன் பின்னர் நடந்ததை மாஸ்டர் கூறினார்.

"அதற்குப் பிறகு பொலிஸ் ஸ்டேசன் பக்கமிருந்து டிறக் ஒன்று வந்து நிற்க அதிலை இருந்து 'தொப் தொப்' என்று அவை குதிச்சினம்.

அப்ப மேடையிலை பேசிக் கொண்டிருந்தவர் யார் தெரியுமோ?" பதிலை எதிர்பாராது தொடர்ந்தார் மாஸ்டர்.

கடல் தாண்டி வந்திருந்த இஸ்லாமியத் தமிழ்ப் பேராசிரியர். அவர் உணர்ச்சி பொங்கப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சனம் டிறக்கில் வந்த ஆபத்தை உணர முதலே கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. தடியடியும் நடந்தது.

அவ்வளவு தான் எங்கும் அலறல் சத்தம். உயிரைக் கையில் பிடித்தபடி நாங்கள் ஓடினம். இந்தக் கலவரத்திலை தான் 9 அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தினம்"

நீண்ட நேரம் பேசியதால் மாஸ்டர் சிறிது மூச்சு வாங்க விநாசியர் கூறத் தொடங்கினார்.

"யாழ்ப்பாணத்து வீடுகளின்ரை கதவுகள் எல்லாம் ஒரே நேரம் திறந்தது அன்று தான். திசை தெரியாம ஓடி வந்தவர்களை உடனே உள்ளே அழைத்து உணவு கொடுத்து ஆறுதல் சொல்லி....." அன்று இருந்த ஒற்றுமையை எண்ணிப் பெருமைப்பட்ட விநாசியருக்கு பேச்சுத் தடைப்பட்டது. உதவிக்கு வந்த மாஸ்டர் "முதல் நாள் இரவு திசை தெரியாமல் ஓடிய போது பிரிந்து விட்ட உறவினர்களையும் நண்பர்களையும் அடுத்த நாள் காலை தேடித் திரிந்தவர்களால் நகரம் அல்லோல கல்லோலமானது.

அப்ப முன்பின் தெரியாதவர்கள் கூட ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறி பிரிந்தவர்களைக் கண்டு பிடிக்க உதவினதை எல்லாம் இப்ப நினைச்சுப் பார்த்தால் உடம்பெல்லாம் புல்லரிக்குது" என்றார்.

ஈழத்துத் தமிழர் வரலாற்றில் அழியாத சோகமாகப் பதிந்து விட்ட நாலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மரணங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்த இளைஞர்களின் முகங்கள் கல்லாக இறுகிக் கிடந்தன. உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் லோகன் கூறினான்.

"அன்று போலவே தமிழரின் சிறப்புக்கு முட்டுக்கட்டை போடுற தமிழர்களும் காட்டிக் கொடுக்கிற தமிழர்களும் இன்றும் இருக்கினம். எங்கடை உரிமைகளை சீர்குலைக்கிற ஆள்களும் நடமாடுகினம். இவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அந்தக் காலத்திலை கட்டப்பொம்மனைக் காட்டி கொடுத்ததாகச் சிவாஜியின் சினிமாப் படத்திலை காட்டிச்சினமே எட்டப்பன், அவன் எம் மாத்திரம்!.

எங்கடை விரலாலையே எங்கட கண்களைக் குத்துற வேலையளும் நடக்குது. அன்று போல் எங்களுக்குள்ளை ஒற்றுமையும், கட்டுக் கோப்பும் தான் இன்று இல்லை" முத்தாய்ப்பு வைத்தாள் சின்னாச்சி.

கனத்த நெஞ்சங்களுடன் அவர்கள் கலைந்தனர்.

எமது பொங்கல் வாழ்த்துக்கள்
பத்திரிகை, புத்தக விற்பனையாளர்
என். கே. புத்தக நிலையம்
40, ஸ்டேசன் வீதி,
வைரவ புளியங்குளம்,
வவுனியா
தொலைபேசி - 024-21654

எமது பொங்கல் வாழ்த்துக்கள்
பத்திரிகை, புத்தக விற்பனையாளர்
வாணி புத்தக நிலையம்
குருமண் காடு
மன்னார் வீதி,
வவுனியா.
தொலைபேசி -024-23337

எமது பொங்கல் வாழ்த்துக்கள்
S.V.R. அரிசி ஆலை
சின்ன புதுக் குளம்
வவுனியா

எமது பொங்கல் வாழ்த்துக்கள்
சின்பொன் பேக்கேஸ் அன் கொண்வக்சனரி
ராஜன் இன்டஸ்ரீஸ்
கைத்தொழில் பேட்டை
பூந்தோட்டம்,
வவுனியா.

# தோல்வியிலிருந்து மீட்பாரா அரவிந்த?

தென்னாபிரிக்காவிலிருந்து வந்த அவசர அழைப்பின் காரணமாக அரவிந்த டி சில்வா மீண்டும் இலங்கைக் கிரிக்கட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுடனான முதலிரு ஒருநாள் போட்டிகளில் தோல்வியைத் தழுவியதோடு இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 229 ஓட்டங்களால் தோல்வியுற்றது இலங்கை. தென்னாபிரிக்க அணி ஆகக் கூடுதான ஓட்ட வித்தியாசத்தில் வென்ற போட்டியாகவும் அது அமைந்தது.

இந்நிலையில் சகலதுறை வீரர் உப்புல் சந்தன காயம் காரணமாக தாயகம் திரும்ப நேரிட்டதால் அவருக்குப் பதிலாக அரவிந்தவை அணியில் சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

தொடரவுள்ள போட்டிகளில் வெற்றி பெறும் வழிகளை ஆராய்வதற்காக தேர்வுக்குழு உறுப்பினர் பிரண்டன் குருப்பு தென்னாபிரிக்கா சென்றுள்ளார்.

அவரோடு அணித்தலைவர், பயிற்றுநர், முகாமையாளர் ஆகியோர் கலந்தாலோசித்து சந்தனவுக்கு பதிலாக அரவிந்தவை அனுப்புமாறு கோரினர்.

வேகப்பந்து வீச்சுக்களை எதிர்கொள்வதில் அரவிந்த திறமையானவர். எனவே இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையைப் புலப்படுத்தி தோல்வியைத் தவிர்க்க அரவிந்த உதவுவார் என்பது அணி முகாமைத்துவத்தின் எதிர்பார்ப்பாகும்.

அண்மையில் இந்திய புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த கிரிக்கட் சூதாட்டம் தொடர்பான அறிக்கையில் அரவிந்த, அர்ஜுன ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன.


அரவிந்த

அதன் சிலநாட்களின் பின் அறிவிக்கப்பட்ட தென்னாபிரிக்கச் சுற்றுலாவுக்கான வீரர்களின் பட்டியலில் அரவிந்த இடம்பெறவில்லை.

'இதற்கு சூதாட்டக் குற்றச்சாட்டு காரணமல்ல. இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதே நோக்கம்' என அப்போது விளக்கம் கூறப்பட்டது.

தற்போது அரவிந்தவை அணியில் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்து அவருடன் தெரிவுக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தியபோது உடனடியாக அரவிந்த சம்மதம் தெரிவிக்கவில்லை.

நீண்டகாலமாகப் பயிற்சிகளில் கலந்து கொள்ளாததால் திடீரென சர்வதேசப் போட்டிகளில் பிரகாசிக்க முடியுமா என்பது பற்றி அரவிந்த சந்தேகம் தெரிவித்தார். ஆனால் இரண்டாவது தடவை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது அரவிந்த இணங்கினார்.

விரைவில் இங்கிலாந்துடனான சுற்றுப் போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளன. அத்தொடரில் அரவிந்த பங்குபற்ற விரும்பினால் அதற்காக அவரது திறமையை வெளிப்படுத்த தென்னாபிரிக்க விஜயம் அருமையான வாய்ப்பாகும் எனத் தெரிவுக் குழுவினர் சுட்டிக் காட்டினர்.

இதையடுத்து கடந்த வாரம் அரவிந்த இலங்கையிலிருந்து புறப்பட்டார். ஆனாலும் 3ஆவது ஒருநாள் போட்டியில் பங்குபற்ற உரிய தருணத்தில் அரவிந்தவால் போய்ச் சேர முடியவில்லை.

20ஆம் திகதி ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அரவிந்த விளையாடவுள்ளார். அத்துடன் ஓரிரு ஒருநாள் போட்டிகளிலும் அரவிந்தவுக்கு வாய்ப்பளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவின் முடிவுக்கு அவுஸ்திரேலியா எதிர்ப்பு

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கட் போட்டிகள் பெப்ரவரி மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளன.

3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகளில் இவ்விரு அணிகளும் பங்குபற்றவுள்ளன.

தொடர்ச்சியாக 15 டெஸ்ட் போட்டிகளில் வென்று ஸ்டீவ் வோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணி உலக சாதனை புரிந்துள்ளது.

ஆனாலும் இந்தியாவில் ஆஸியின் வெற்றித் தொடருக்கு முடிவு கட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 31 வருடங்களில் இந்தியாவில் ஒரு டெஸ்ட் தொடரிலும் அவுஸ்திரேலியா வெற்றிபெறவில்லை.

இந்நிலையில் திட்டமிடப்பட்ட 3 நாள் போட்டிகள் இரண்டை ஒன்றாகக் குறைக்க இந்தியா தீர்மானித்துள்ளது. ஒருநாள் போட்டி நடைபெறும் இடங்களிலும் மாற்றங்களைச் செய்துள்ளது.

ஏப்ரல் மாதம் சார்ஜாவில் நடைபெறவுள்ள ஒருநாள் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கு வசதியாக ஆஸி. அணியுடனான போட்டிகளை விரைவாக முடிப்பதே இந்தியாவின் நோக்கம்.


ஸ்டீவ்வோ

ஆனால் இப்போட்டிகளுக்கான கால அட்டவணை 6 மாதங்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டதெனவும் தன்னுடன் ஆலோசிக்காமல் அதை மாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் ஆஸி. கிரிக்கட் சபைத் தலைவர் மல்கம் ஸ்பீட் கூறியுள்ளார். இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்த இந்தியாவுக்குச் செல்லவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

இதே வேளை ஏப்ரல் மாதம் சார்ஜாவில் நடைபெறவுள்ள கொகா கோலா கிண்ணத் தொடரில் இந்தியா பங்குபற்ற இணங்கியுள்ளது. இத்தொடரில் பாகிஸ்தான் இலங்கை அணிகளும் பங்குபற்றுகின்றன.

அரசியல் காரணங்களால் பல சுற்றுப்போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாட இந்தியா மறுத்து வந்தமை தெரிந்ததே.

இந்திய- ஆஸி. போட்டிகளுக்கு வசதியாக தேவையானால் சார்ஜா போட்டிகளின் திகதிகளை மாற்றவும் ஏற்பாட்டாளர்கள் இணங்கியுள்ளனர்.

இதன்படி ஏப்ரல் 8,10,12,13,15, 17 மற்றும் 20ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறும். முதலில் பாக். இலங்கை போட்டிகளை நடத்தி, 12ஆம் 13ஆம் திகதிகளில் இந்திய அணி அடுத்தடுத்து இரு போட்டிகளில் பங்குபற்றும் விதமாக புதிய கால அட்டவணை அமைந்துள்ளது. முன்னர் ஏப்ரல் 2ஆம் திகதி போட்டிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

# சஹாரா போட்டியிலிருந்து ஈராக் வாபஸ்

முன்னணி கால்பந்தாட்ட அணிகள் பல பங்குபற்றும் சுற்றுப் போட்டியொன்று இந்தியாவில் நடைபெறுகிறது.

'சஹாரா மிலேனியம் கிண்ணத் திற்கான' இப்போட்டிகளில் பங்குபற்ற பதினாறு அணிகள் அழைக்கப்பட்டன.

ஆனால் இறுதி நேரத்தில் ஈராக் நாட்டு இதிலிருந்து விலகியுள்ளது. பிரதான வீரர்கள் பலர் பங்குபற்ற முடியாதிருப்பதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேறு அணிகளை பங்குபற்ற வைக்கவும் வழியில்லாததால் 'ஏ' குழுவில் 3 அணிகள் மட்டுமே விளையாடுகின்றன. இதனால் 'ஏ குழுவிற்கான போட்டிகள் குறைக்கப்பட்டதோடு கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இச்சுற்றுப் போட்டி 11ஆம் திகதியே ஆரம்பமானது.

இத்தொடரில் பங்குபற்ற பனாமா அணி சம்மதம் தெரிவித்ததது. ஆனாலும் அண்மையில் அவ்வணி பங்குபற்றிய போட்டிகளில் திறமை காட்டாததால் பனாமாவை அழைப்பதில்லையென இந்திய கால்பந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்தது.

ஜப்பான் அணி பல்கலைக் கழகங்களில் இருந்து வீரர்களைத் தெரிவு செய்துள்ளது. விரைவில் சீனாவில் நடைபெறவுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிக்கு தயாராவதே இதன் நோக்கமாகும்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விபரம்:

குழு ஏ- யுகோஸ்லாவியா, பங்களாதேஷ், பொஸ்னியா

குழுபி:- இந்தோனேஷியா, இந்தியா, உருகுவே, ஐஸ்லாந்து

குழு:-ருமேனியா, ஜோர்தான், ஹொங்கொங், கெமரூன்

குழு டி- ஜப்பான், சிலி, பஹ்ரெய்ன், உஸ்பெகிஸ்தான்

# போய்கொட் கேட்கும் மிகக் கூடுதல் ஊதியம்

பாகிஸ்தான் கிரிக்கட் சபை லாகூரில் புதிய கிரிக்கட் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையத்தில் இருவார கால பயிற்சி வகுப்பொன்றை நடத்துமாறு முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் ஜெஃப் போய்கொட் அழைக்கப்பட்டுள்ளார்.

பயிற்சி நடத்த இணங்கிய போய்கொட் இதற்காக 30,000 ஸ்ரேலிங் பவுண் (சுமார் 37 லட்ச ரூபா) ஊதியம் வேண்டுமெனக் கேட்டுள்ளார். பாக். கிரிக்கட் சபை அதிகாரிகளும் இதற்கு இணங்கி விட்டனர்.


போய்கொட

ஆனால் முன்னாள் கிரிக்கட் வீரர்கள், பத்திரிகையாளர்கள் பலர் இவ் வளவு பெருந்தொகை ஊதியம் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

"15 நாட்களுக்கு 30,000 பவுன்கள் பெறுமளவுக்கு பெறுமதியான கிரிக்கட் வீரர் எவரும் உலகில் இல்லை. தனது சொந்த நாட்டு வீரர்களைவிட போய்கொட்டிடம் அப்படி என்ன விசேடத்தை பாக். அதிகாரிகள் கண்டுள்ளனரோ தெரியவில்லை" என்கிறார் முன்னாள் பாக். அணித் தலைவர் முஸ்தாக் முஹம்மட்.

முன்னாள் அணித்தலைவரும் பயிற்றுநருமான இன்திகாப் அலாமும் இதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

ஆனால் பாக். கிரிக்கட் சபையின் தலைவர் தாரிக் ஸிபா போய்கொட்டின் நியமனத்தை ஆதரித்துப் பேசுகிறார்.

முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவரான போய்கொட் தற்போது வர்ணனையாளராகப் பணிபுரிகிறார்.

ஜனவரி 20ஆம் திகதி லாகூரில் இப்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. பெப்ரவரி 5ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை போய்கொட் விசேட பயிற்சி முகாமொன்றை நடத்த அழைக்கப்பட்டுள்ளார்.

ஜெஃப் போய்கொட்டிற்கு பதிலாக தென்னாபிரிக்காவின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் பட் சிம்கொக்ஸ், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் ஹோல்டிங் ஆகியோரும் இப்பதவிக்கான பரிசீலனையில் உள்ளனர்.


வாடிக்கையாளர்களுக்கு

எங்களது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

எங்களிடம்

+ மலிகைச் சாமான்கள் + பாடசாலை உபகரணங்கள்

+ தினசரி பத்திரிகைகள் + சகல விதமான சாப்புச் சாமான்கள்

+ கோழி இறைச்சி

எல்லாவற்றையும் குறைந்தவிலையில்பெற்றுக்கொள்ள

ராசலிங்கம்ஸ்

இல.101, மீதும்பிட்டிய, பசறை.

கிளை:

சந்திரலிங்கம்ஸ்

இல. 101/1, மீதும்பிட்டிய பசறை.


# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# குரொஞ்ஞேயை ஆதரித்துப் பாடல்

தென்னாபிரிக்க கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் ஹன்ஸி குரொஞ்ஞேயை ஆதரித்து பாடலொன்று இயற்றப்பட்டுள்ளது.

'ஹன்ஸி வி லவ் யு...' என்று தொடங்கும் இப்பாடலை தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பாடகர் டொம்மி டெல் பாடியுள்ளார்.

'இதயத்திலிருந்து' எனும் பெயரில் வெளியிடப்பட்ட இசை அல்பத்தில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

டொம்மி டெல்லின் முன்னுரையொன்றுடன் ஆரம்பமாகிறது இப்பாடல்,

'நண்பர்களே, தவறு புரிந்த ஒரு மனிதர், வீழ்ந்த நாயகன் என அவர்கள் இப்பொழுது கூறும் ஒருவரைப் பற்றி இப்பாடலை நான் எழுதியுள்ளேன் என்று அவர் கூறியுள்ளார்.

சூதாட்டக்காரரிடம் பணம்பெற்றுக்கொண்டு அணியை தோல்வியடையச் செய்ய ஒப்புக்கொண்டதால் கிரிக்கட் போட்டிகளில் பங்குபற்ற ஆயுட் காலத் தடைக்குள்ளாகியிருப்பது தெரிந்ததே.

அவமானத்தால் தற்கொலை செய்யவும் முயன்ற ஹன்ஸிக்கு இப்பாடல் புதிய தெம்பைக் கொடுத்துள்ளது.


குரொஞ்ஞே

அவரின் ஆதரவாளர்கள் பலரும் இப்பாடலைப் பாடிய டொம்மி டெல்லுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். அவருக்கு முதலில் நன்றி தெரிவித்தவர்களுள் ஹன்ஸியின் தாயாரும் ஒருவர்.

இப்பாடலால் மிகவும் நெகிழ்ச்சியுற்ற அவர் அண்மையில் குரொஞ்ஞேயின் பிறந்த நாள் பரிசாக இந்த இசைத்தட்டை வழங்கினார். தான் இதுவரைக்கால மும் பெற்ற பரிசுகளில் மிகச் சிறந்த பரிசு இது எனக் கூறினாராம் குரொஞ்ஞே.


எமது வாடிக்கையாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் இப்பொங்கல் திருநாளில் சுடர் ஒளி வாயிலாக இனிய வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்

ஏசியன் சன் டீவி ஸ்தாபனத்தார்

வவுனியா.

பொதுசன நூலகம்

# மலையகக் கல்விபாழ் பிரதேச வாதத்தால்!

## மத்திய மாகாணசபை உறுப்பினர் சிவலிங்கம் சாடுகிறார்

ஆரம்ப காலத்தில் மலையக ஆசிரியர்கள் நியமனத்தில் தவறான அணுகுமுறை, பிரதேசவாதம் பேசி நல்ல திறமையுடைய வடக்கு கிழக்கு ஆசிரியர்கள் கூட ஒதுக்கித் தள்ளப்பட்டார்கள். அதன் விளைவை மலையகம் இப்போது அனுபவிக்கிறது. கல்வி நிலை சீரழிந்துவிட்டது.

இப்படிக் கவலை தெரிவித்தார் மலையகக் கல்விமானும் முன்னாள் ஆசிரியரும் பத்திரிகையாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எம்.சிவலிங்கம்.

சேவை மனப்பான்மையுடன் பணியாற்றிவந்த வடக்கு கிழக்கு ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டது ஒருபுறம். மறுபுறத்தில் திருச்செந்தூரன், இரா.சிவலிங்கம் போன்ற மலையக ஆசிரியர்களின் சேவையும் இப்போது மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இவையெல்லாம் சேர்ந்துதான் மலையகக் கல்வியை அதல பாதாளத்திற்குத் தாழ்த்திவிட்டன என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

"மலையகத்தில் ஆசிரியர் நியமனங்கள், வேலையில்லாப் பிரச்சனையைத் தணிப்பதற்கும் அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களுக்கு சகாயம் செய்வதற்கு ஒரு கவசமாகவும் பயன்படுகின்றன. இது தவறு. ஆசிரியர் பதவி ஒரு தொழில் அல்ல. அது சமூகத்தை உருவாக்கும் ஒரு சேவை.

வியட்னாமில் ஒரு ஆசிரியரை நியமிக்கும் முன் சம்பந்தப்பட்டவரின் நடத்தை, அவரது குடும்பப் பின்னணி, சமூகத்தில் அவருக்குள்ள மதிப்பு முதலானவை பற்றிக் கிராம சேவகர்கள், ஊர் பெரியவர்கள் ஆகியோரிடம் விவரங்கள் அறியப்படுகின்றன. அதன் பின்னரே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டுதமிழ்க்கல்விநடவடிக்கைகளுக்குப்பல கோடிரூபாக்கள்வழங்கப்பட்டது.எனினும்வேண்டிய எண்ணிக்கையில்ஆசிரியர்கள்நியமிக்கப்படவில்லை. தொடர்ந்துஆசிரியர்பற்றாக்குறைஇருந்தேவருகிறது. தேவையானஎண்ணிக்கையில்ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல்பாடசாலைகளுக்குஉபகரணங்களை வழங்குவதில்எந்தநன்மையும்இல்லை"இப்படிச் சிவலிங்கம்மாகாணசபையில்சுட்டிக்காட்டினார்.

மலையகக் கல்வி நிலைமை, ஆசிரியர்கள் நியமனம் ஆகியவற்றில் மாகாண சபை அமைச்சர் முதல் அதிபர்கள், பெற்றோர் வரை பல மட்டத்திலும் கருத்து அறிய விரும்பினோம்.

மத்திய மாகாண தமிழ்கல்வி, சுற்றுலாத்துறை பெருந்தோட்ட உட்கட்டமைப்பு, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் வீ.இராதா கிருஷ்ணன் பின்வருமாறு கூறினார்:-

"ஆசிரியர்பற்றாக்குறையைப் போக்கநாம்பல முயற்சிகளைமேற்கொண்டோம். கடந்தஆண்டும் விண்ணப்பங்கள்கோரி, விண்ணப்பித்தவர்களில்ஒரு பகுதியினருக்கு ஆசிரியர்நியமனம்வழங்கி உள்ளோம். அப்போது விண்ணப்பித்தவர்களுள் மேலும் 400 பேருக்கு இந்த ஆண்டில் நியமனம் வழங்கக்கல்வி அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது. இவர்களுக்குக்கூடியவிரைவில் நியமனங்கள்வழங்கப்படும். மேலும் ஆசிரியர்களைநியமிக்க வசதி செய்ய வேண்டும்என்று கோரிக்கைவிடுத்துள்ளோம்" இப்படி அமைச்சர்இராதா கிருஷ்ணன்கூறினார்.

ஊவா மாகாணக் கல்வி அமைச்சர் எஸ்.சச்சிதானந்தனிடம் கேட்டபோது "உயர் வகுப்புகளுக்குப் போதிக்கக் கூடிய ஆசிரியர்கள் இங்கு இல்லை. இதனால் இப்போது இருக்கும் ஆசிரியர்களைச் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் கடமையில் அமர்த்தி அவர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இதே வேளை வெளி மாகாணங்களில் இருந்தேனும் தகுதியான ஆசிரியர்களைப் பெற முயற்சி செய்கிறோம்" என்று கூறினார்.

பிரபலமலையகத் தமிழ்ப் பாடசாலை ஒன்றின் அதிபரிடம் கேட்ட போது அவர் அதிர்ச்சியூட்டும் சில தகவல்களைக் குறிப்பிட்டார்.

"பெரும்பாலான மலையகப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் – அதிபர்கள் மத்தியில் புரிந்துணர்வும் ஒற்றுமையும் இல்லை. பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் எனப் பிரிந்து செயற்படுகின்றனர்.

சேவை மூப்பும், திறமையும் கொண்ட ஒருவர் முதலாம் தர அதிபராக வந்து விட்டால் பட்டதாரி ஆசிரியர்கள் அந்த அதிபரை மதிப்பதுமில்லை. அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இல்லை.

பாடசாலையில் பாடங்களை ஒழுங்காக நடத்தாமல் பாடசாலையை அவர்கள் தங்களுடைய உயர் படிப்புக்காக மையமாகவும், சில நேரங்களில் அரட்டை அரங்கமாகவும் ஆக்கிக் கொள்கின்றனர். இவர்கள் தம்மை நம்பி உள்ள மாணவர்களைப் பற்றி சிறிதும் கவலைப்படுவது இல்லை.

இப்படியான ஆசிரியர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுத்தால் அரசியல்வாதிகளும், சில உயர் அதிகாரிகளும் அவர்கள் பக்கம் இருக்கின்றனர். எம்மால் ஏதும் செய்ய முடியவில்லை. இதனால் அப்பாவி மாணவர்களின் கல்வியே பாதிக்கப்படுகிறது என்று அந்த அதிபர் கூறினார்.

பெற்றோருடைய கருத்து இது:-

"மலையகத்தில் கைகூப்பி வணங்கி வாழ்த்துக் கூறும் அளவுக்குச் சேவையுணர்வுடன் கடமை யாற்றும் ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இப்படியானவர்கள் சிலர் இருப்பதால்தான் மலையகத்தில் கல்வி ஓரளவு காப்பாற்றப்படுகிறது.

25 சத வீதமான ஆசிரியர்கள் மட்டுமே சேவை மனப்பான்மையுடனும், சமுதாய உணர்வுடனும் கடமையாற்றுகின்றனர்.

பலர் இந்த ஆசிரியர் சேவையை பொழுது போக்குவதற்கும், உதிரி வருமானம் பெறுவதற்கும் தமக்கு விலாசத்தை ஏற்படுத்திக் கொள்ளவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

ஒரு பகுதி ஆசிரியர்கள் வியாபாரத் தொடர்புடைய வர்கள். மற்றொரு பகுதியினர் அரசியல் வாதிகளின் மேடைப் பேச்சாளர்கள். இன்னொரு பகுதியினர் சொந்தமாக இசைக் குழுக்களை நடத்தி வருகின்றனர்.

அரசியல் மேடைகள், மாநாடுகள், பிறந்தநாள் வைபவங்கள், கலியாண வீடுகள், சடங்கு வீடுகள் எவற்றையும் இவர்கள் விட்டுவைப்பதில்லை.

ஆள் தட்டுப்பாடு ஏற்பட்டால் தமது மாணவர் களையும் இவர்கள் கச்சேரியில் சேர்த்துக் கொள்கிறார்கள். இப்படியான ஆசிரியர்களால் மலையகம் உருப்படுமா? என்று பெற்றோர்கள் பலர் கேட்கின்றனர்.

பொதுவாக இன்றைய மலையகக் கல்வி நிலை மிகவும் வேதனைக்கு உரியது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளிலும், ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகளிலும் சிறந்த பேறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைகளில் கோட்டை விட்டுவிடுகின்றனர்.

காரணம், விரல் விட்டு எண்ணக்கூடிய ஆசிரியர் களே உயர் வகுப்பில் கற்பிப்பதற்கு வேண்டிய அடிப் படைக் கல்வித்தகமைகளை உடையவர்களாக இருக்கின்றனர்.

மலையகம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் அங்கு கல்வி நிலைமை மேம்பாடு அடைய வேண்டும். இதற்குக் கடமைஉணர்வும், சேவை மனப்பான்மையும் உள்ள சிறந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். பிரதேச வாதங்களைக் கைவிட்டு சிறந்த ஆசிரியர்கள் எங்கிருந்தாலும் அவர்களைத் தேடிப்பிடித்து நியமிக்க வேண்டும் மலையக அரசியல்வாதிகள் தமது போட்டா போட்டிகளை மூட்டை கட்டி வைத்து விட்டு ஒன்றாக செயற்பட வேண்டும்.

– இரா. புத்திரசிகாமணி

மலையகக் கண்ணோட்டம்

# காசில்ரீ தோட்டத்தில் இராணுவ முகாம் ஏன்?

மலையகத்தில் சிவில் நிர்வாகம் சீராக இருக்கும் போது அங்கு நிரந்தரமாக இராணுவ முகாம் அமைப்பது அவசியமா? இது பொது மக்களின் சாதாரண வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

டிக்கோயா காசில்ரீ தோட்டத்தில் பாரிய இராணுவ முகாம் அமைக்கும் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ முகாம் அமைப்பது உடனே நிறுத்தப்பட வேண்டும் என்று பிரதான தொழிற்சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

ஹட்டன் டிக்கோயா நகரசபை வட்டத்தில் காசில்ரீ சந்தியில் பாரிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. கட்டட நிர்மாணப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முகாம் அமைந்துள்ள இடத்தில் இருந்தே பல தோட்டங்களுக்கான பிரதான பாதைகள் பிரிந்து செல்கின்றன. இதோடு கார்பெக்ஸ் தமிழ் வித்தியாலயமும் அமைந்துள்ளது. இத்தமிழ் வித்தியாலயத்தில் ஒஸ்போன், கார்பெக்ஸ், கிளவட்டன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

காசல்ரீ பிரதான சந்தியின் ஊடாகவே தமிழ் மாணவிகளும் தோட்டத்தில் தொழில் செய்யும் பெண்களும், தனியார் மற்றும் ஆடைத் தொழிற் சாலைகளுக்குச் செல்லும் இளம் யுவதிகளும் பிரயாணம் செய்து வருகின்றனர்.

தற்பொழுது சாதாரண ரோந்து சேவையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரால் இவர்களுக்குப் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. அவ்வப்போது தனிப்பட்டவர்களும் தொழிற்சங்கங்களும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்தும் அவை வெளிவராமல் அமுக்கப்படுகின்றன.

இப்பொழுது நிரந்தரமாகவே முகாம் அமைக்கப்பட்டால் இது விரும்பத்தகாத பல அசம்பாவிதங்களை உருவாக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

பிந்துனுவெவ, ஹட்டன், கினிகத்தேன பிரதேசங்களில் இடம் பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து மலையத்தில் இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டது.

மலையக தொழிற்சங்கங்களும் அரசியல் வாதிகளும் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளினால், இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதேயன்றி இராணுவம் அகற்றப்படவில்லை.

தலவாக்கலையில் வட்டகொடை லெமிலியர் தோட்ட பங்களாவில் இராணுவ முகாம் இயங்கி வருகின்றது. இங்கிருந்து வட்டகொடை, லிந்துல, தலவாக்கலை, பத்தனை பிரதேசங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகப் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கும் பிரதமருக்கும் அறிவித்தும் ஏதும் பயன் ஏற்படவில்லை. எனவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசியசங்கம் ஆகிய மூன்று பிரதான தொழிற்சங்கங்களும் ஜனாதிபதிக்கு கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

"ஜனாதிபதியைச் சந்தித்து இந்த இராணுவ முகாம் அமைக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்தும்படி வற்புறுத்தவிருக்கிறோம். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் வி.அய்யாத்துரை குறிப்பிட்டார்.

அரசுக்கு அனுசரணையாக இருக்கும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும், எதிர்க்கட்சியில் இருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திரசேகரனும் இந்தப் பொது விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்படுகிறார்கள். இது பலருக்கும் நம்பிக்கை ஊட்டுகிறது.

SRI KRISHNA STORES
Dealers in Fancy Goods / News Agent
அனைவருக்கும் எமது
தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள் !
No. 110
Ragala Bazaar, Halgranoya.
T.P.052 - 5322

# ரீன்சுகளிடம் இறுக்கம் வேண்டாமே!



பருவ வயதில் அடியெடுத்து வைக்கும் போது மாணவ, மாணவியரின் மனதில் பலவித மாறுதல்கள் ஏற்படுவது வழமை. இதனால் பலவற்றை நினைத்து மனம் அலைபாயத் தொடங்குகின்றது.

பாடசாலை வாழ்க்கை என்பது வசந்த காலம். நாம் எல்லோருமே பாடசாலை வாழ்க்கை மீண்டும் நமக்குக் கிட்டாதா என்று ஏங்குவது ண்டு.

பாடசாலை செல்லும் பருவத்தில் உள்ள உங்கள் பிள்ளைகளின் மனதில் நல்ல கருத்துக்களையும், பண்புகளையும் பெற்றோரும், ஆசிரியர்களும் பதிய வைப்பது மிகவும் அவசியம்.

ஒரு மாணவன் நல்ல முறையில் உருவாகப் பாடசாலையே அடிப்படையாக விளங்குகின்றது. அங்கு கட்டுப்பாடும், ஒழுக்கமும் ஒழுங்கான முறையில் போதிக்கப்பட வேண்டும். மாறாக இவற்றை எல்லை மீறிய கண்டிப்புடன் புகுத்தினால் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறினாலும் அந்தக் கசப்புணர்வைப் பிறரிடமும் காட்டுவர்.

இன்று பாடசாலையில் மாணவ—மாணவியர் சேர்ந்து படிப்பது என்பது பெற்றோரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்பம் முதலே இணைந்து படிப்பதனால் நட்புணர்வு ஆரோக்கியமாக விளங்கும்.

மாணவன் படிப்பில் மட்டுமன்றி, நல்ல பண்பு மிக்கவனாகவும் வளர்வதற்கு ஆசிரியரின் கவனிப்புடன் பெற்றோரின் துணையும் இருக்க வேண்டும்.

ஒரு பிள்ளையைப் போன்று மற்றப் பிள்ளை இருக்காது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தன் குறைகளை, சந்தேகங்களை ஆசிரியரிடம் எடுத்துக் கூறிப் பேசுமளவிற்கு ஆசிரியர் — மாணவர் உறவு முறை எளிமையானதாகவும், அன்பு நிறைந்ததாகவும் இருக்க வேண்டும்.

மரியாதையை மாணவன் ஆசிரியருக்கும், பிள்ளை பெற்றோருக்கும் தானாகக் கொடுக்க வேண்டுமே தவிர அதனைக் கேட்டு வாங்க முயலக் கூடாது. பெற்றோரும், ஆசிரியர்களும் மாணவர்கள் பார்த்துப், பின்பற்றக்கூடியளவிற்கு நல்ல பண்பானவர்களாக விளங்க வேண்டும்.

இப்போது பிள்ளைகள் கணனியுடன் இணைந்திருக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம். இப்போது இணையத்தில் பல விதமான அபாயகரமான வலைகள் இருப்பதால் கணனி பற்றிய விவரங்களை ஒவ்வொரு தாயாரும் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

பருவ வயதில் உள்ள பிள்ளைகளை அடக்கி, ஒடுக்கி வளர்க்காதீர்கள். மாறாக அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுங்கள். அவர்களின் உரிமைகளைப் பறிக்க முயலாதீர்கள். அவர்களின் சின்னச்சின்ன சில்மிஷங்களுக்கும், விமர்சனங்களுக்கும் மதிப்புக் கொடுத்து அவற்றைச் செவிமடுங்கள்.

அதே சமயம் எந்த நிமிடத்தில் அவர்கள் எல்லை மீறுகிறார்களோ, அந்த நிமிடமே அவர்களிடம் உறுதியாகவும், கண்டிப்பாகவும் இருந்து அவர்களைச் சரியான முறையில் திசை திருப்புங்கள்.

மாணவன் — ஆசிரியர் — பெற்றோர் ஆகியோருக்கு இடையிலான உறவு ஒற்றுமையாகச், சீராகப், பலமாக இருந்தால் எந்தவித மனப் பிரச்சனையும் எழ வாய்ப்பே இல்லை.பாடசாலை வாழ்க்கை சீராக அமைந்துவிட்டால் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்பது நிச்சயம்.

# ஜாலியாக ஹோட்டல் சாப்பாடா?



குடும்பத்துடன் வெளியில் சென்று ஹோட்டலில் சாப்பிடுவது இன்றைய நாளில் நாகரிகமாகி உள்ளது.

இவ்வாறுசாப்பிடச் செல்லும் உணவகத்தைப் பற்றி ஆராய்ந்து வைத்திருப்பது இல்லத்தரசிகளின் கடமை.

* உணவகத்தின் சமையலறை வாடிக்கையாளர்களுக்குத் தெரியக் கூடியவகையில் இருந்தால், அது கட்டாயம் சுத்தமாக இருக்கும்.

* இரவு உணவருந்தச் செல்வதாயின் இரவாகுமுன் செல்லுங்கள். அப்போது புதிய உணவுகள் கிடைக்கும்.

* உணவகத்தில் ஏதேனும் சான்றிதழ்கள் கொழுவப்பட்டுள்ளனவா என்று நோட்டமிடுங்கள். அவை காணப்படின் அங்கு தேர்ச்சி பெற்றவர்கள் பணிபுரிகின்றார்கள் என்பது புலனாகும்.

* பரிமாறப்பட்ட உணவில் திருப்தி இல்லா விட்டால், உடனே முறையிடத் தயங்க வேண்டாம்.

* இயன்றளவு திங்கட்கிழமைகளில் உணவகங்களில் சாப்பிடுவதைத் தவிருங்கள்.

ஏனெனில் வார இறுதியில் சமைக்கப்பட்ட உணவு மீள் பதம் பண்ணப்பட்டுப் பரிமாறப்படலாம்.

பிரதீபா—பசீனா

பெண

# உடல் வனப்புக்கு இலகு வழிகள்




மகிந்தாஸ் புக் சென்டர்

தங்களுக்கு தேவையான சகல விதமான

இல 50-52, பஸார் வீதி, பதுளை. தொ.பே: 055-30109 பெக்ஸ்: 055-30110

இல. 27, ஸ்ரீ கதிரேசன் வீதி பதுளை. தொ.பே: 055-22890


இளம் பெண்கள் எப்போதும் தமது உடல் அமைப்பில் கவனமாக இருப்பார்கள்.

வயிறு, இடுப்பு பகுதிகள் பெருத்துப்போனால் உடனே சாப்பாட்டைக் குறைத்துக் கொள்கின்றனர்.

இது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

சில எளிய பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. அவற்றைச் செய்து பயன்பெறுங்கள்.

(1) சமமான தரையில் படுத்தபடி முழங்கால்களை மடியுங்கள். கைகளை வயிற்றின் மீது அழுத்தாமல் வைத்து, பாதங்களுக்கிடையே இடைவெளி வையுங்கள். இடுப்பை மேற்புறமாக மெதுவாகத் தூக்கி குறைந்தது முப்பது வினாடிகள் இருங்கள்.

இவ்வாறு எட்டு முறை செய்ய வேண்டும்.

(2) முதலில் இருந்த அதே நிலையில் பாதங்களைச் சேர்த்து வைக்கவும். இடுப்பை மேற்புறமாகத் தூக்கி முழங்கால்களைப் பதினாறு முறை மடித்தும் விரித்தும் பயிற்சி செய்யவும்.

(3) கால்களை அகல வைத்து , முழங்காலை மடித்து நில்லுங்கள். இடுப்பைப் பின்புறமாகத் தள்ளி முதுகை முன்புறமாகச் சரித்துக் கொள்ளவும்.

கைகளைத் தோள்களுக்கு மேல் தூக்கி முப்பது நொடிகள் நிற்க வேண்டும்.

இதனை ஆறு முறை தொடர்ந்து செய்யவும்.

# கம்பன் கழகம் தந்த கீர்னி மழை



பாலகிருஷ்ணன் குழுவினர் நாதஸ்வர இசை வழங்குகிறார்கள்.

வீட்டுக்குள்ளேயே சின்னத்திரை வடிவத்தில் வந்துவிட்ட சினிமாவையும் அதன் பாணியில் அமைந்துவிட்ட TV நாடகங்களையும் பார்த்தும் கேட்டும் அலுத்துப்போன கண்களுக்கும் காதுகளுக்கும் கொழும்புக் கம்பன் கழகம் நடத்திய இசை வேள்வி பெருவிருந்தாக அமைந்தது.

தொடக்க நாளன்று எஸ். சிதம்பரநாதன், ஆர். கேதீஸ்வரன் ஆகியோர் நல்லதோர் நாதஸ்வரக் கச்சேரியை வழங்கி ஜமாய்த்து விட்டார்கள்.

ஒரு கட்டத்திலே சாருகேஸி ராகத்தினை ஆலாபனை செய்து முடித்தபோது பின்னால் இருந்த இருவர் பேசிக் கொண்டதைக் கேட்க முடிந்தது.

ஒருவர்: "க்ருபையா பாலயா ஸௌரே" போலும்!

மற்றவர்: நான் நினைக்கிறேன் "ஆட மோடியாகத்தான் இருக்கும்."

கம்பன் கழக ரசிகர்களின் தரத்திற்கு நல்லதோர் உதாரணம்.

அடுத்த நாள் 25ஆம் திகதி தமிழ்ப் பாடல்களை மட்டும் தனியாகக் கொண்டு ஒரு தரமான கச்சேரியை நிகழ்த்தலாம் என நிரூபித்திருந்தார் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த திருமதி காயத்ரி கிரிஷ். அவர் பாடியிருந்த லதாங்கி ராக "வேங்கட ரமணா" பாடலும் நீலாம்பரி ராகத்தைத் தொடக்கமாகக் கொண்ட ராகமாலிகையும் தற்போது நினைத்தாலும் இனிக்கின்றன.

26ஆம் திகதி நிகழ்ச்சிகளில் முதலில் பாடிய திருமதி ஹேமா கபிலதாஸ் கலைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் என அறிவிப்பாளரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டாலும் அவர் இன்னும் முன்னேற இடமுண்டு.

அடுத்துப் பாடிய சி. அகிலன் என்ற இளைஞரின் கச்சேரி திறமான ஸ்வரக் கோவைகளுடன் சாஸ்திரிய சுத்தம் மிக்கதாக விளங்கியது.

27ஆம் திகதியன்று பிரதானமாக "பிறவா வரம் தாரும்" என லதாங்கி மூலம் வேண்டிக் கொண்ட திருமதி ஜனதா பராபரன் தாம் ஒரு அனுபவம் மிக்க வித்துவாம்ஸினி என்பதை "மோஹன" "தயராணி" யிலும் "நாகஸ்வராளி கருட கமன" விலும் எடுத்துக்காட்டியிருந்தார். அதனை அடுத்து ரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது எம்.பி. பாலகிருஷ்ணன் குழுவினரின் நாதஸ்வர இசை. மூன்று கூட்டம் மேளத்தை ஒரே மேடையில் வழங்கிய கம்பன் கழகத்துக்கு ஒரு சபாஷ்.

28ஆம் திகதி கானம் இசைத்த திருமதி ஹம்ஸானந்தி, பெயருக்கேற்றது போல் தரமான கச்சேரியை நிகழ்த்தினாரே, அதிலே ஒரு வடபுல வாடை வீசியதை ஒத்துக் கொள்ளாமல் விட முடியவில்லை.

அன்றைய தினம் ஒரு நாதஸ்வரக் கச்சேரி இல்லையே என்ற ஒரு ஆதங்கத்தை நிவர்த்தி செய்தவர் திரு. சி. கருணாகரன் அவர் பாடிய ஆபேரி, சுத்த தன்யாசி, பிருந்தாவன சாரங்கா ராகக் கீர்த்தனைகள் நாதஸ்வர பாணியில் அமைந்தது நிகழ்ச்சியின் பிளஸ் பொயின்ட்ஸ் ஆகும்.

29ஆம் திகதி இரு தலைமுறையினரின் இசைக்கச்சேரிகள் இடம் பெற்றது விசேட அம்சமாகும். 8 நாட்கள் இடம்பெற்ற நிகழ்ச்சிகளிலும் சராசரியாகப் பார்த்தால் கூடிய புள்ளிகளைப் போடக் கூடியதாக அமைந்தது அன்றைய நிகழ்ச்சிகள் தாம்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கு பஞ்சமூர்த்தி குமரேசன் ஒரு உதாரணம். கச்சேரி முடியும் தறுவாயில் இயற்றிப் பாடிய பஜன் ஒன்றே அவரின் சிறந்த எதிர் காலத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு.

அதனைத் தொடர்ந்து பாடிய அ.ஒ. கருணாகரன் தாம் ஒரு பழம் பெரும் வித்துவான் என்பதனை காம்போதி மூலம் மிகவும் கலகலப்பாக உணர்த்தியிருந்தார். "இது எங்களுடையது ஆகவே சிறியது" என்ற கருத்தைக் கொண்டோருக்கு அன்றைய நிகழ்ச்சிகள் அசல் சாட்டையடி.

30ஆம் திகதி மாலை 5.30 மணியிலிருந்து காத்துக் கிடந்ததில் இன்பத்தை உண்டு பண்ணி காக்க வைத்ததிலும் இறுதியில் சுகத்தைத் தந்தவர் ரீ.என். சேஷ கோபாலன். அறிவிப்பாளர் சொன்னதுபோலவே வெளியே வானமழை உள்ளே கானமழை. அதைப் பற்றி விமர்சிக்க வார்த்தையில்லை.

எட்டு நாட்கள் அளித்த பெருவிருந்தை, முடித்து வைப்பதற்காக இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்த இரண்டு மாம்பழங்களும் பார்வைக்கு அவை கொழும்பு(க்) கம்பன் கழகத்துக்கு கிடைத்த கறுத்தக் கொழும்பான்கள்மாதிரி இருந்தாலும், அவை தந்த சுவையோ பஞ்சாமிர்தத்தை ஒத்திருந்தது.



திருமதி காயத்ரி கிரிஷ் பாடுகிறார்.

நினைவில் தோடி மூலம் இராசரத்தினம் பிள்ளையை 31ஆம் திகதி நினைவு படுத்தியமையை நினைத்துப் பார்க்க இன்னமும் புல்லரிக்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் கொழும்பு(க்) கம்பன் கழகம் இரு பெரும் இளம் கலைஞர்களை இசைவிழா மூலம் அறிமுகம் செய்து வைத்திருக்கிறது.

மூலைகளில் மறைந்திருந்த எம் பக்க வாத்தியக் கலைஞர்களுக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளது. கொழும்புக் கம்பன் கழகப் பணி தொடரட்டும்.

# சங்கர் மகாதேவனின் இன்னிசை இரவுகள்

சக்தி வானொலி, சக்தி தொலைக்காட்சி சேவைகளின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு MTV, MBC நிறுவனங்கள் நடத்திய சங்கர் மகாதேவனின் இன்னிசை இரவுகள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 26 ஆம் திகதி சுகததாச உள்ளரங்கில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் இந்நிகழ்வைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு மும்மொழிகளிலும் அறிவிக்கப்பட்டது. சக்தி வானொலி நிகழ்ச்சியை நேரடி ஒலிபரப்புச் செய்தது.

அனுராதா ஸ்ரீராமின் பாடலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. பாடல்களைப் பற்றிய விவரங்களுடன் அவர் அனுபவித்துப் பாடினார். "கறுப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு" என்ற பாடலை அவர் பாடி முடித்ததும் அரங்கு முழுவதுமே ஒரே கரகோஷம். சிங்கள மொழிப்பாடல் ஒன்றையும் சொற் பிழையின்றிப் பாடி அனைவரையும் கவர்ந்தார்.



சங்கர் மகாதேவன் ஓர் இணைக் குரலுடன் சேர்ந்து இன்னிசை வழங்குகிறார்.

சங்கர் மகாதேவனும் சிவமணியும் ரசிகர்கள் மத்தியிலிருந்து மேடைக்கு வந்தனர்.

சங்கர் மகாதேவன் வராகநதிக்கரையோரம்... என்ற பாடலுடன் தனது இன்னிசை வார்ப் புகளைச் சொரிந்தார். ஹிந்தி, சிங்களப் பாடல்களையும் பாடினார்.

ட்ரம்ஸ் சிவமணியின் கைகள் அசுர வேகத்தில் செயற்பட்டன. பல விதமான வாத்தியக்கருவிகளையும் வாசித்தார். உணர்ச்சி பூர்வமாகக் கைகளுடன் வாயினாலும் இசை மழை பொழிந்தார். மேடையை சிவமணியின் வாத்தியக் கருவிகளே ஆக்கிரமித்திருந்தன.

உலகிலுள்ள பெரும்பாலான தாளவாத்தியக் கருவிகளை காணும் பாக்கியத்தை அங்கு வந்த அனைவரும் பெற்றனர். பெர வாத்தியத்தை அவர் லாவகமாகக் கையாண்டு ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். அவரது உணர்வுகளின் உச்ச வெளிப்பாடாக ட்ரம்ஸ் வாசிக்கும் தடிகளை உயர எறிந்து பிடித்து தாளம் மாறாது அனைவரது மனங்களையும் கூச்செறியும் வகையில் வாத்தியங்களை வாசித்தார். சில பாடல்களுடன் நடனக்காட்சிகளையும் கண்டு ரசிக்கக் கூடியதாக இருந்தது. ரசிகர்கள் எதிர்பார்த்த சில பாடல்கள் முழுமை பெறாவிட்டாலும் சிவமணியின் கைவண்ணம் அதனை ஈடுசெய்தது.

"ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதுதான் சுகம் சுகம்..." என்னும் பாடல் வரிகளை இம்மூவரும் "பாடலுடன் ஆடலைப் பார்த்து ரசிப்பதுதான் சுகம் சுகம்..." என தமது இசைத்திறமையால் மாற்றியமைத்துப் பாடினார்.

வயது வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரும் இந்த இன்னிசை இரவுகள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். அரங்கிற்கு வெளியே மழை பொழிந்து கொண்டிருக்க அரங்கினுள் சிவமணியின் ட்ரம்ஸ் முழக்கத்தில் இசை மழை பொழிந்தது.


கடந்த ஆண்டின் மிகப் பிரம்மாண்டமான இந்த இன்னிசை இரவு அனைவரையும் களிப்படைய வைத்துவிட்டது.



சிவமணி ட்ரம்ஸில் தனது கைவரிசையைக் காட்டுகிறார்.

—கே. மயூரன்


2001 JAYA LALITHANGHI Jewellers



மங்கையரே! நகைகள் பற்றிய உங்கள் கற்பனைக்கு வடிவம் தந்து உங்களை பூரிக்கச் செய்யும் ஜெயலலிதாங்கியின் பொங்கல் வாழ்த்துக்கள்!

No.225, Galle Road, Bambalapitiya, Colombo-04. Tel : 595144

இந் நன்நாளில் சுடர் ஒளிக்கு எமது நல் வாழ்த்துக்கள்!

கவிதா ஸ்ரோஸ்
வவுனியா

# புனிதர் கட்டளையிட்டார் 914 பேர் உடன் தற்கொலை



ஜிம் ஜோன்ஸ்

ஒரே நாளில் சயனைட் அருந்தி 914 பேர்கள் தற்கொலை.

1978 நவம்பர் 08 ஆம் திகதியன்று தென் அமெரிக்காவில் கயானா என்னும் வனப்பகுதியில் நடந்த சம்பவம் ஒன்று மனதில் ஒரு கேள்வியை எழுப்புகிறது.

நாகரிக வாழ்வுக்கு பூமி ஒரு நம்பிக்கையான இடம் என்று இன்னும் எத்தனை காலத்திற்கு நம்பலாம்? அவ் வனப்பகுதியில் ஜோன்ஸ்ரவுன் என்று தன்பெயரில் ஒரு ''மக்கள் தேவாலயம்'' அமைத்தார் ஜிம் ஜோன்ஸ் என்ற ஒரு புனிதர்.

தான் கால்களால் இடும் கட்டளைகளை தலைகளால் ஏற்று நிறைவேற்றும் 1000 வரையான தன் சீடர்களை அழைத்தார்.

பெரும்பாலானவர்கள் அமெரிக்கக் கறுப்பர்கள். ஏனையோர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த வெள்ளையர்கள்.

புனிதர் ஜோன்ஸ் அவர்களுக்கு ஒரு நற்செய்தியைத் தெரிவித்தார். அதாவது அவர்கள் ஒரு ஒப்பற்ற தியாகத்தை நிறைவேற்றுதல் வேண்டும் என்றார்.

இந்த மக்கள் அமெரிக்காவின் பலபகுதிகளையும் சேர்ந்தவர்கள். உலகின் ஆரவாரங்கள் பலவற்றினின்றும் விலகி சமூகத்தின் கட்டுப்பாடுகள், இறுக்கங்கள், வரையறைகள் என்பவை தளர்த்தப்பட்ட நிலையில் வாழ்வை அனுபவிப்பதில் இவர்களுக்கு ஒருவித ஆறுதலும் இருந்தது.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட ஜோன்ஸ்ரவுன் மக்கள், தேவாலயத்தில் ஜோன்ஸ் வகுத்த சட்டங்களையும் அவரது அதிரடி நிர்வாகத்தினையும் பழக்கப்படுத்திக் கொண்டால் சரி. அங்கிருந்து எவரும் வெளியேற முடியாது.

களவாகக் காடுகளினூடாக தப்பியோடினால் துரோகிகளாவார்கள். தண்டனை கிடைக்கும். முதலிலேயே அடையாள அட்டைகளும் கடவுச்சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் யாரும் வெளியேறத்துணிவது கிடையாது. அது அவரது இராச்சியம். அவர்கள் அவரது தேவைகளை நிறைவேற்றி வாழும் மனிதர்கள்.

ஒரு நாள் சன்பிரான்ஸிஸ்கோ இளைஞன் ஒருவன் அங்கிருந்து காட்டுவழியாகத் தப்பியோடிவிட்டான். அவனுக்குத்தண்டனை வழங்கப்பட்டு சடலம் சன்பிரான்ஸிஸ்கோவின் ரயில்வே கடவையில் வீசப்பட்டுக் கிடந்தது.

இதனைத் தொடர்ந்து சன்பிரான்ஸிஸ்கோ நாடாளுமன்ற உறுப்பினர் லியோரியனுக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. பலியாகிய இளைஞன் அவரது உறவினராயுமிருந்தான்

இதனால் லியோரியன் ஆர்வத்துடன் கருமங்களில் ஈடுபட்டார். உரிய அமைச்சின் அனுமதியைப் பெற்று உதவியாளர்கள் பத்திரிகையாளர்கள் சகிதம் ஜோன்ஸ்ரவுன் சென்றார் . அதற்கான அனுமதியை அவர் ஜிம்ஜோன்சிடமிருந்து பெற்றதே ஒரு தனிக்கதை.

நிபந்தனைகள், பேரங்கள், மிரட்டல்கள் போன்றவற்றினூடாக அதனைப் பெறுவதற்கே மாதங்கள் சென்றன. ஒரு நாள் மாலை நேரம் அக்குழுவினர் ஜோன்ஸ்ரவுனில் போய் இறங்கினார்கள்.

நட்பானது போன்றதொரு வரவேற்பு அங்கு கிடைத்தது. உறுப்பினர்கள் இயல்பாக நடந்துகொள்ளுமாறு பணிக்கப்பட்டிருந்தனர். இரவு விருந்துபசாரம் வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து இசை விருந்து வைத்தார்கள்.

காங்கிரஸ் எம்.பி அங்கு சிறிதளவு நேரம் உரையாற்றினார். ''எவ்வளவு ரம்மியமான இடம். எனது தொகுதியில் நீங்கள் இல்லையே என்பதுதான் கவலையாயிருக்கிறது.'' என்று ''அழகான பறவைப்பாட்டு பாடு'' என்னுமாப்போல பேசினார். பலன் கிடைத்தது. மதக்குழு உறுப்பினர்கள் இவ்வளவு நேரமும் காத்துவந்த மனக்கட்டுப்பாடு தளர்ந்தது. அவர்கள் ஆடலிலும் பாடலிலும் இயல்பாகவே ஈடுபடத் தொடங்கினார்கள்.

நாட்டிய அமளி சற்றே ஓயும் வேளை மொனிக்கா என்ற பெண் லியோறியனுக்கு ஒரு ரகசியச் செய்தியை அனுப்பினாள். என்னையும் எனது தோழியையும் நாளை உங்களுடன் அழைத்துச் சென்று உதவுவீர்களா?



மறுநாள் விடிந்தது. குழுவில் சென்ற செய்தியாளர் ஜின்ஸ்ஜோன்ஸை பேட்டி கண்டார். பேட்டியாளருடன் வேறு எவரும் இருக்கக் கூடாதென்று நிபந்தனை. பேட்டி தனிமையில் நடைபெற்றதாலோ என்னவோ புனிதர் ஜோன்ஸ் ஒளிவுமறைவின்றிப் பேசினார். அந்த ஆண்டில் மட்டும் தனக்கு 30 குழந்தைகள் பிறந்திருப்பதாகக் கூறினார். ''எவரும் என்னை இதுவரை சுடாமல் விட்டிருக்கிறார்களே!'' என்ற எல்லை வரையில் பேட்டி சென்றது.

இது ஒருபுறமிருக்க ஒரு பெண் அந்தக் குழுவினருடன் வெளியேற விரும்பும் செய்தி அவருக்குக் கிடைத்தது. அவர் முதலில் குழம்பினார். எனக்குத் துரோகம் செய்துவிட்டார்கள் என்று கத்தினார்.

உதவியாளர்கள் அவரை ஆசுவாசப்படுத்தி செல்ல விரும்புபவர்களை விடுவோம். எமக்கு என்ன குறையப்போகிறது?' என்று சமாதானம், கூறியதில் சுமார் 20 பேர்கள் இரகசிய ஆயத்தங்களுடன், அந்த எம்.பி.யின் குழுவினருடன் அங்கிருந்து வெளியேறும் வாய்ப்பைப் பெற்றனர்.

குழுவினர் புறப்பட ஆயத்தமாயினர். திருப்தியும் மனப்பூரிப்பும் முகங்களில் தெரிந்தன. இறுதி நேரத்தில் அவசர அவசரமாக ஓடிச்சென்று மேலும் ஒருவன் சேர்ந்துகொண்டான். அவனுக்கு அவர்கள் வைத்திருந்த பட்டப்பெயர் 'றோபோ'. அதாவது— கட்டளையை நிறைவேற்றுபவன்.

தயாராக நின்ற பிரத்தியேக விமானத்தில் யாவரும் ஏறியாயிற்று. ஏறுவதற்கு முன் வழமையான சோதனைகளும் நடந்தன. றோபோவிடம் ஒரு பிஸ்டல் இருந்தது. விமானம் பறக்கத் தொடங்கியதும் விமானியின் தலையில் சுட்டு விட வேண்டும் என்பது உத்தரவு. பின்னர் அது மாற்றப்பட்டதாம். அதன்படி அவன் முதலில் மொனிக்காவைத் தீர்த்துக்கட்டுவான்.

இதேவேளை, விமான ஓடு பாதையில் ஒரு ட்ராக்டர் குறுக்கே வந்து நின்றது. அதில் துப்பாக்கிகளுடன் 20 குண்டர்கள். விமானம் கிளம்பமுடியாது. விமானத்திலுள்ளவர்கள் ஏதோ விபரீதம் நிகழப்போவதை உணர்ந்தனர். திட்டமிட்டபடி யாவும் நடந்தது.

ட்ராக்டர் குண்டர்கள் படபடவென்று வேட்டுக்களைத் தீர்த்தனர். இறந்து விட்டார்கள் என்பதை உறுதிபடுத்துவதற்காக வீழ்ந்து கிடந்தவர்களின் தலைகளில் ஒவ்வொரு சூடு தீர்க்கப்பட்டது. ஒப்பரேசன் வெற்றி!

சூட்டோடு சூடாக அடுத்த ஒப்பரேசன் ரெடியாகியது. ஜிம்ஜோன்ஸ் தனது நிலைப்பாட்டை விளக்கினார். ''நீண்டகாலமாக நாம் தயாராக வைத்திருந்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவோம்'' என்றார்.

உடனே மருத்துவப் பணியாளர்கள் 50 கலன் நச்சுத்திராவகம் நிறைந்த இரு பாத்திரங்களைக் கொண்டுவந்தனர். அவற்றுள் வலியமும் சைனைட்டும் கலக்கப்பட்டிருந்தன. புனிதர் இறுதியாகக் கூறினார். ''நாம் இனி வேறு ஒரு இடத்தில் சந்திப்போம்''

914 பேர்களும் வரிசைகளில் வந்தனர். கடதாசிக் கிண்ணங்களில் வழங்கப்பட்டதை வாங்கி வாயில் விட்டனர். சிறுவர்களுக்கு தாய்மார் பருக்கி விட்டனர். வேதனையின்றி மரணிக்கும் விதம் பற்றி வெகுகாலமாகவே அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்திருந்தது. குடித்தபின் யாவரும் முன்னேயுள்ள தோட்ட நிலத்தில் சென்று குப்புறக் கிடந்தனர். அப்படியே கிடந்தனர். ஜிம்ஜோன்ஸும் அன்னிமுரே என்னும் மருத்துவப்பெண்ணும் மட்டுமே எஞ்சியிருந்தனர். அவர்களும் தத்தமது கைத்துப்பாக்கிகளால் தத்தமது தலைகளில் சுட்டுக் கொண்டனர். தப்பியவர் ஒரேயொருவர் ஓடெல் றோட்ஸ்.

— தர்மலிங்கம்


நவீன டிசைன்களில் தரமான புடைவைகள்
பரிசுப்பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்
சகலவிதமான கடிகாரங்கள்
வானொலி, தொலைக்காட்சி உதிரிப்பாகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
சகலவிதமான புதினப்பத்திரிகைகள்
அனைத்துக்கும்
தலவாக்கலையில் தன்னிகரில்லாத ஸ்தாபனம்
அருள் டிரேட் சென்டர்



ஒருபோதும் குன்றாத அன்பு எங்கும் பொங்கட்டும்
எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்பிகையின் அருளைப்பெற்று தைப்பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட அனைவரையும் வாழ்த்துகின்றோம்.
நியூ ராஜேஸ்வரி பவான்.
உரிமையாளர்களும் ஊழியர்களும்
இல.78, மெயின்வீதி, மாத்தளை.
இல.63E, கிங்ஸ்லி வீதி, மாத்தளை.
T.P.No: 066-22543

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# வவுனியா லொட்ஜ் ஒன்றில் சீருடையினருக்கு அலாதி சுகம்!

வவுனியாவில் விபசார நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட லொட்ஜ் ஒன்றைப் பூட்டி சீல் வைத்து அதன் திறப்புகளை நீதி மன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டிருக்கிறார். இலங்கையின் பல பாகங்களிலும் விபசார விடுதி கண்டு பிடிப்பு, அழகிகள் கைது, கிளினிக்குகள் கிளப்புகள் முற்றுகை போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடப்பவைதான். அவ்வாறான செய்திகளும் அடிக்கடி வெளிவருகின்றன. ஆனால் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை இவ்வாறான சம்பவங்கள் இல்லையென்றே சொல்லலாம்.

வடக்கு கிழக்கின் போர் சூழ்நிலைகள் மத்தியில் மக்கள் வாழவே திண்டாடும் நிலையில் வேறு பொழுது போக்குகளுக்கு இடமேது? விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலோ இவ்வாறான சம்பவங்கள் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

இவ்வாறான ஒரு நிலையில் வவுனியாவில் விபசாரக் குற்றச்சாட்டின் பேரில் லொட்ஜ் ஒன்று மூடப்பட்டதென்பது ஆச்சரியத்தையே ஏற்படுத்துகிறது.

வவுனியாவில் விபசார விடுதி நடத்துவதென்றால் நடத்தியது யார்? அதை நாடிச் செல்வோர் யார் என்று கேள்விகள் எழலாம். எங்காவது ஒரு லொட்ஜில் ஒரு ஆணும் பெண்ணும் தவறான நோக்குடன் தங்கினால் கூட அவர்களையும் போதாதற்கு லொஜ் உரிமையாளரையும் தூக்கிச் சென்று விசாரித்து 'தண்டனை' வழங்கும் தமிழ் இயக்கங்கள் எவ்வாறு இந்த விடுதியை விட்டு வைத்திருந்தன என்ற கேள்வி நெருடியதால் அது பற்றி ஆராய முற்பட்டோம்.

வவுனியா சந்தைப் பகுதியிலேயே இந்த விடுதி இயங்கி வந்திருக்கிறது. இதன் உரிமையாளர் வவுனியாவின் பிரபல வியாபாரப் புள்ளி; பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இருக்கும் கடைகள் மற்றும் வர்த்தக முயற்சிகளினால் தினமும் பல ஆயிரங்கள் வருமானம் கிடைக்கின்றனவாம். அப்படி இருக்க இவர் ஏன் இந்தத் தொழில்மூலம் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டார் என்று பலரும் ஆச்சரியப்படுகின்றனர்.

இந்த விடுதியின் வரலாறு இன்று நேற்று ஆரம்பமானதல்லவாம் பல வருடங்களாக இந்த விடுதி வவுனியாவில் இயங்கி வந்துள்ளது.

இது பற்றி பலரும் பலநாள் பொலிசாரிடமும் பொது நிறுவனங்களிடமும் முறையிட்டு வந்துள்ளனர். ஆனால் பலன் பூஜ்யம். ஏனென்றால் இதன் உரிமையாளர் ஆளும் ஐக்கிய முன்னணி அரசின் ஒரு தீவிர ஆதரவாளர். ஆளும் கட்சியுடன் இருந்த செல்வாக்கை வைத்தே இந்தப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் இதுவரை காலமும் தனது காரியத்தைச் சாதித்து வந்துள்ளார். இவர் அரசியலிலும் கால் பதித்திருந்தால் வவுனியாவை ஒரு 'ரெட்லைட்' ஏரியாவாக மாற்றியிருப்பார் என அச்சத்துடன் சொல்கிறார்கள் மக்கள்.

இந்த விடுதிக்கு வாடிக்கையாளர்கள் சிவிலியன்கள் அல்லர். சொந்த ஊருக்கு அடிக்கடி போய்; குடும்பத்தோடு இருந்துவிட்டு வர முடியாதவர்களுக்கு இந்த விடுதி தான் தஞ்சம். இந்த விடுதியால் மற்றொரு பிரச்சனையும் ஏற்படுவதாக உண்மையான லொட்ஜ் உரிமையாளர் ஒருவர் கவலைப்படுகிறார். சீருடை தரித்த சிலர் அடிக்கடி தனது லொட்ஜுக்கு வந்து பெண்கள் பற்றி கேட்பதாகவும் அங்கு தங்கியிருக்கும் குடும்பப் பெண்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதாகவும் தினமும் இது பெரும் தலையிடியாக இருப்பதாகவும் அவர் வெறுப்புடன் சொன்னார்.

விசாரித்துப் பார்த்ததில் சீருடை தரித்த சிலர் பெண்களுடன் வந்து தங்குவதற்கு அறை தரும்படி கேட்டு லொட்ஜ் காரர்களை மிரட்டுகிறார்களாம். சிலர் நகரில் உள்ள பொது மலசலகூடங்களையும் விட்டு வைப்பதில்லை எனவும் தெரிய வந்தது.

தமிழ்ப் பண்பாடு கலாசாரம் என்பவற்றை மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் கடைப்பிடித்து வரும் வவுனியா மக்களுக்கு இச்செயல்கள் மனச்சஞ்சலத்தையே ஏற்படுத்துகின்றன. தவறு செய்வோரைத் தட்டிக் கேட்க முடியாத ஒரு அச்ச நிலையிலேயே உள்ளனர். தட்டிக் கேட்டால் வீண் வம்பை விலைக்கு வாங்கியதாக முடிந்துவிடுமே.

இவ்விடுதி சீல் வைக்கப்பட்டிருப்பதால் அப்பகுதி மக்கள் ஓரளவு ஆறுதலடைந்திருக்கின்றனர். ஆயினும் ஒரு ஆணும், இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் விடுதி உரிமையாளர் கைதாகவில்லை. விடுதியை மீண்டும் திறக்க அவர் ஓடியாடிக் கொண்டிருக்கிறாராம்.

— வன்னி மைந்தன்

## வாசகர் இதயம் பேசுகிறது

சுடர் ஒளிப் பிரதியுடன் 2001 ஆம் ஆண்டு வர்ணக்கலண்டர் வழங்கியிருந்தீர்கள். பிரமாதம்

— ஆமீனா உம்மா, கல்முனைக்குடி 14.

ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் விடுதலைப்புலிகளின் உயர்ந்த நெறிப்பாடு. அரசாங்கத்தின் பிடிகொடாத்தன்மையை அண்டை நாடுகள் அறிந்து கொண்டு என்னதான் சாதிக்கப்போகின்றனவோ?

— கவிக்குயிலன், சேனையூர் — 6.

"பேச்சு நடக்காது, நடந்தாலும் தொடராது, தொடர்ந்தாலும் பலன் தராது" என்ற வாசகங்களை அட்டைப்படத்தில் பார்த்ததும் மனம் சஞ்சலம் அடைந்தது. ஆயினும் அன்ரன் பாலசிங்கம் பிரபாகரன் ஆகியோர் காணப்படும் படம் தெம்பினைத் தந்தது.

— சி. மாசிலாமணி, மொரட்டுவை.

ஈழப்போரைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள நான்கு தலைவர்களும் ஒன்று பட்டால் எங்களுக்கு நிச்சயம் உண்டு வாழ்வு.

— சோலைக்குயில், கல்முனை — 7.

விளையாட்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் திரட்டித் தருகிறீர்கள். பாராட்டுக்கள்.

— ஏ. ஆர். எப். ஸிமாரா, கொழும்பு — 12.

யுத்தமும், கொலையும் நடக்கும் நாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்படவேண்டும். அதனை வலியுறுத்திய தலையங்கம் சிறப்பு.

— எம். எம். ஹஸினி, கல்முனை — 7.

போர் நிறுத்தக் காலத்தில் படையினர் தீவிர தாக்குதல் நடத்துவது போலித்தனமானது என்பது புரிகிறது.

— ம. தணிகாசலம், மட்டக்களப்பு.

அபிவிருத்தி நிதி ஒதுக்குவதில் அரசாங்கம் பாகுபாடு காட்டுவது கொடுமை.

— எல். தனரத்தினம், வவுனியா.

சொல்லவேண்டிய விடயங்களைச் சொல்லவேண்டிய விதத்தில் சொல்லும் 'சுடர் ஒளி'யின் திறமை எம்மை வியக்கவைக்கிறது.

— அ. அச்சுதன், மாவத்தகம

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் அ. விநாயக மூர்த்தி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையைச் சிறப்பாகத் தந்த 'சுடர் ஒளி'க்கு நன்றி.

— எஸ். கார்த்திக், கரடியனாறு.

"சுடர் ஒளி" தரும் ராசிபலன்கள் உண்மையில் பிரதிபலிக்கின்றன. மின்பட்ரீகா நேரடியாகச் சென்று குறைகளை அம்பலப்படுத்துவது பிரமாதம்.

— டாக்டர் கோபிகிருஷ்ணா, பசறை.

"பௌதிக உண்மையோடு ஒட்டியது முருகதத்துவம்" என்னும் பக்திக் கட்டுரை சிறப்பாக இருந்தது.

— ஆ. தேவராசன், கொழும்பு — 02

கருணாநிதி — மூப்பனார் மீண்டும் நட்புறவு கொண்டால் தமிழகத்தில் நிச்சயம் அவர்கள் ஆட்சி தான்.

— எம். எம். ஹாஸேன், காத்தாண்குடி

இன எழுச்சிப் பணியில் யாழ் பல்கலைக்கழகம் என்னும் தலைப்புடன் 'வடபுலத்தில்' பகுதியில் வந்த தகவல்கள் இனிப்பாக இருக்கின்றன.

— செ. கனகரத்தினம், மூதூர்.

"அஷ்ரப் மரணத்தில் அரசு மௌனம் சாதிப்பது ஏன்?" என்னும் தலைப்பில் வெளிவந்த தகவல்கள் எம்மைச் சிந்திக்க வைத்தன.

— சி. தருமரத்தினம், பதுளை

எமனுக்கும் ஆலயம் இருக்கிறதா? இனி அனைவரும் எமனையே கும்பிடத் தொடங்கி விடுவார்கள்.

— எஸ். வரதராஜன், தெஹிவளை.

## அறுவைச் சிகிச்சைக்கு உயிருள்ள ஆயுதம்

சதையை வெட்டிச் சிகிச்சை செய்த பின் அதை முன்போல் சேர்த்துத் தைத்து விடுவதற்குப் பண்டு தொட்டே வைத்தியர்கள் உயிருள்ள இயற்கை ஆயுதங்களைப் பயன்படுத்தி உள்ளனர்.

உறுதியும், கூர்மையும் மிக்க தாடைகளோடு கூடிய ஒரு வகை பெரிய கட்டெறும்புகள் தான் இந்த ஆயுதங்கள்.

வெட்டிப் பிரித்த சதையைச் சேர்த்து, கட்டெறும்பின் வாயை அந்த இடத்தில் வைத்ததும், அது வாயை அகலத்திறந்து தன் தாடைகளால் கௌவிப் பிடித்துக் கடிக்கும். எறும்பின் உடலை உடனே பிய்த்து எறிந்து விட்டால் அதன் தாடை அசையாமல் சதையைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டே இருக்கும்.

பிரிந்து போன சதையின் விளிம்புகள் இரண்டும் இணைந்து காயம் குணமாகும் வரை எறும்பின் தாடைகள் பிடியைத் தளரவிடாமல் அப்படியே இருக்கும்.

நீண்ட வெட்டுக் காயங்களையும், பெரிய புண்களையும் தைப்பதற்கு இந்த முறை கையாளப்பட்டுள்ளதை மருத்துவ நூல்கள் மூலம் அறிய முடிகிறது.

இக்காலத்தில் வெட்டுக் காயங்களைத் தைப்பதற்கு நவீன ஊசிகள் இருக்கின்றன. ஆனால் இந்த வசதிகள் கிட்டாத காட்டுப் பகுதிகளில் இன்று கூடக் கட்டெறும்புகளைப் பயன்படுத்திக் காயங்கள் தைக்கப்படுகின்றன.

VAENI SPORTS CLUB
No. 25, Brass Founder Street,
Colombo-13. Tel: 348161.
VAENI AQURIUM
No. 26, Brass Founder Street,
Colombo-13.
சிறந்த முறையில் பழைய, புதிய சினிமாப் பாடல்களைப் பதிவுசெய்துகொள்ள நாடுங்கள்
VAENI RECORD BAR
No. 33, Brass Founder Street,
Colombo-13. Tel: 074-713688
VIDEO VISION
No. 33, Brass Founder Street,
Colombo-13. Tel: 342636

பாலியல் பலவீனத்திற்கு
ரிஷி அஜமாமிச லேகியம்
தேவையில்லை கவலை
நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும் உடல் சக்திக்கும், ஆண்மைக்கும், வீரிய விருத்திக்கும்
ரிஷி அஜமாமிச லேகியம்
ரூ. 195/- 360/-
தங்கபஸ்பம் கலந்தது ரூ. 1365/-
மூல வியாதியா!
ரிஷிலேகியம் பாவியுங்கள்
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும் ரூ. 195/-
ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
T.P.421398




ஆளும்கட்சி அக்காவினதும், எதிர்க்கட்சி தம்பியினதும் சாதகங்கள் சோதிடப் பெரும் புள்ளி ஒருவரிடம் கொடுத்து சோதிக்கப்பட்டதாம். பெயரிலேயே பட்டத்தைச் சூடி நிற்கும் செயலாளர் தான் ஏற்பாடு செய்திருந்தாராம். சோதிட முடிவுகளும் மேற்படி இரண்டு பரீட்சார்த்திகளிடம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

2003 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் திகதிக்குப் பின் தான் அக்காவுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறதாம். எதிர்வரும் 3 வருட காலமும் மத்திமம் தானாம். தம்பிக்கோ அடிக்கடி உயர்வுகள் கிடைக்குமாம்.

கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி வரை நேரகாலம் சரியில்லையென்று பெரும்பான்மையின சாஸ்திரியார் அடித்துக் கூறியதால் தான் வெளிநாட்டில் கால் ஊன்றியிருந்ததாகவும் ஒரு கிசுகிசு.

***

நாங்கள் சிங்களவர்கள் என்று உறுமிய கட்சியிலிருந்து அலாக்காகத் தூக்கி எறியப்பட்ட பின்பும் அதன் முன்னாள் தலைவருக்குப் புத்தி வந்தமாதிரித் தெரியவில்லை. விக்கிரமாதித்தன் பாணியில் பெரும்பான்மையோருக்கு உரிமை கோரிப் புதிதாக சங்கம் அமைத்து போராடுவாராம்.

அப்படியானால், அவரைத் தூக்கி எறிந்தவர்கள் கதி அதோ கதிதானா? இப்படிக் கேட்டால் "ஓ... அதுவா வயோதிபர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து வயோதிபர் இல்லம் அமைக்கிறார்கள் கடைசிக் காலத்தைக் கழிப்பதற்கு. அவர்களுக்கு எழும்பி நடக்கவே முடியாது. இ[illegible] எப்படி உரிமைகளைக் காப்பது?" என்று மகா மட்டமாகக் கிண்டலடித்திருக்கிறார் அதிகார மன்று உறுப்பினரான தாடிக்காரத் தலைவர்.

***

உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் வருகிறதோ இல்லையோ குட்டிக் கட்சிகளின் கூட்டணிகள் உருவாகத் தொடங்கியுள்ளன. இனவாதம், மதவாதம், பிரதேசவாதம், பயங்கரவாதம் என்று எல்லா வாதங்களிலும் பேசியதால் செல்லாக் காசாகிப் போன கட்சிகள் அவை.

கொள்கைப் பிடிப்பில்லாமல் கட்சிவிட்டுக் கட்சி தாவும் குணம் கொண்ட முஸ்லிமான கட்சியொன்றின் தலைவர் தான்(?) ஏற்பாட்டாளராம்.

"கூட்டுக்கான கொள்கை என்ன? யார் ஏன், எதற்கு, எப்படிக் கூட்டு அமைக்கிறார்கள் என்பதற்கு விடையில்லை. நாங்களும் கூட்டு அணி உருவாக்குவோம். ஆனால் இவர்களுடன் கூட்டுச் சேர எமக்குப் புத்தியில்லையா?"

இவ்வாறு பதில் வருகிறது. யாரிடமிருந்து தெரியுமா? உண்மை அறியப் புதிதாக உருவாகித் தோல்வி கண்ட ஒரு முன்னணியிடமிருந்துதான். ஆனால் சோகத்துக்கு மாத்திரம் குறைவில்லை.

***

நாயகமான செயலரின் மீது 'டக்' என்று பழிக்கு மேல் பழி போட்டு இறுதியில் சகல வழிகளிலும் தோல்வி கண்ட சகோதர எம்.பிக்களில் மூத்தவருக்குத் தமது முன்னாள் தலைவர் மீது இப்போது அபிமானம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது.

மீள் கூட்டு, பேச்சுவார்த்தை என்று எல்லாவற்றுக்கும் தயார் என்று அவர் உள்ளம் நாடுகிறதாம். அந்த உள்ளத்தைத் திறந்து காட்டியிருப்பது ஒரு பேனாக்காரரிடம்.

இப்போதுள்ள நல்ல சூழலில் ஏதாவது ஆரோக்கியமாகச் செய்யக்கூடியதாக இருந்தால் யோசிக்கத் தயாராம்.

தேவ ஆசீர்வாதம் எப்படியிருக்குமோ, யார் கண்டது?

***

மலையகத்தில் இயங்கிவரும் சில அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு வருடக்கடைசியில் கணக்குக் காட்ட எப்படியாவது புதிய வாய்ப்பு ஒன்று கிடைத்துவிடுகிறது.

"மலையகத்தில் ஒன்று படுவோம்" என்று கூறிக் கொண்டு சில தொழிற் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துக் கூட்டம் போட்டதும் அதற்குத்தானாம். சுயநலத்துடன் செயற்படும் தொண்டர் நிறுவன அமைப்பாளர்களும், அரசியலிலும் தொழிற்சங்கத்திலும் ஓரங்கட்டப்பட்ட சில பிரமுகர்களும் இந்தக் கைங்கரியத்தைச் செய்தனராம்.

பத்திரிகையில் வெளியான செய்திகளைக் காட்டி அடுத்த வருட நிதிக்குத் திட்டம் போட்டு விடுகின்றனர். அரசியல் வாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த சுயநல வாதிகளின் பகடைக்காய்களாகி விடுவது தான் பரிதாபம்.


வாடிக்கையாளர்களுக்கு எமது
தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

சூரியன் FM, சக்தி FM, சக்தி TV, சுவர்ண ஒலி, இலங்கை வானொலி வர்த்தக சேவை, வீரகேசரி, தினக்குரல், தினகரன், தினமுரசு ஆகிய சகல தமிழ் ஊடகங்களுக்கும், சகல ஆங்கில, சிங்கள பத்திரிகைகளுக்கும் நீங்கள் விளம்பரம் செய்ய வேண்டுமா? நாடுங்கள்...

S.K.ADVERTISERS

501/4, Hotel Ceylon Inn, Galle Road,
Wellawatte, Colombo - 06.
TP: 502566, 507473


## சக்தி TV சக்தி டி.வி. நிக்ழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | பெப்சி உங்கள் சொய்ஸ் | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | பாட்டுக்குப் பாட்டு | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்டினி | சக்தி வீக்கெண்ட் மெட்டினி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | திரைத் தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | மீண்டும் கோமாளிகள் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

யாழ்ப்பாணம்

# ராசி பலன்



**மேடம்:- அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

இராசியில் உள்ள சனி வக்கிரகதி நீங்கியது ஓர் அளவுக்கு ஆறுதல். இதுவரை காலம் தடைப்பட்ட காரியம் கைகூடும். பொருளாதாரம் தாராள மாகும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் அமைதியடையும். சாத்தியமாகக் கூடிய செயலை சிந்திக்கும். நல்ல எண்ணங்கள் தோன்றும். எதிரிகளால் தொல்லை இல்லை. குடும்பத்தில் சச்சரவு இருந்தாலும் விசுவாசம் குறையாது. காதலருக்குள் கருத்து மோதல் இருந்தாலும் அன்பு குறையாது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு.



**இடபம்:- கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசியில் உள்ள குரு வக்கிரகதியில் இருப்பதால் எடுத்த காரியங்களில் தடங்கல் வர வாய்ப்புண்டு. பொருளாதாரம் தடைப்படலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரர்களின் ஆதரவு இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் இருக்கும். உற்றார், உறவினருடன் கூடிக் கொண்டாடலாம். தாயின் தேகசுகம் நன்றாக இருக்கும். மனம் அமைதிப்படும். அடிக்கடி மனக் குழப்பம் வரவாய்ப்புண்டு. எதிரிகள் உதவி செய்யக்கூடும். குடும்பத்தில் அமைதி இல்லை. சண்டைகள் வரலாம். சில சமயம் கைகலப்பிற்கும் இடம் உண்டு. காதலர் வாழ்வில் புயல் வீசலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் செய்யும் இடத்தில் பூரண அமைதி நிலவும்.



**மிதுனம்:- மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இராசிக்குச் சனியின் பார்வையும் இராசி நாதனுக்கு குருவின் பார்வையும் கிடைப்பதால் எழுச்சியும் இல்லை. வீழ்ச்சியும் இல்லாத சம நிலையே இருக்கும். கையில் பணம் புழங்கும். சகோதரர்களுக்கு நீங்கள் உதவ வேண்டிய நிலை. வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத்தும். சொந்தக்காரருடன் உறவைப் பேணுவது உங்கள் பொறுப்பு. மனம் கட்டுப்பாடு இல்லாமல் அலையும். தீவிரமான எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் மறை முகமாக நாச வேலையில் ஈடுபடுவர். குடும்பத்தில் ஏனோ தானோ என்ற நிலை ஏற்படும். அமைதி குறையலாம். காதலர்களும் தங்களுக்குள் எச்சரிக்கையாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் அமைதியுண்டு.



**கடகம்:- புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசிக்கு சுக்கிரன், சூரியன், புதன் ஆகிய கிரகங்களின் பார்வை கிடைப்பது நல்ல பலனே! கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். உடன்பிறந்தவர்களின் உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். வாகனம் ஓட்டுவதில் கவனம் வேண்டும். சொந்தக்காரருடன் பகைவர இடம் உண்டு. மனதில் அமைதியும் இல்லை. திருப்தியும் இல்லை. எதிரிகள் கண்ணில் படுவார்கள். அவதானம் வேண்டும். குடும்பத்தில் ஒற்றுமை விசுவாசம் இருக்கும். காதலர்கள் மன வலிமையுடன் ஒற்றுமையாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிதா வழி உதவி இருக்கும். தொழிலில் போட்டி, பொறாமை இருக்கும். சமாளிப்பீர்கள்.



**சிங்கம்:- மகம், பூரம், உத்தரம் 1.**

இராசிநாதனுக்குக் குருவினதும் சனியினதும் பார்வை கிடைப்பது யோகமே. பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் இருக்கும். கல்வி முன்னேற்றப் பார்வையில் இருக்கும். சகோதர உதவி இருக்கும். உற்றார் உறவினருடன் சொந்தத்தைப் பாதுகாப்பது கடினமே. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். மனம், தெய்வீக நாட்டம் மிகுந்து இருக்கும். யதார்த்த நிலையில் செயல்படும். எதிரிகளால் தீங்கு இல்லை. சில சமயம் உதவி செய்வர். குடும்பத்தில் மன்மதனின் ஞாபகம் வரலாம். காதலர் வாழ்வில் இளந்தென்றல் வீசும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாணம் அமையும். தொழில் செய்யும் இடத்தில் உங்கள் சொல்லுக்கு வரவேற்பு இருக்கும்.



**கன்னி:- உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

இராசிக்குக் குருபகவான் சுக்கிரன் ஆகிய நல்ல கிரகங்களின் பார்வை பெறுவது அதிஷ்டமே. பொருளாதாரக் கஷ்டம் சில சமயம் ஏற்படலாம். கல்வியில் சற்றுப் பின்னடைவு தென்படும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்த பந்தங்களுடன் கூடிக் குலவி விருந்துண்ணலாம். மனதில் கற்பனை வளம் அளவுக்கு அதிகமாக இருக்கும். கற்பனையில் சுகம் காணும். எதிரிகள் பலமிழந்து செயலற்றுப் போவர். குடும்ப விசுவாசம் இருக்கும். குடும்ப இரகசியம் பாதுகாக்கப்படும். காதலர் வாழ்வில் வசந்தம் உண்டு. இது வரை இருந்த நோயும் விலகும். தூரப்பிரயாணம் அமையும். தொழிலில் போட்டி நிலவும். மதிப்பு இருக்கும்.




**துலாம்:- சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசியில் உள்ள செவ்வாயை சனியும், சூரியனும் நோக்குவது நல்லதல்ல. கடன் சுமை இருக்கும். கல்வியில் போதிய முன்னேற்றம் இல்லை. சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் இருக்கும். இனபந்துக்களின் ஆதரவு இருக்கும். மனம் கற்பனையில் கோட்டை கட்டி வாழ முற்படும். எதிரிகளால் தொல்லை இல்லை. விலகியே இருப்பர். குடும்பத்தில் பதற்றமும், சந்தேகமும், நம்பிக்கையற்ற நிலையும் இருக்கும். காதலர்கள் விஷப்பரீட்சையில் இறங்கக்கூடும். உடல் நிலையில் பெரிதாகப் பாதிப்பில்லை. பெற்றோருக்கு உதவி செய்யலாம். தொழிலில் அமைதியும் பதவி உயர்வும் ஏற்பட இடம் உண்டு.



**விருச்சிகம்:- விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசிக்குக் குருவின் பார்வை கிடைப்பது நலம். இராசி நாதன் செவ்வாய் செலவுத் தானமான பன்னிரண்டாம் வீட்டில் கெட்ட கிரக நோக்குப்பெறுவது தீயபலனே. பொருளாதாரம் தடைப்பட்டு வரும். சகோதரர்கள் பராமுகமாக இருப்பர். உறவினருடன் பகை கொள்ள இடம் உண்டு. வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். மனம் நல்ல ஆரோக்கியமான எண்ணங்களில் மூழ்கி இருக்கும். நேர் வழிப்பாதையில் செல்லும். எதிரிகள் செயலற்று தங்களுக்குள் முட்டி மோதி அழிந்து போவர். குடும்பத்தில் அன்பு நிலைத்து இருக்கும். காதலர்கள் இதய பூர்வநட்பை அனுபவிப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் யோகம் உண்டு.



**தனு:- மூலம், பூராடம், உத்தராடம் 1.**

இராகு, கேதுக்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் இருப்பதால் மேலும் அவர்கள் நட்பாய் இருப்பதால் நன்மை செய்வார்கள். இருந்தாலும் எச்சரிக்கை தேவை. பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் உதவுவார்கள். வீடு, வாகனம் தொல்லை தரும். உற்றார் உறவினரோடு பகை கொள்ள இடம் உண்டு. மனதில் அமைதி இல்லை. கெட்ட செயலைச் செய்யத் தூண்டும். எதிரிகள் தாக்கக் கூடும். எதிரிகள் பலம் பெற்று இருக்கிறார்கள். குடும்பத்தில் சச்சரவு நீங்கி அமைதி வரும். காதலர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் வளர்ச்சி உண்டு.



**மகரம்:- உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.**

இராசியில் சூரியன், புதனின் சேர்க்கையும் குருவின் பார்வையும் விசேஷமே. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுக்கு உங்கள் உதவி தேவை. சொந்தக்காரர் அன்பு பாராட்டுவர். வீடு, வாகனம் இலாபம் தரும். மனம் அமைதிப்படும். ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். தெய்வீக நாட்டம் வரும். எதிரிகள் தொல்லை இருக்கும். அம்மன் வழிபாடு செய்தால் விலகும். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலர் வாழ்வு கொண்டாட்ட மயம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அதிஷ்டம் உண்டு. பிரயாண ஆசை வரலாம். தொழில் போட்டி இருப்பினும் பதவியைக் காப்பாற்றுவீர்கள்.



**கும்பம்:- அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**

இராசியில் சுக்கிரன் இருப்பதால் இராசிநாதன் பலம் குன்றினாலும் குறையேதும் வரவிடமாட்டார். பணத் தட்டுப்பாடு இருக்காது. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களின் உதவி உண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரரும் அயலவரும் ஆதரவு தருவார்கள். மனம் தீவிரமாக இயங்கும் மனதைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியம். எதிரிகள் புதிய பலம் பெறுவார்கள். அவதானம் வேண்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலர்களின் செயல்பாடு இதய சுத்தி உள்ளதாக இருக்கும். தேக சுகம் நன்றாக இருக்கும். குறுந் தூரப்பிரயாணம் அமையும். தொழில் யோகம் உண்டு.



**மீனம்:- பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசிக்குச் சூரியனின் பார்வை. இராசிநாதனோ வீரியஸ்தானத்தில் செவ்வாயின் பார்வையுடன் ஓர் அளவுக்கு யோகம் உண்டு. பணத்தட்டுப்பாடு நிலவும். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரர்களால் உதவி இருக்காது. வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. அயலார், உறவினர் ஒத்துழைப்பு தருவர். மனம் பூரண அமைதியடையும். தெய்வீக எண்ணங்கள் தோன்றும். சில சமயம் உலகமாயை (ஆசை) வசப்படும். எதிரிகள் தீமை செய்யமாட்டார்கள். அவர்கள் நண்பர்களாகக் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். காதலர் வாழ்வில் அர்த்தம் இருப்பதை உணர்வார்கள். தேக சுகம் சிறிது பாதிக்கலாம். தொழில் விருத்தியுண்டு.

பொ.சந்திரன்

14—01—2001 இருந்து 20—01—2001 வரை

# இரண்டு தலை தெய்வத்தின் பெயர் சூடிய மாதம் ஜனவரி

*2001ஆம் ஆண்டு இப்போது பிறந்துவிட்டது. இந்த ஆண்டின் முதலாவது மாதமான ஜனவரியின் முதலாம் திகதியும் பிறந்து பதினான்கு நாட்களாகின்றன.*

*இந்த ஜனவரி மாதம் தோன்றியது எப்படி என்று நாம் தெரிந்து கொள்வது நன்றல்லவா? அதைப் பற்றிய விவரம் இதோ:*

*உரோமானியர்கள் தம் தெய்வங்களின் பெயர்களை வைத்தே முதலில் வருடத்தைக் கணக்கிட்டு வந்தார்கள். அப்போதைய பஞ்சாங்கத்தில் ஓர் ஆண்டுக்கு பத்து மாதங்களே இருந்தன. அச்சமயம் ஜனவரி மாதம் என்று ஒன்று இருக்கவில்லை.*

*மார்ச் மாதம்தான் ஆண்டின் முதலாவது மாதமாக அழைக்கப்பட்டது. தங்கள் மூதாதையர் என்பதாகக் கருதப்பட்ட "மார்ஸ்" தெய்வத்தின் பெயர் இது. முதலாவது மாதத்திற்கு அந்த தெய்வத்தின் பெயரைத்தான் வைக்க வேண்டும் என்று அவர்கள் கருதியதால் அப்பெயருள்ள மாதம் மார்ச் என்றாகியது.*

*இப்படியே மற்ற மாதங்களும் இப்போதுள்ள முறையிலிருந்து முற்றும் மாறுபட்டிருந்தன.*

*ஜூலிய சீஸர் கி.மு.46இலிருந்து வருடக் கணக்கைத் திருத்தி அமைத்தார். இத்திருத்தத்துக்குப் பின் கிரிகோரி என்ற 13ஆம் பரிசுத்த பாப்பரசர் ஜனவரியை வருடத்தின் முதல் மாதமாகக் கணித்தார்.*

*நாம் எக்காரியத்திற்கும் முதலில் விநாயகரை வணங்குதல் போல உரோமரும் ஜானஸ் என்ற தெய்வத்தையே முதல் தெய்வமாகக் கருதினார்கள். அத்தெய்வத்திடம் வேண்டிக் கொண்டுதான் எக்காரியத்தையும் செய்யத் தொடங்கினார்கள்.*

*இந்த தெய்வத்திற்கு முன்புறத்திலும், பின்புறத்திலுமாக இரு தலைகள் இருந்தன. ஒரு கையும் இருந்தது. அக்கையில் ஒரு திறவுகோல் இருந்தது. இந்தத் தெய்வமே உலகத்தைக் காப்பாற்றுகிறதென்றும் தங்களையும் இத்தெய்வம் காப்பாற்றுகிறதென்றும், இத்தெய்வத்தினிடம் அனுமதி பெற்றால் நினைத்த காரியங்கள் கைகூடும் என்றும் உரோமர்கள் எண்ணினார்கள்.*

*ஆகையால் இந்த இரு தலைத் தெய்வமாகிய ஜானஸ் தெய்வத்தின் பெயரை வருடத்தின் முதல் மாதத்திற்கு இட்டழைத்தார்கள். ஜானஸ் என்ற பெயரே கால அடைவில் ஜனவரி ஆகியது.*

*இம்முறையைப் படிப்படியாக எல்லா நாடுகளும் பின்பற்றத் தொடங்கின. உரோமர்கள் மாதங்களுக்கு இட்ட பெயரே இன்று மாறியும் மாறாமலும் ஆங்கில மாதங்களின் பெயர்களாக விளங்கி வருகின்றன.*

*—மாத்தளை அருணேசர்*

# இடைஞ்சல் செய்த நடைபாதை கடைகள் அனைத்தும் உடைப்பு!

## 'சுடர்ஒளி ' படங்களுடன் வெளியிட்ட செய்திக்கு பலன்

கொழும்பில் 'சுடர்ஒளி' சுட்டிக்காட்டிய குறைபாடு ஒன்று நீக்கப்பட்டுவிட்டது.

அதாவது பொரளைச் சந்தியில் பேஸ்லைன் வீதி ஆரம்பமாகும் பகுதியில் இருந்த 500க்கு மேற்பட்ட நடைபாதைக் கடைகள் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டு விட்டன.

இந்தக்கடைகள் நடைபாதை ஊடாக மக்கள் செல்வதற்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தன. குறிப்பாக இளம் பெண்கள் மைனர் பேர்வழிகளின் சில்மிஷங்களுக்கும் தொல்லைகளுக்கும் இலக்காகி வந்தனர்.

இவற்றைச் சுட்டிக் காட்டி 'சுடர்ஒளி' கடந்த அக்ரோபர் 15ஆம் திகதி படங்களுடன் செய்திக் கட்டுரை வெளியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இப்போது காரியம் நடந்து விட்டது.

சுமார் 20 வருடங்களுக்கும் மேலாகச் சட்டவிரோதமாக நடைபாதையில் இயங்கிவந்த கடைகளைப் பொலிஸாரின் உதவியுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் புல்டோசர்கள் கொண்டு இடித்துத்தள்ளினர்.

கடைக்காரர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் அதைச் சமாளித்து நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீரவின் உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இரண்டு புல்டோசர்களையும் சபை ஊழியர்கள் 25 பேரையும் கொண்டு சட்டவிரோதக் கட்டடங்களின் கண்காணிப்புப் பிரிவின் பணிப்பாளர் திருமதி இந்திரசிறி இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டார்.

நடைபாதைக்கடைச் சொந்தக்காரர்கள் கோபாவேசத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் அசம்பாவிதம் ஏதும் நடைபெறவில்லை.

நடைபாதைக் கடைக்காரர்கள் பலர் விபசாரிகளின் இடைத்தரகர்களாகச் செயற்பட்டுவந்தனர் என்று பல முறைபாடுகள் கிடைத்தன.

நடை பாதைக் கடைக்காரர்கள் விபசாரிகளைத் தமது கடைகளில் பணியாற்றுபவர்களாகப் பாவனை செய்தே விபசாரிகளின் தொழிலுக்கு உதவி வந்தனர் என்று கூறப்படுகிறது.

நடைபாதைக் கடைகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதோடு விபசாரிகள் தொல்லையும் அப்பகுதியில் பெருமளவில் நீங்கிவிட்டது. நடைபாதைகளில் நடந்து செல்வது சுலபமாகி விட்டது.

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் நகர அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிப்பவர்களில் பலர் 'சுடர்ஒளி'யின் மக்கள் சேவை மகத்துவத்தையும் நன்றியுடன் நினைவு கூருகிறார்கள்.

– செல்வா.





மேலே: 'சுடர் ஒளி' முன்னர் பிரசுரித்த நடைபாதைக் கடைகளின் படம்

கீழே: நடைபாதைக் கடைகள் இப்போது உடைக்கப்பட்ட நிலையில்.

# சிவத் தமிழ்ச் செல்வி ஒரு தியாகச் சுடர்

மாதருள் மாணிக்கம் எங்கள் சிவத் தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி.

பவளவிழாக் கண்ட அன்னை. தங்கமான அம்மா தங்கம்மா அப்பாக்குட்டி.

அவரை நினைக்கும் போதெல்லாம் அறிவுக் கடலான பழம்பெரும் பெண்பாற் புலவர் ஒளவையார் எம் கண்முன்னே நிற்பார்.

ஆத்தி சூடி முதலான அறநெறி நூல்களைத் தந்த ஒளவையார் தமக்கு இளமை வேண்டாம், திருமண வாழ்வு வேண்டாம் என்று எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தமது பக்தியாலும் புலமையாலும் சைவமும் தமிழும் வளர்த்து ஊர் ஊராகச் சென்று மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்த அன்னை அவர்.

அவருடைய சொல்லுக்குத் தமிழகத்து மூவேந்தர்கள் கூடக் கட்டுப்பட்டார்கள்.

ஒளவையாரை இன்று நாம் எங்கள் மத்தியில் இருக்கும் தங்க அம்மாவில் காண்கிறோம்.

அவர் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் வாழும் உலக நாடுகள் அனைத்துக்கும் சென்று தமது ஆற்றொழுக்கான ஆழமிகு சமய இலக்கியச் சொற்பொழிவுகளால் அனைவரையும் தன்பால் ஈர்த்து நல்வழி காட்டி வருகிறார். தனி அச்சகம் வைத்து அரிய பல நூல்களை வெளியிட்டு அவர் அறிவுப் பணியும் ஆற்றி வருகிறார்.

தனது சொந்த ஊரான தெல்லிப்பழையில் 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தில் 35 ஆண்டுகளுக்கு முன்னர் பங்குகொண்டு பின்னர் நிர்வாகசபைத்தலைமைப் பொறுப்பை ஏற்று இன்று அந்த ஆலயத்தை எல்லா வசதிகளும் கொண்ட இலங்கையின் பெயர் பெற்ற முன்னணி ஆலயங்களில் ஒன்றாக்கியிருக்கிறார்.

ஆலயத்தின் அமோக வருமானத்தையும் அன்பர்களின் மனமுவந்த நன்கொடைகளையும் கொண்டு அன்னை பல அறப்பணிகளை ஆற்றிவருகிறார்.

ஏழைகள், நோயாளிகள், ஆதரவற்றவர்கள், கல்வி அறிவற்றவர்கள், அங்கவீனர்கள் எல்லோரும் பயன் அடைந்து வருகிறார்கள்.

ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்காக 1982இல் இருந்து அன்னை நடத்தி வரும் துர்க்காராம் மகளிர் இல்லத்தில் இருந்தவர்களில் மூவர் பல்கலைக்கழகக் கல்வி கூடக்கற்று வருகின்றனர். இருவர் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

அன்னை நடத்தி வரும் அன்னையர் இல்லத்தில் பல வயோதிபர்கள் மனமகிழ்ச்சியோடு பயனுள்ள வழியில் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

ஆய்வு நூலகம், ஆய்வுத் துறையில் ஈடுபடும் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

அந்தணச் சிறுவர்களுக்குக் குருகுலப் பயிற்சி, வேதாகமப்பயிற்சி எல்லாம் நடத்தப்படுகின்றன.

பொது நிறுவனங்கள், மருத்துவ நிலையங்கள், ஆலயங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகம், முதியோர் இல்லங்கள் முதலானவற்றிற்கு அறக்கொடைகளை அன்னை வழங்கி வருகிறார்.



அன்னையின் அருமை பெருமைகளை உணர்ந்து அரசு அன்னைக்கு கலாசூரிப்பட்டம் வழங்கி அவருக்கு மதிப்புச் செய்திருக்கிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அன்னைக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கி தனக்குப் பெருமை தேடிக் கொண்டுள்ளது.

சிவத் தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அறிவில் சிறந்தவர், பக்தியில் முதிர்ந்தவர், சேவையில் உயர்ந்தவர், தியாகத்தில் சுடர்.

நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்
உங்கள் கனவில்
மின்னிய தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால்
மின்னட்டும்
NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellery

RTK GROUP
HARDWARE STORES
CEMENT, LIME,
ASBESTOS STEEL,
BUILDING MATERIALS
VIDEO VISION
TAMIL, ENGLISH,
DRAMA CASSETTES,
VIDEO CD'S
& AUDIO CASSETTES
NEW BRANCH
TAMIL, ENGLISH, HINDI
DRAMA CASSETTES,
VIDEO CD'S
& AUDIO CASSETTES
COMMUNICATION
LOCAL, I.D.D, FAX,
PHOTO COPY
CONNECTING CALLS
TRANSPORT
334, Wolfendhal Street,
Colombo-13.
Tel: 074-517631,
01-597677.
57,57/1, Manning Place,
Colombo-06.
Tel: 505059, 074-515083.

நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்
உங்கள் கனவில்
மின்னிய தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால்
மின்னட்டும்
NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellery

இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 ஜனவரி 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.